COMPLIMENTARY COPY
LIBRARY 13 AUG 2012 PERIODICALS DIVISION JAFFNA




YARL OSAI
யாழ் ஓசை
வார இதழ்
Regested No. QD/83/News/2012




ஓசை : 02 நாதம் : 18 வெள்ளிக்கிழமை 02.03.2012 - 08.03.2012 பக்கங்கள் : 16 விலை ரூபா : 15

# 552 சிறார்கள் உட்பட 8 ஆயிரம் பேர் இறுதி வன்னி யுத்தத்தின்போது பலி

**மே 2009 இல் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்ட இலங்கையின் உள்நாட்டு யுத்த காலப்பகுதியின் இறுதி நான்கு ஆண்டுகளில் நாட்டின் வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களில் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் தொடர்பான புள்ளி விபரங்கள் அடங்கிய உத்தியோகபூர்வ அறிக்கையை இலங்கையின் குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.**

'முக்கிய சம்பவங்கள் தொடர்பான பதிவு - 2011' [Enumeration of Vital Events-2011] எனப் பெயரிடப்பட்டு வெளியிடப்பட்ட 80 பக்க அறிக்கையில் மே 2009 இல் யுத்தம் நிறைவுக்கு வருவதற்கு முன் நான்கு ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய ஐந்து மாவட்டங்களில் மொத்தம் 22 329 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் குறிப்பாக இறுதி ஐந்து மாத கால யுத்தத்தில் 8000 வரையானவர்கள் தமது உயிர்களை இழந்துள்ளதாகவும் (2ஆம் பக்கம் பார்க்க)


நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் அரசிற்கு ஆதரவு தெரிவித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னர் செயலக ஊழியர்கள் ஜனாதிபதிக்கு ஆசி வேண்டி யாழ். மூத்த விநாயகர் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டிருப்பதை படத்தில் காணலாம்.
(படப்பிடிப்பு : வண்ணார்பண்ணை)

## முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு ஏழு பாடசாலைகள் வாக்களிப்பு நிலையங்களாக தெரிவு

### உதவி அரசாங்க அதிபர் ஜெயக்காந் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் இம்மாதம் 24 ஆம் திகதி நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலின் போது மக்கள் வாக்களிப்பதற்கு வசதியாக வாக்களிப்பு நிலையங்கள் நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வாக்களிப்பு நிலையங்களாக ஏழு பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக உதவி அரசாங்க அதிபர் ஜெயக்காந் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டிருந்த யுத்த சூழ்நிலையைத் தொடர்ந்து வடமாகாணத்திலுள்ள (2ஆம் பக்கம் பார்க்க)




## கரைச்சியில் சமூக சீர்கேடுகளை தவிர்க்கும் வகையில் மூடப்பட்டிருக்கும் வர்த்தக நிலையங்களை அகற்றுக

### கரைச்சி பிரதேசசபைத் தலைவர்

யாழ்ப்பாணம்,

கரைச்சி பிரதேசத்தில் அம்பாள் குளப் பகுதியில் சமூக சீர்கேடுகளை தவிர்க்கும் வகையில் மூடப்பட்டிருக்கும் சிறு வர்த்தக நிலையங்களை அகற்றுமாறு தெரிவித்துள்ள பிரதேச சபைத் தலைவர் மேற்படி கடைகளை அகற்றாத பட்சத்தில் மக்களின் நலன் கருதி சபையின் விதி முறைகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேசத்தில் அம்பாள் குளப் பகுதியில் இ.போ.ச டிப்போவுக்கு அருகாமையில் அவசர அவசரமாக பொது மக்கள் வர்த்தக நிலையங்களை அமைத்து வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தனர். **(2ஆம் பக்கம் பார்க்க)**

## கச்சதீவு உற்சவத்திற்கு யாத்திரிகர்கள் நாளை முதல் செல்ல அனுமதி

(நெடுந்தீவு நிருபர்)

கச்சதீவு அந்தோனியார் வருடாந்த உற்சவத்தை ஒட்டிய ஏற்பாடுகளை அதிகாரிகள் அங்கு மேற்கொண்டு வருவதுடன் யாத்திரிகர்கள் நாளை சனிக்கிழமை முதல் அங்கு செல்வதற்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.

நெடுந்தீவிலிருந்து நாளை காலை 9.30 மணிக்கு ப.நோ கூட்டுறவு சங்க படகும் அதனைத் தொடர்ந்து அவர்களுக்கென வழங்கப்பட்ட நேர அறிக்கையின்படி ஏனைய படகுகளும் பயணிகளை கொண்டு செல்லும் பணியில் ஈடுபடவுள்ளன. சனிக்கிழமை நண்பகல் வரை நெடுந்தீவு- கச்சதீவு போக்குவரத்து இடம்பெறும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 4.30 மணிக்கு மீண்டும் ப.நோ கூட்டுறவுச் சங்கப் படகு பயணிகளை (2ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் இடம்பெற்ற மீறல்களுக்கு பொறுப்புக் கூறுதல் அவசியம்

### ஐரோப்பிய ஒன்றியம்

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இலங்கைக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் நேற்று உரையாற்றிய டென்மார்க் வெளிவிவகார அமைச்சர் வில்லி சொவண்டல் இவ்வாறு கூறியுள்ளார்.

அத்துடன் ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கையுடன் இலங்கை இணங்கிப் போக வேண்டும் என்றும் இலங்கைக்கு எடுத்துக் கூற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்தகால மீறல்களுக்கு பொறுப்புக் கூறுதல் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் உயர்ந்த நிலையில் (2ஆம் பக்கம் பார்க்க)






# மன்னார் தினச்சந்தை மீது தீ வைத்தமை வன்முறையினை தூண்டிவிடும் சதி!-

## மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை





மன்னார் தினச்சந்தை வியாபார நிலையம் நேற்று அதிகாலை எரியூட்டப்பட்ட சம்பவம், மன்னார் நகர சபைக்கும் வர்த்தகர்களுக்கும் இடையில் வன்முறையினை தூண்டிவிடும் ஒரு செயலாகவே காணப்படுவதாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்கள் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மன்னார் மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர்.1990 ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் மீண்டும் மன்னாரில் வந்து தமது குடியேற்றத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தை பொறுத்த வரையில் எந்தவொரு வேலைத்திட்டமாக இருந்தாலும் இம்மக்கள் இன மத வேற்றுமையின்றி சேவையாற்றி வருகின்றனர். கடந்த வருடம் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலின்போது மன்னார் நகர சபையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது.

இந்த நிலையில் குறித்த சபை மன்னார் மாவட்டத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. கடந்த காலங்களில் வாராந்த சந்தையாக குறித்த சந்தை காணப்பட்டது. நாட்டில் ஏற்பட்டிருந்த யுத்த சூழ்நிலையின் காரணமாக தினச்சந்தையாக காணப்பட்டது.

இதன்போது தமிழ், முஸ்லிம் வர்த்தகர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதிகளவான வர்த்தகர்கள் தென் பகுதியைச் சேர்ந்தவர்களாக காணப்பட்டனர்.

இந்த நிலையில் குறித்த சந்தையை மீண்டும் வராந்த சந்தையாக மாற்ற மன்னார் நகர சபை நடவடிக்கைகளை மேற்கொண்டது. குறித்த வியாபாரிகளை சந்தையினை விட்டு அகற்ற நகர சபை கால அவகாசத்தினை வழங்கி வந்தது.

இந்த நிலையில் மன்னார் நகர சபைக்கும் குறித்த வர்த்தகர்களுக்கும் இடையில் வன்முறையினை தூண்டி மன்னார் மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இடையில் உள்ள ஒற்றுமையினை சீர் குலைத்து, இனங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்த சில தீய சக்திகள் முயற்சித்துள்ளன .

மன்னார் நகர சபையின் வேலைத்திட்டத்தினை முடக்கவும் சில தீய சக்திகள் முயற்சிக்கின்றன. எனவே குறித்த சதியை நடத்தியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என அவ் ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கரைச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருத்தமற்ற இடத்தில் கடைகள் அமைக்கப்பட்டதால் வியாபாரமின்மை காரணமாக நாளடைவில் சில வர்த்தக நிலையங்கள் மூடப்பட்ட நிலையிலுள்ளன. வியாபாரமின்மையால் மூடப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களில் சமூக விரோதச் செயல்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதனால் மக்களின் நலன்கருதி இந்த நிலயங்களை அகற்ற வேண்டிய நிலை பிரதேச சபைக்கு தற்பொழுது ஏற்பட்டுள்ளது.

எனவே இந்த நிலையங்களை அவ்விடத்திலிருந்து அகற்றி பிரதேச சபைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தெரிவித்துள்ள பிரதேச சபைத் தலைவர் குறிப்பிட்ட தினங்களுக்குள் கடைகள் அகற்றப்படாது விட்டால் பிரதேச சபையின் விதிமுறைகளுக்கமைய கடைகள் அகற்றப்படுமென்று கூறியுள்ளார்.

# ஆசிரியரின் தாக்குதல் காரணமாக மாணவன் வைத்தியசாலையில் அனுமதி

(காவலூர் நிருபர்)

யாழ். நகரிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் மாணவர்களை ஆசிரியர் அடித்ததனால் மாணவர் ஒருவர் நேற்று முன்தினம் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது-

யாழ். நகரிலுள்ள பிரபல கல்லூரி ஒன் றில் ஆசிரியர் வகுப்பறைக்குள் புகுந்து அங்கிருந்த அனைத்து மாணவர்களுக்கும் அடித்துள்ளார். பின்னர் அந்த மாணவர் களுக்கு ஆசிரியர் ஒருவர் கற்பித்துக் கொண்டிருக்கும்பொழுது மீண்டும் வந்து அடித்துள்ளார்.

அன்றைய தினம் அடிவாங்கிய மாணவர்களில் ஒருவரான வேலணை மேற்கைச் சேர்ந்த சி. கஜீபனை (வயது 12) அவரது பெற்றோர் நேற்று முன்தினம் அதிகாலை உடல் சோர்வுற்று மயங்கி விழுந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். இவரின் முதுகில் அடிபட்ட பெரிய தழும்பு காணப் படுவதாகப் பெற்றோர் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## ஆசிரியர் பற்றாக்குறையுடன் இயங்கும் துணுக்காய் கல்வி வலய பாடசாலைகள்

(கிளிநொச்சி நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள துணுக்காயள் கல்வி வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறையும் பாடசாலைகளில் வளப் பற்றாக்குறைகளும் அதிகரித்துள்ளன .

மேற்படி வலயத்தில் உள்ள 55 பாடசாலைகளில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு தரம் ஒன்று முதல் ஐந்து வரையிலான வகுப்பு களுக்கு ஆசிரியர்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது. கோட்டகட்டிய குளம் அ.த.பாடசாலையில் கணித பாடத்திற்கு கடந்த பல மாதங்களாக ஆசிரியர் நியமிக்கப்படவில்லை. சிறாட்டிக்குளம் அ.த.க.பாடசாலையில் அதிபரும் இல்லாமல் ஒரு ஆசிரியருடன் இயங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் பல வருடங்களாக செயலாளரின் கீழியங்கி வந்தது. மக்கள் பிரதிநிதிகள் சபையின் அங்கம் வகிக்காததனால் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படுவதில் தடங்கலும் காலதாமதமும் ஏற்பட்டுவந்தது. இந்த நிலை குறித்து மக்கள் மத்தியில் கசப்புணர்வு நிலவி வந்தது.

யுத்தத்திற்கு முடிவு கட்டப்பட்டதைத் தொடர்ந்து முதல் முதலாக யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெற்று உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டு அவர்களின் நிர்வாகத்தின் கீழ் சபை இயங்கிவருகிறது. அடுத்தகட்டமாக கிளிநொச்சி மாவட்டத்திற்கான உள்ளூராட்சி தேர்தல் இடம்பெற்று உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

முல்லத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரை இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியமர்த்துவதில் ஏற்பட்ட கால தாமதத்தினாலும் புதைக்கப்பட்ட மிதிவெடிகள் எடுப்பதில் ஏற்பட்டிருந்த காலதாமதத்தினாலும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் பிற்போடப்பட்டு வந்தது.

தற்பொழுது மிதிவெடிகள் அகற்றப்பட்டு மக்கள் மீள்குடிமர்த்தப்பட்டத்தைத் தொடர்ந்து உள்ளூராட்சி சபைக்கான தேர்தலை நடத்த அரசாங்கம் முன்வந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இம்மாதம் 24ஆம் திகதி நடைபெறவிருக்கும் தேர்தலின்போது புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வசிக்கும் மக்கள் வாக்களிக்க வசதியாக ஏழு வாக்களிப்பு நிலையங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை, இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், விசுவமடு மகா வித்தியாலயம், பாரதி வித்தியாலயம், உடையார்கட்டு மகாவித்தியாலயம், வள்ளிபுரம் கனிஸ்ட உயர்தர வித்தியாலயம், ஆகிய ஏழு பாடசாலைகள் வாக்களிப்பு நிலையங்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

## சந்தைகளின் மரக்கறி நிலைவரம்

| | யாழ். மத்திய சந்தை | திருநெல்வேலி சந்தை |
|---|---|---|
| கத்தரிக்காய் | 40.00 | 30.00 |
| புடலங்காய் | 60.00 | 50.00 |
| கரட் | 70.00 | 60.00 |
| பாவற்காய் | 60.00 | 50.00 |
| கோவா | 30.00 | 20.00 |
| பயிற்றங்காய் | 80.00 | 70.00 |
| தக்காளி | 25.00 | 15.00 |
| பச்சை மிளகாய் | 70.00 | 60.00 |
| வெண்டிக்காய் | 70.00 | 60.00 |
| பொன்னாங்காணி | 20.00 | 15.00 |
| கீரை | 20.00 | 15.00 |
| வல்லாரை | 08.00 | 06.00 |
| பீட்றுட் | 40.00 | 30.00 |
| லீக்ஸ் | 80.00 | 70.00 |
| சின்னவெங்காயம் | 60.00 | 50.00 |
| பி. வெங்காயம் | 70.00 | 60.00 |
| மரவள்ளிக்கிழங்கு | 40.00 | 30.00 |
| பூசணிக்காய் | 50.00 | 40.00 |
| வாழைக்காய் | 50.00 | 40.00 |
| கறி மிளகாய் | 60.00 | 50.00 |
| போஞ்சி | 70.00 | 60.00 |
| தேசிக்காய் | 70.00 | 60.00 |
| கருணைக்கிழங்கு | 80.00 | 70.00 |
| உருளைக்கிழங்கு | 70.00 | 60.00 |
| முள்ளங்கி | 40.00 | 30.00 |
| முருங்கக்காய் | 500.00 | 400.00 |
| | | (காவலூர் நிருபர்) |

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்க வேண்டும்.

மனித உரிமை மீறல்களுக்கு தண்டனை வழங்குதல் தீர்க்கப்படாமல் நிலுவையில் உள்ளது. இதற்குப் பதிலளிக்கப்படாது போனால் அடுத்த தலைமுறைகளுக்கு கடத்தப்படும். எந்த நாடோ எந்த சமூகமோ இதை ஏற்க முடியாது. இலங்கை விடயத்தில் இது உண்மை.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நடைமுறைகளுக்கு பொறுப்புக் கூறுதல் மிகவும் முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறது. இலங்கை நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தவும் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையுடன் இணங்கிச் செயற்படவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று நாம் நம்புகிறோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை கூட்டத்தொடரில் உரையாற்றிய தென்னாபிரிக்கப் பிரதிநிதி, அனைத்துலக உறவுகளுக்கான பிரதி அமைச்சர் மரியஸ் பிரான்ஸ்மன், இலங்கை அரசாங்கம் வெளியிட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை தமது அரசாங்கம் கவனத்தில் எடுத்துள்ளதாகவும் அதில் சாதகமான பல பரிந்துரைகள் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## கச்சதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றி இறக்கும்.7 ஆயிரம் யாத்திரிகர்கள் இலங்கை இந்தியாவிலிருந்து அங்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. பொதுமக்கள் தமக்குரிய ஒரு நாளுக்கான உணவு, குடிதண்ணீர் என்பவற்றை எடுத்துவருமாறு கேட்கப்பட்டுள்ளனர். கடற்படையினரும் மக்களுக்கு உணவுகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கடைசி நாளான ஞாயிற்றுக்கிழமை சுமார் 4 ஆயிரம் உணவுப்பொட்டலங்களை கடற்படையினர் வழங்கவுள்ளதாக தெரிவருகின்றது. உற்சவம் நிறைவடைந்தவுடன் மக்கள் தமது இடங்களுக்கு திரும்பிவிட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இறுதி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடப்பட்டுள்ளது.

குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது EVE 2011 தொடர்பான மதிப்பீட்டு நடவடிக்கைகளை வடக்கு மாகாணத்தில் ஜூன் 10 தொடக்கம் ஆகஸ்ட் 15 வரை மேற்கொண்டது. வயது போனவர்கள் அல்லது நோயாளிகளின் இறப்பு, இயற்கை அழிவு, விபத்து போன்றவற்றால் ஏற்பட்ட இறப்பு, கொலை, தற்கொலை, யுத்த நடவடிக்கைகளின் போது ஏற்பட்ட உயிரிழப்புக்கள் இறப்பிற்கான காரணம் அறியப்படாத சம்பவங்கள் என இந்த அறிக்கையில் இறப்புக்கள் பல்வேறு விதமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

நோயால் இறந்தமை, முதியவர்களின் இறப்பு, இயற்கை அழிவுகளின் போது உயிரிழந்தமை போன்றவை இயற்கை மரணத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. விபத்து, கொலை, தற்கொலை தீவிரவாத நடவடிக்கையால் கொல்லப்பட்டமை போன்றவற்றை 'ஏனைய இறப்புக்கள்' என்ற வகைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எனினும் 2009 இல் இறந்தவர்களில் 71 சதவீதமானவர்கள் அசாதாரண சூழ்நிலையின் போது தமது உயிர்களை இழந்துள்ளதாகவே அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் 2009 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட மற்றும் பிற்பட்ட காலப்பகுதியில் மரணித்தவர்களில் பெரும்பாலானவர்கள் இயற்கை காரணங்களால் இறந்ததாகவே EVE -2011 அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2005-2009 காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் மேற்குறிப்பிட்ட பல்வேறு காரணங்களாலேயே 22239 பேர் இறந்துள்ளனர். ஆனால் இவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் அதாவது கிட்டத்தட்ட 11172 பேர் வரை 2009ஆம் ஆண்டில் இறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2009 இல் 7934 பேர் 'ஏனைய காரணங்களால்' மரணித்துள்ளனர் எனவும் 2523 பேர் இயற்கை மரணத்தை அடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறிலங்காவில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் கொல்லப்பட்ட 6858 பேரில் 10 வயதுக்குக் குறைந்த 552 சிறார்களும் உள்ளடங்குகின்றனர். இதில் உள்ளடக்கப்படாத 2635 பேர் காணாமற் போயுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் நிழல் நிர்வாகத்தின் தலைநகராக விளங்கிய கிளிநொச்சி மாவட்டத்திலேயே ஜனவரி மே 2009 வரை அதிகம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். கிளிநொச்சியில் 2614 பேரும் முல்லைத்தீவில் 1576 பேரும் யாழ்ப்பாணத்தில் 1273 பேரும் வவுனியாவில் 1047 பேரும் மன்னாரில் 348 பேரும் இறந்துள்ளதாக குடிசன மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2009 இல் இடம்பெற்ற மரணங்களில் அதிகம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலேயே இடம்பெற்றுள்ளதாக இவ் அறிக்கை மூலம் அறியமுடிகிறது. ஆனால் இறந்தவர்களில் புலி உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் பொது மக்களின் எண்ணிக்கை போன்றவற்றை இவ் அறிக்கை வரையறுத்துக் காட்டவில்லை.

யுத்தம் தீவிரம் பெற்றிருந்த 2009 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களிலும் கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை தொடர்பில் இலங்கை குடிசன மதிப்பீட்டு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கைக்கும் அனைத்துலக மனித உரிமைகள் அமைப்பால் வெளியிட்ட புள்ளிவிபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கைக்கும் இடையில் நீண்ட வேறுபாடு உள்ளது. அதாவது 2009 காலப்பகுதியில் 40000 வரையானவர்கள் கொல்லப்பட்டதாக அனைத்துலக மனித உரிமை அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

வடக்கு மாகாணத்தில் 997 754 பேர் உள்ளதாகவும் இவர்களில் 934 392 பேர் இலங்கை தமிழர்கள் எனவும் EVE2011 அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் 21860 சிங்களவர்களும் 32659 முஸ்லிம்களும் வாழ்வதாக அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் ஐந்து மாவட்டங்களிலும் இலங்கைத் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். வடக்கு மாகாணத்தில் வாழும் சிங்களவர்களில் 75 சதவீதமானவர்கள் வவுனியா மாவட்டத்தில் வாழ்வதாகவும் முஸ்லிம்களில் பெருமளவானர்கள் மன்னார் மாவட்டத்தில் வாழ்வதாகவும் அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

இலங்கையின் குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் இறுதியாக 1981 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம் வடக்கு மாகாணத்தின் சனத்தொகை 1109404 ஆக இருந்தது. இலங்கையில் 30 ஆண்டு காலமாகத் தொடரப்பட்ட யுத்தத்தில் 100,000 வரையான மக்கள் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாவிகளின் மீட்பரைத் தியானிப்போம்

## மிகுந்த ஆசை பாவத்தினை விளைவிக்கும்

ஆசை என்பது மனிதனுடைய வாழ்வோடு பின்னிப் பிணைந்த ஓர் விடயமாகவே காணப்படுகின்றது.



இவ் ஆசையின் விளைவாக ஆதிப் பெற்றோரும் இறைவனுடனான உன்னத இறையுறவினை இழந்தனர். இதிலும் மேலாக பழைய ஏற்பாட்டிலும் சரி புதிய ஏற்பாட்டிலும் சரி ஆசையின்பால் அழிவினைக் கண்டு கொண்டவர்கள் பலரினை நாம் காணக்கூடியதாக உள்ளது.

அந்த வகையில் ஒரு மனிதன் பிறந்த காலம் முதல் இறக்கும் வரை பல ஆசைகள் காணப்படும். ஆனால் அந்த ஆசைகள் யாவற்றினையும் நன்கு உணர்ந்து அவற்றைக் கட்டுப்படுத்தி செயற்படும் காலம் தான் இத்தவக்காலம். ஏனெனில் ஆசைகள் பலவற்றினை ஒறுத்து செப முயற்சிகளில் ஈடுபட்டு ஆன்மீகப் பாதையில் சென்று, இழந்த இறையுறவினைப் பெற்றுக் கொள்ள இறைவன் எமக்களித்த காலமே இக்காலம்.

எனவே, நாம் அனைவரும் எமது சூழல், பொருளாதார நிலைமை மற்றும் இயலுமை இயலாமை, வயது போன்றவற்றினை கருத்திற்கொண்டு செயற்படுவோமேயானால் ஆசை எம்மை ஒருபோதும் ஆட்கொள்ளாது. மாறாக மனிதனின் செயற்பாட்டில் ஆசைகள் அதிகமாவதால்தான் அவன் தீயவற்றுக்குள் மூழ்கடிக்கப்பட்டு இறையுரிமையை இழந்துவிடும் நிலை ஏற்படு கிறது. இத்தகைய நிலையிலிருந்து விடு பட நாம் அனைவரும் எம் ஆசைகளைக் கட்டுப்படுத்திவாழ முயற்சிப்போம். அப்போது இறைமாட்சியும் நம் ஒவ்வொருவரிலும் மலரும்.

ஜெ. அனுஸ்

மறைக்கல்வி ஆசிரியர்

யாழ் ஓசை
சிறு விளம்பரம்
தேவை
40,000/- தொழிலுக்கேற்ப சம்பளத்திற்கு [illegible] வேலை [illegible] மன்னார் வீதி, புத்தளம். 077-6165099



# கேட்டியுளே சங்கதி

## கோடிப்புறத்துக்குப் போகும் விழாக்கள்

கலைகளையும் தமிழர் பண்பாட்டையும் தலைமேல் வைச்சுக் கொண்டாடின யாழ்ப்பாணத்தில இப்ப எல்லாம் தலைகீழாவெல்லே நடக்குது. பாரம்பரிய கலைகளையும் கலைஞர்களையும் மதிக்கிற பண்பு இப்ப இல்லாமல் போய்க்கொண்டிருக்கு. ஈழத் தமிழருக்கெண்டு தனித்துவமாக இருக்கும் அடையாளங்களை இப்பத்த இளம் சமூகம் மறந்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கு. இண்டைக்கு ஒரு நாட்டுக்கூத்தையோ அல்லது நல்லதொரு மேடை நாடகத்தையோ பாக்க முடியுதில்ல ... ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாக சில கலைஞர்களும் சில கலை நிறுவனங்களும் போட்டுக் கொண்டு வருகினம். அதிலயும் பாக்க இருக்கிற சனத்தை விரல்விட்டே எண்ணிவிடலாம். எல்லாம் காலம் செய்த கோலம் எண்டுதான் சொல்ல வேணும். வீட்டுக்குள் வந்துவிட்ட ரீ.வி.சீரியல் நாடகங்கள் இந்தக் கலாசாரத்தை இல்லாமல் செய்து போட்டுது பாருங்கோ...

பாரம்பரிய கலைகளை வளர்த்தவர்களைக் கூட இண்டைக்கு நாங்கள் மறந்துதானே போகிறோம். அவர்களை கனம் பண்ணுகிற நினைவு கூருகின்ற சந்தர்ப்பங்களை பல காரணங்களைக் கூறி தட்டிக்கழித்து வருகிறோம்.

அண்மையில் இப்படியான ஒரு விழாவுக்கு போகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைச்சுது. சுயநலமில்லாத பொது நல குணம் கொண்ட ஓர் ஆசிரியரின் வீட்டில்தான் இந்த நிகழ்வு நடைபெற்றது.

யாழ்ப்பாணத்து மண்ணில் மேடை நாடகத்தில் கொடிகட்டிப் பறந்த பழம் பெரும் நடிகரின் நினைவுகூரலும் அவரின்ர நினைவாக வழங்கப்படும் நினைவுப் பரிசை வாங்க வந்திருக்கும் பெயர் பெற்ற இலக்கியவாதி ஒருவருக்கான கௌரவிப்பும் தான் அந்த நிகழ்வு. கூடியிருந்தவைகள் எல்லாரும் பெயர், புகழ்பெற்ற கல்விமான்கள், கவிஞர்கள், கலைஞர்கள். உண்மையில பாருங்கோ, இது வரவேற்கப்பட வேண்டிய விசயம் தான். எங்கட கலைகலாசாரங்களை வளர்த்து வந்தவர்களை நினைத்துப் பார்க்க கௌரவிக்க வேண்டியது எங்கட கடமைதான். ஆனால் பாருங்கோ, அந்த நிகழ்வு நடந்த இடம்தான் தமிழர்களாகிய எங்களை தலைகுனிய வைச்சிருக்கு. மேடையில பெரும் எடுப்பாக செய்ய வேண்டிய இந்நிகழ்ச்சி ஒரு வீட்டின் கோடிப்புறத்தில் நடந்திருக்கு... 'முன் வந்த செவியை பின் வந்த கொம்பு மறைச்சது' மாதிரி கால மாற்றத்தால் வந்திருக்கு இப்பத்த கலாசாரமும் பணத்தாசையும் எங்கட மூதாதையரையும் அவர்கள் வளர்த்த கலைகளையும் வீட்டுக் கொல்லைப் புறத்துக்குக் கொண்டு போய் விட்டிருக்கு. 'வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி வாழிய வாழியவே' எண்டு பாடித் தொடங்கி பின்னுக்கு பிரேக் டான்சும், குத்துப் பாட்டுப் போட்டு பெண்டுகளின் தசைகளைக் காட்டி ஆடும் ஆட்டத்துக்கு தமிழ் கலைகளைக் காத்து வந்தவர்களின் பெயர்களிலிருக்கும் மண்டபங்களையும் சமயக் கூடங்களையும் வாரி வழங்குகிற தமிழ், சமயம் காக்கும் பெரியவர்கள் இப்படியானதொரு நிகழ்வுக்கு இடம்கொடுக்க முன்வராதது ஏன்?

இதைப் பற்றி அங்கிருந்த விழா ஏற்பாட்டாளரிடம் கேட்டேன். ''ஏன் பாருங்கோ, இப்படியானதொரு நல்ல நிகழ்வை எங்க இளம் சமுதாயத்துக்கு முன் மாதிரியான ஒரு நிகழ்வை இன்னும் 40 சனம் பார்க்கக்கூடியதாக ஒரு மண்டபத்தில பீக்கர் கட்டிப்போட்டிருக்கலாமே?' எண்டு... அதுக்கு அவர் கவல தோய்ந்த முகத்தோடு சொன்ன பதில் என்னைக் குனிந்த தலை நிமிர முடியாமல் செய்தது. மதத்தையும் தமிழையும் அணி சேரக் காத்து வருகிறோம் என சொல்லிவரும் ஓர் ஆதீனத்திற்குச் சொந்தமான மண்டபத்தை கேட்டிருக்கினமாம். அதுக்கு அவயள் விலை பேசியிருக்கினம். பதினையாயிரம் வாடகை கேட்டிருக்கினம் பாருங்கோ ...

'கலை பண்பாடுகளை வளர்ப்போம். தமிழைக் காப்போம். சமயத்தை மதிப்போம்' என பேசித் திரியும் இவயள் தமிழ் கலைகளையும் தமிழ் மொழியையும் வளர்த்து வரும் இந்த தமிழ் படைப்பாளிகள் ஒரு நிகழ்ச்சி செய்யிறதுக்கு இடம்கொடுக்க விலை பேசுகினம்.

இத்தனைக்கும் இந்த விழாவில கௌரவிக்கப்பட்ட இலக்கியவாதி இந்த மண்டபத்துக்குரியவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பல சொற்பொழிவுகளை பிரதி உபகாரம் பார்க்காது செய்தவராம். 'காசேதான் கடவுளடா' என்ற எண்ணத்தோடு வாழ்வதால் எங்களின் உயர் பண்பான மூத்தோரை கனம் பண்ணும் பண்பை மறந்து போகிறோம். இன்றைய இளம் சமூகத்துக்கு முன்மாதிரிகளாக நடக்க வேண்டியவர்களே இப்படி எடுத்ததற்கெல்லாம் விலை பேசி நடந்தால் நாளைக்கு ஆரோக்கியமான சமூகத்தை எப்படி உருவாக்கிவிட முடியும்?

இண்டைக்கு சமயத்தலைவர்களிலிருந்து தமிழ் அரசியல்வாதிகள் வரை எல்லாருமே தமிழரின்ர பொது நல விடயங்களையும் அபிலாசைகளையும் காரணம் காட்டி தங்களை வளர்த்துக் கொள்ளப் பாக்கினமே தவிர எங்கட சனத்திலையோ எதிர்கால சந்ததியிலையோ அவர்களுக்கு அக்கறை இல்லப் பாருங்கோ ... உலகம் முழுக்க பரந்து கிடக்கும் தமிழன் எங்கட கலைகளையும் பண்பாட்டையும் வளர்த்து வரப் பாடுபடுகிறான். ஆனால் இங்க இருக்கும் நாங்களோ அவற்றை குழி தோண்டி புதைக்கப் பாக்கிறோம்.

# "பெற்றோரின் வற்புறுத்தலுக்கு இடமளிக்காமல் விருப்பத்துடன் கற்றேன்"

**க.பொ.த. உயர்தர கணிதப் பிரிவில் திறமைச்சித்தி பெற்ற மாணவன் ப. கிரிதாஸ்**

'கல்வி எமது பிறப்புரிமை என்ற நோக்கத்தோடு கற்றல் செயற்பாடுகளை இயல்பு நிலையில் மேற்கொள்ளவேண்டும். மன விருப்பத்தோடு செயற்படவேண்டும். நான் பெற்றோர் உறவினரின் வற்புறுத்தலுக்கு இடமளிக்காமல் நாள்தோறும் குறிப்பிட்டளவு நேரம் கற்றல் செயற்பாடுகளில் விருப்பத்தோடு ஈடுபட்டேன். இதனாலேயே உயர் பெறுபேறுகளைப் பெற முடிந்தது. இனியும் தொடர்ந்து பெற்றோரின் விருப்பத்தை எதிர்பார்ப்பை நிறைவேற்றுவேன் எனக் கூறுகின்றார் இடைக்காடு மகா வித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தர கணிதப் பிரிவில் திறமைச்சித்தி பெற்ற மாணவன் பரமேஸ்வரன் கிரிதாஸ்.



இடைக்காட்டைச் சேர்ந்த பரமேஸ்வரன் - பேபி வர்சலா தம்பதிகளின் புதல்வன் . க.பொ.த. உயர்தர கணிதப்பிரிவில் மாவட்ட நிலையில் 30 ஆவது இடத்தைப் பெற்று பொறியியல் துறைக்கு தெரிவு செய்யப்படவுள்ளார்.

செல்வன் ப. கிரிதாஸ் இடைக்காடு மகா வித்தியாலயத்தில் தரம் 1 இல் சேர்ந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் புலமைப் பரிசில் பெறுவதற்கு உரிய தகுதி நிலையில் தேறி தொடர்ந்து கல்வி கற்றதோடு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் உயர் பெறுபேற்றைப் பெற்று கணித பிரிவில் இணைந்து க.பொ.த. உயர் தரத்தில் கல்வி கற்றார்.

கிராமப்புறப் பாடசாலைகளை புறம் தள்ளி நகர்ப் புறப்பாடசாலைகளை நோக்கிச் செல்லும் காலச் சூழலில் வீட்டு அருகிலுள்ள பாடசாலையில் நம்பிக்கை வைத்து இடைக்காடு மகா வித்தியாலயத்தில் தொடர்ந்து கற்று வந்தார்.

கிரிதாஸ் தனது கற்றல் அனுபவங்களை யாழ்ஓசையோடு மேலும் பகிர்ந்து கொள்கையில்-

வளர்ந்த நிலையிலுள்ள நாங்கள் கற்பதற்கு பெற்றோர் மற்றும் உறவினர்கள், ஆசிரியர்கள் வற்புறுத்த வேண்டிய தேவை இல்லை. எமது பொறுப்பை உணர்ந்து கற்கவேண்டும். கல்வி முன்னேற்றத்தால் எதிர்காலத்தில் பயன் அடை இருக்கும் நாங்கள் ஏன் தயங்க வேண்டும்.

எனது பெற்றோர் கற்பதற்கான வசதிகள் அனைத்தையும் செய்து தந்துள்ளனர். ஆனால் எந்தவகையிலும் வற்புறுத்தவில்லை. இயல்பு நிலையில் கற்பதற்கு வழிப்படுத்தினர். 'நீ படி பயன் கிடைக்கும்' என சந்தர்ப்பம் கிடைக்கும்போது கூறிக் கொள்வார்கள். நாளாந்தம் படி, படி என நச்சரிக்கவில்லை, வற்புறுத்தவில்லை.

எனது கற்றல் செயற்பாடுகளுக்கு பெற்றோர், பாடசாலை ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் அனைவரும் பொருத்தமான முறையில் வழிப்படுத்தி ஆலோசனை வழங்கினர். அதனை உரிய முறையில் ஏற்று அதன்படி நடந்து கவனத்துடன் கற்றேன். அதன் பயனாக பரீட்சையில் உயர் பெறுபேற்றினைப் பெற்றுக் கொண்டேன்.

உயர் கல்வியை முடித்து பொறியியலாளராக வந்த பின்னர் வருமானத்தை எதிர்பார்த்து வெளிநாடுகளுக்கு ஓடிப்போக மாட்டேன். என்னை வளர்த்து உருவாக்கிய மண்ணுக்கும் நாட்டிற்கும் என்னால் இயன்றவரை சேவை செய்வதற்கு தயாராக உள்ளேன் என்றார் பெருமையுடன்.

(அச்சுவேலி நிருபர்)

# மகனுக்கு ஓர் கடிதம்

'சமுதாயத்தில் ஏற்படும் பிறழ்வுகளால் திசை மாறிப்போகும் இன்றைய இளைஞர் சமுதாயத்தை வழிப்படுத்தும் வகையில் தன்னுடைய அந்தக் கால நிகழ்வுகளினூடாக அறிவுரை கூறமுற்படுகின்ற தந்தை ஒருவரின் கடிதம்.

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

**மகனே! ஆரூரா!**

வாழ்வின் சிறப்புக்கு முக்கிய அங்கமாக விளங்கும் பெருமக்களின் அறிவு, அனுபவம் ஆகியவற்றை மதித்து அவர் பின் நின்று வாழ்வதாகும். இறைவனுடைய ஆற்றலானது தகுதி வாய்ந்த சான்றோர்கள் வாயிலாகவே வெளிக்கொணரப்படுகிறது. தெய்வத்தோடு ஒப்ப எண்ணத்தக்க பெருமையும் சிறப்பும் இவர்களுக்குண்டு. இவர்களை நடமாடும் தெய்வங்களாக எண்ணி வழிபடவேண்டும். உலகம் நிலைபெறுவதற்கு இவர்களே காரணர்கள். இவர்களை இனங்கண்டு போற்றுவதற்குரிய அறிவு உனக்கு வேண்டும். மழை நீரானது நிறமும் குணமும் அற்றது. ஆனால் நிலத்தில் விழுந்த பின்பு நிலத்தினியல்பைத் தன்னியல்பாக்கிக் கொள்கின்றது. இதேபோன்று நல்லவர்களின் சேர்க்கையும் தீயவர்களின் சேர்க்கையும் மனிதனை முறையே நல் வழியிலும் தீய வழியிலும் கொண்டு போய்ச் சேர்த்துவிடும். வாழ்க்கையில் நல்லவரைக் காண்பது அவர்கள் சொல் கேட்பது அவர்களைப் பற்றிப்பேசுவது அவர்களோடு இணங்கி இருப்பது ஆகிய செயல்களைப் பெரும் பேறு என்பேன்.

மந்தரையைத் தோழியாக் கொண்ட கைகேயி பழியைச் சுமந்து நின்றதையும் சகுனியின் சொல் கேட்ட துரியோதனன் மாண்டு மடிந்ததையும் இதிகாசங்கள் காட்டுகின்றன. இதேநேரத்தில் வசிட்டனின் அறிவுரை கேட்ட இராமபிரான் போற்றப்பட்டதும் கிருஷ்ண பகவானின் தொடர்பு கொண்ட அர்ச்சுணன் உயர்வு பெற்றதும் நீ அறிந்ததே. இன்று சாதித்துக் காட்டியவர்கள் அனைவரும் போராடியே வெற்றி பெற்றவர்கள். போராடாமல் எதையும் பெறமுடியாது. இன்று சாதனையாளர் வரிசையில் வீற்றிருப்பவர்கள் அனைவரும் உன்னைப்போல் இருந்து வந்தவர்கள்தான். யாரும் பிறக்கும் போது சாதனையாளர்களாகப் பிறப்பது இல்லை. பிறந்து வளர்ந்து முயற்சியின் முடிவில்தான் சாதனையாளர்களாக உருவாகிறார்கள். நீ சாதிக்கப் பிறந்தவன். சாதனை என்னும் அக்கரைக்குச் செல்ல வேண்டும் என்றால் போராட்டம் என்றும் ஆற்றில் இறங்கத்தான் வேண்டும். நீந்தத்தான்வேண்டும்.

உன்னைப் பற்றிய உன் அங்கீகாரமே உன் அஸ்திவாரம். பிறரது அங்கீகாரம் வெறும் அலங்காரமே. மகாகவி பாரதியை அவரது சமகாலத்தில் மகா கவியாக யாரும் அங்கீகரிக்கவில்லை. 'பிழைக்கத் தெரியாதவன்' என்பதே சமூகம் அவர் மீது வைத்திருந்த அபிப்பிராயம். ஆனால் பாரதி தன் மீது வைத்திருந்த அபிப்பிராயம் முற்றிலும் வேறுபட்டது.

'புவியனைத்தும் போற்றிடுவான் புகழ்படைத்துத்
தமிழ் மொழியைப் புகழில் ஏற்றும் கவியரசர் தமிழ் நாட்டுக்கு
இல்லையெனும் வசை என்னால் கழிந்தது.'

என்பதே பாரதி தன்மீதான அபிப்பிராயம். பிறரது அங்கீகாரங்களை விட அவனது அங்கீகாரங்களே ஜெயித்தன.

நோபல் பரிசு பெற்ற உலகப் புகழ் பெற்றவரான கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் வாழ்க்கையிலும் இப்படித்தான். அவரது குடும்பம் கூட்டுக்குடும்பம். ஐம்பது அல்லது அறுபது போர் கொண்ட பெரும் கூட்டம். அங்கு பிள்ளைகள் பிறந்த நாளைக் கொண்டாடுகின்ற முறையே புதுமையானது. ஒவ்வொரு பிள்ளை பெயரிலும் ஒரு நோட்டுப் புத்தகம் இருக்கும். அதில் அந்தக் குடும்பத்துப் பெரியவர்கள் பிள்ளைகளைப் பற்றித் தங்கள் பாராட்டை விமர்சனத்தை கருத்தை எழுதுவது வழக்கம். ரவீந்தரநாத் பிறந்த நாள் அன்று அவர் பாட்டி எழுதிய வரிகள் 'ரவியைப் பற்றிச் செல்ல உருப்படியாக எதுவுமில்லை. அவன் எதிர்காலத்தை நினைத்தால் கவலையாக இருக்கிறது.

**மீண்டும் சந்திப்போம் மகனே**
**உன் தந்தை**
**கி. கிருபானந்தா**

# ஏழை மாணவர்களை பாதிக்கும் 'ரியூசன்' கலாசாரம்

சாதாரண மக்கள், ஒரு நேரச் சாப்பாட்டுக்கு வழியில்லாதவர்கள் இன்று பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் தங்களுடைய பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பி படிப்பிக்கிறார்கள். இந்த மாணவர்களின் படிப்பிலேயே முன்னேற்றங்கள் பெறுபேறுகள் குறைவாக இருக்கின்றது. அதே நேரம் இதே ஆசிரியர்கள் ரியூசன் சென்ரர்களில் தெளிவான விளக்கங்களுடன் படிப்பிக்கின்றார்கள். இந்த சாதாரண பெற்றோர் பெருந்தொகை பணம் ரியூசன்களில் செலுத்தி தங்களது பிள்ளைகளைப் படிப்பிக்கிறார்கள்.

ஒரு நேர சாப்பாட்டிற்கு வழியில்லாமல் இருக்கின்ற பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை படிப்பிப்பதற்கு பணம் செலுத்த வழியில்லாமல் வறுமைக் கோட்டுக்குள்ளே துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்தவேளையிலே ரியூசன் சென்ரர் நடத்துபவர்களும் அங்கு படிப்பிக்கின்ற ஆசிரியர்களும் தங்களுடைய வருமானத்திற்காக சாதாரண மக்களைச் சுரண்டி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதே ஆசிரியர்கள் பாடசாலையில் தெளிவாகவும் விளக்கமாகவும் இதய சுத்தியுடனும் நேர்மையுடனும் உண்மையுடனும் படிப்பிப்பார்கள் என்றால் ரியூசன் சென்றர்களுக்கு மாணவர்கள் போகமாட்டார்கள். பாடசாலையிலேயே எல்லா மாணவர்களும் முன்னேறக்கூடிய வாய்ப்புகள் நூறுசதவீதம் இருக்கும்.

இன்று கல்வி என்பது வியாபார பொருளாக மாறிவிட்டது. இது நீதியானதா என்பதை ஆசிரியர் சமூகம் உணர்ந்து பார்க்கவேண்டும். அதேநேரம் இதை நடத்துபவர்களும் சிந்திக்க வேண்டும். இன்னும் ஒரு பத்து வருடங்களின் பின்னர் ரியூசன் சென்ரர்களில் தான் மாணவர்களைக் காணமுடியும். பாடசாலைகளில் நம்பிக்கை இழந்து போகின்றபடியால் பாடசாலைகள் மூடப்படும் அபாயம் ஏற்படும். அத்தோடு பணம் கொடுத்து ரியூசனுக்குப் போக முடியாத மாணவர்கள் பாடசாலைகளில் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையைத் தான் காணமுடியும்.

பாடசாலைகளில் உயர்தரக் கல்வியைப் போதிக்கும் பல ஆசிரியர்கள் ரியூசன் சென்ரர்களிலேயே அதிக சிரத்தையுடனும் கற்பிக்கின்றதை அவதானிக்க முடிகிறது. பிரபல பாடசாலைகளில் ஆசிரியர்களாக இருக்கும் இவர்கள் அங்கு தங்களிடம் கற்கும் மாணவர்களையும் தாங்கள் கற்பிக்கும் ரியூசன் சென்ரர்களுக்கே வருமாறு மறைமுகமாக நிர்ப்பந்தித்து வருகின்றார்கள். இதனால் ரியூசன் சென்ருக்குப் போக விரும்பாத மாணவர்களும் வறிய மாணவர்களும் தங்களின் எதிர்காலத்தைக் கவனத்திற் கொண்டு இவ் ஆசிரியர்கள் கற்பிக்கும் ரியூசன் சென்ரர்களுக்குச் செல்கின்றார்கள்.

இந் நடவடிக்கைகள் தொடர்வது தெரிந்தும் பாடசாலை அதிபர்களும் பெற்றோர்களும் சமூகத் தலைவர்களும் புத்திஜீவிகளும் பாராமுகமாக நடந்து வருகிறார்கள். பணமே குறிக்கோளாகக் கொண்டு நடத்தப்பட்டுவரும் இந்த ரீயூசன் சென்ரர்களால் வறிய மாணவர்களின் கல்வி பாதிப்படைந்து வருகிறது. எனவே கற்றோர்கள் விழிப்படைந்து இந்தச் சமூகத்தைக் காப்பாற்றுவது உங்கள் கடமையே.

**- அருட்தந்தை யேசுராஜன்**

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் 19 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக மேற்கு நாடுகளினால் பிரேரணை கொண்டுவரப்படும் என்ற தெரிவிக்கப் பட்டுவருகின்ற நிலையில் அதனை தோற்கடிப்பதற்கான கடும் பிரயத்தனத்தில் ஜெனிவா சென்றுள்ள இலங்கை தூதுக்குழு ஈடு பட்டுவருகின்றது.

அமைச்சர்கள் உயர் அதிகாரிகள் என்று ஜெனிவா மனித உரிமை பேரவைக் கூட்டத் தொடரில் கலந்துகொள்ள சென்றுள்ள பாரிய இலங்கைத் தூதுக்குழுவினர் பேரவையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரை சந்தித்து இலங்கை நிலைமை தொடர்பில் விளக்கமளித்து வருவதுடன் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள பிரேரணையை தோற்கடிக்க ஆதரவு வழங்குமாறு கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் 19 ஆவது கூட்டத் தொடர் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டதுடன் எதிர்வரும் 23 ஆம் திகதிவரை அமர்வுகள் நடைபெறவுள்ளன. இலங்கையின் சார்பாக அமைச்சர் சமரசிங்க கடந்த திங்கட்கிழமை பேரவையில் பிரதான உரையை நிகழ்த்தியிருந்தார்.

இந்நிலையில் இலங்கைக்கு எதிராக பிரேரணை ஒன்று கொண்டுவரப்படும் என்று மனித உரிமைப் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்படாவிடினும் கூட்டத் தொடரின் இடைநடுவில் உறுப்பு நாடு ஒன்றினால் எந்தநேரமும் பிரேரணையை கொண்டுவரக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவே தெரிவிக்கப்படுகின்றது.

அதாவது கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரைவாக அமுல்படுத்துதல் மனித உரிமை மீறல்கள் குறித்து உள்ளக விசாரரணை நடத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகவே குறித்த பிரேரணை அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாலும் மீறல்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாலும் இலங்கைக்கு எதிராக விசேட பிரேரணை அவசியமற்றது என்று இலங்கை தரப்பில் கூறப்பட்டுவருகின்றது.

யாழ் ஓசை
Yaal Osai
2012 மார்ச் 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

# ஜெனிவாவில் வெல்லுமா இலங்கையின் இராஜதந்திரம்

அந்த வகையில் அவ்வாறு இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டுவரப்படின் அதனை தோற்கடிப்பதற்கு தேவையான வகையிலான இராஜதந்திர நகர்வுகளிலேயே இலங்கை தூதுக்குழுவினர் ஈடுபட்டுவருகின்றனர். ஜெனிவா அமர்வு ஆரம்பமாகுவதற்கு முன்னரே ஜெனிவா சென்ற வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் பேரவையின் ஆணையாளர் நாயகம் நவநீதம் பிள்ளை உள்ளிட்ட முக்கிய தரப்பினரை சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார். மேலும் பங்களாதேஷ் உகண்டா உள்ளிட்ட சில நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்து இலங்கை நிலைமையை விளக்கியிருந்ததுடன் ஆதரவையும் கோரியதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இலங்கை தூதுக்குழுவுக்கு தலைமை வகிக்கும் அமைச்சர் சமரசிங்க நேற்று முன்தினம் மனித உரிமைப் பேரவையில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ள அணிசேரா நாடுகள் அமைப்பின் நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். இதன் போது இலங்கைக்கு ஆதரவு வழங்கப்படும் என அணி சேரா நாடுகள் தம்மிடம் தெரிவித்ததாக அமைச்சர் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் பேரவையின் கூட்டத் தொடருக்கு மேலதிகமாக உப நிகழ்வுகள், விசேட சந்திப்புக்கள், தனிப்பட்ட பேச்சுவார்த்தைகள் என இலங்கைக்கு ஆதரவை திரட்டும் பல்வேறு வகையான இராஜதந்திர நகர்வுகளில் இலங்கை தூதுக்குழுவினர் ஜெனிவாவில் ஈடுபட்டுவருகின்றனர். இலங்கை பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பயங்கரவாதத்தை தோற்கடித்து தற்போது முன்னேற்றமடைந்துவருவதாகவும் மேலும் முன்னேற்றங்களை வெளிக்காட்ட இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்படவேண்டும் என்றும் இலங்கை தரப்பில் நியாயம் முன்வைக்கப்பட்டுவருகின்றது.

ஆனால் இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டுவரப்படவேண்டியது அவசியம் என்று மேற்கு நாடுகள் தெரிவித்துவருகின்ற அதேவேளை குறித்த பிரேரணைக்கு ஆதரவு வழங்கப்படும் என்று அமெரிக்காவும் தெரிவித்துள்ளது. இந்நிலையில் ஜெனிவாவில் பாரிய இராஜதந்திர போர் ஒன்றே இடம்பெற்றுவருவதாக கூற முடியும்.

எனினும் இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டுவந்தால் அதனை எதிர்கொள்ள தயாராக இருப்பதாகவும் எவ்வகையான நிலைமையையும் சமாளிப்பதற்கு தம்மால் முடியுமெனவும் ஜெனிவாவில் தங்கியுள்ள இலங்கைத் தரப்பினர் தெரிவித்துவருகின்றனர். இந்நிலையில் இலங்கைக்கு எதிராக பிரோரணை கொண்டுவரப்படுமா? அவ்வாறு கொண்டுவரப்பட்டால் இலங்கையின் இராஜதந்திரம் வெற்றிபெறுமா? என்பதனை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

# யாழில் இருந்து ஒபாமா அரசிற்கு சவால்விடும் தமிழர்கள்

ஜெனிவாவில் இலங்கை அரசிற்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தை எதிர்த்து யாழில் அரச ஆதரவுக் கட்சிகள் அரசின் ஆதரவாளர்கள் தங்கள் எதிர்புணர்வுகளை கடந்த திங்கட்கிழமை யாழ். நகரின் வீதிகளில் காட்டியிருந்தனர்.

வடமாகாண ஆளுநர் முதல் கொண்டு வடக்கு அரச உத்தியோகத்தர்கள் வரை இந்த ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டு தாங்கள் இலங்கையர் என்ற ஒற்றுமையை வெளிப்படுத்தி நின்றனர். ஆனால் ஜெனீவாவில் தமிழ் மக்களுக்கு இலங்கை அரசு செய்த போர்க்குற்றத்திற்கான தண்டணை என தமிழ் தரப்பினர் மறந்து போய் இந்த ஆர்பாட்டத்தில் கலந்துகொண்டனரா? என்ற சந்தேகம் மிகவும் வலுக்கிறது

இது இவ்வாறு இருக்க ஜெனீவாவில் இலங்கைக்கு நடக்கப் போகும் பலப்பரீட்சையை வரலாற்று ரீதியாக இங்கு அனுகுவோம்.

சுதந்திரத்தின் பின்பு இலங்கையில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் சர்வதேச சமூகத்திற்கும் அதன் கருத்தியல் வடிவமான ஐக்கிய நாடுகள் (ஐ.நா.) சபைக்கும் புதிய விஷயம் அல்ல. இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான முதல் விவாதம் 1986 இல் ஐ.நா. சபையின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் கூட்டத்தில் நடைபெற்றது.

இதற்கான தீர்மானத்தை ஆணைக்குழுவின் கூட்டத்தில் கொண்டுவந்த நாடு ஆர்ஜென்டீனா. தீர்மானத்தை கொண்டு வருவதில் பின்னணியில் தீவிரமாக இயங்கிய நாடான இந்தியா தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தது. அப்போதைய இலங்கையின் ஜனாதிபதியான ஜே.ஆர். ஜயவர்த்தனாவின் நண்பர்களாகவிருந்த அமெரிக்காவும், மேற்கு ஐரோப்பிய நாடுகளும் அவர்களுடைய சொல் கேட்ட பல ஆபிரிக்க நாடுகளும் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன.

வன்னி இறுதி யுத்தத்தின் போது, சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மனித உரிமைகள் பற்றிய சட்ட விதிகளும், மானிட நலன் தொடர்பான சட்ட விதிகளும் மீறப்பட்டனவா என்ற உண்மையை கண்டறிவதற்கான பகிரங்க விசாரணை தேவை என 2009 இல் மனித உரிமை கவுன்சிலில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு பதிலாக பயங்கரவாதத்தை தோற்கடித்ததற்காக இலங்கையை பாராட்டும் தீர்மானம் உறுப்பு நாடுகளால் நிறைவேற்றப்பட்டது.

இதற்கு சீனா, ரஷ்யாவுடன், இந்தியாவும் முழுமனதுடன் பாடுபட்டது. இத்தீர்மானம் நிறைவேறுவதற்கு மனித உரிமை கவுன்சிலுக்கு இலங்கை அளித்த வாக்குறுதிகள் முதன்மையான காரணமாக அமைந்தன.

முப்பது வருடங்களுக்கு மேலாக அனுபவித்த பயங்கரவாதத்தின் கொடுமையை இப்போதுதான் முடிவுக்கு கொண்டு வந்ததாயும், உண்மையான ஜனநாயகமும், சுபீட்சமான பொருளாதாரமும் கட்டியெழுப்பப்படுவதற்கான கால அவகாசத்தை இலங்கைக்கு வழங்க வேண்டும் எனவும் இலங்கை கோரியது சரியென ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பெப்ரவரி 27, 2012 இல் ஆரம்பமாகியுள்ள ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலின் 19ஆவது அமர்வில், சம்பவங்களுக்கான விளக்கம் அல்லது பதில் கூறும் தன்மை விசாரணைகளில் நம்பகமான வெளிப்படைத்தன்மை என்பவற்றுடன் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தை மேற்கொள்வதற்காக இலங்கை அரசானது மேலும் பலன் தரக் கூடிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் கொண்டுவரப்படும் எனவும், அத்தகைய ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டால், அதற்கு தாம் ஆதரவளிக்கப் போவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளதாகவும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தீர்மானத்தை அமெரிக்கா தாணாகவே



பிரேரிக்குமா அல்லது கனடா, மற்றும் ஐரோப்பிய நேசநாடுகளினூடாக பிரேரிக்குமா என்பது இலங்கை எதிர்நோக்கும் தற்போதைய பெரும் புதிராகும்.

போர்க்குற்றங்கள் பற்றிய விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு புலம்பெயர் தமிழ் மக்கள் பெருமளவுக்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள் என்ற எண்ணப்பாடு இலங்கையில் இருப்பதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில், போர் நிகழ்த்தப்பட வேண்டிய முறைபற்றி ஆலோசனை வடிவிலும், ஆயுத மற்றும் ராஜதந்திர உதவிகளை வழங்குவதற்கான முன் நிபந்தனைகளின் வடிவிலும் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் போர்க்களத்தில் முற்று முழுதாகப் புறந்தள்ளப்பட்டதன் மூலம் பெறப்பட்ட வெற்றியின் களிப்பில், உரிமைகள் பற்றி வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் யாவும் காற்றில் பறக்கவிடப்பட்ட நிலையை ஒரு நல்ல முன்னுதாரணமாக மற்றைய நாடுகளும் பின்பற்ற முனைந்தால் ஏற்படக்கூடிய சர்வதேச ஒழுங்கு முறையொன்றின் சீரழிவை மேற்கு நாடுகள் அனுமதிக்க தயாராக இல்லை என்ற நிலையே அந்நாடுகள் இத்தகைய தீர்மானமொன்றை வலியுறுத்துவதற்கான காரணம் எனவும் சொல்லப்படுகிறது.

இலங்கை அரசு வெளிநாட்டு தலையீடுகளை தவிர்ப்பதற்காக தானே நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் குறைந்தபட்ச சிபாரிசுக்களைக் கூட நிறைவேற்றுவதில் ஆர்வம் காண்பிக்காததை பலர் சுட்டிக்காட்டுகிறார்கள். இலங்கை அரசு சர்வதேச அரங்குகளில் வெளிப்படுத்தும் காலம் கடத்தும் தன்மையை இனியும் பொறுமையுடன் சகித்துக் கொள்ள அவர்கள் தயாராக இல்லை என்பதை வெளியுறவு செயலாளர் கிளாரி கிளின்டன் எழுதிய கடிதமும், மற்றும் அமெரிக்க ராஜதந்திரிகள் கொழும்பு சென்று தெரிவித்த கருத்துக்களும் வெளிப்படுத்துகின்றன.

மனித உரிமைக் கவுன்சிலில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளில் பெரும்பான்மையான நாடுகளின் ஆதரவின்றி ஐரோப்பிய நாடுகள் அல்லது அமெரிக்கா இத்தகைய தீர்மானத்தை முன்மொழிய தயாராக இருக்காது எனவும் சொல்லப்படுகிறது. தோல்வியடையக் கூடிய தீர்மானத்தை கொண்டுவர அவர்கள் முயற்சிக்க மாட்டார்கள் என்ற நிலையில் இந்தியா என்ன நிலைப்பாட்டை மேற்கொள்ளும் என்பது பெரும் மர்மமாக உள்ளது. ஆனாலும் அது இலங்கைக்கு எதிரான ஒரு நிலையை எடுக்கும் அளவிற்கு இலங்கையுடனான இந்தியாவின் உறவு நிலையில் பெரிய பின்னடைவுகள் எதுவும் நிகழவில்லை.. அமெரிக்காவின் வற்புறுத்தலுகாக வேண்டுமெனில் இந்தியா வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் இருக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வாக்களிக்கும் உரிமை இல்லாவிட்டாலும் கவுன்சில் அமர்வுகளில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் உரிமை தன்னார்வு செயற்பாட்டு அமைப்புக்களுக்கு உள்ளது. இதுபோன்ற அமைப்புக்கள் இலங்கையில் நடைபெற்ற மற்றும் தொடர்ந்து நடைபெற்று வரும் சம்பவங்களுக்கு சுயாதீனமான சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறன.

ஐக்கிய நாடுகள் சபையில் உள்ளடங்கியுள்ள அமைப்புக்களில் ஒன்றான மனித உரிமைகள் கவுன்சில் ஒரு வருடத்தில் இரு அமர்வுகளை மார்ச் மற்றும் ஜூலை மாங்களில் மேற்கொள்கிறது. ஒரு நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுவதாக கிடைக்கும் குற்றச்சாட்டுக்களை விசேட குழுவொன்றின் மூலம் விசாரித்து பின்னர் உறுப்பு நாடுகளின் தீர்மானத்திற்கு அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது. உறுப்பு நாடுகள் குறிப்பிட்ட ஒரு நாட்டில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் விசாரிக்கப்பட வேண்டும் என ஏற்றுக்கொண்டால், அத் தீர்மானம் ஐ. நா. பொதுச்சபையின் விவாதத்திற்கு சமர்பிக்கப்படும். பொதுச்சபையில் உலகில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து நாடுகளும் அங்கத்தவர்களாக உள்ளன. பொதுச்சபையும் விவாதத்தின் முடிவில் அத்தீர்மானத்தை ஏற்றுக் கொண்டால் அத்தீர்மானம் ஐ.நா. வின் பாதுகாப்பு சபை என்ற அமைப்பின் விவாதத்திற்கு விடப்படும்.

இம்மூன்று அமைப்புக்களிலும் பாதுகாப்பு சபையே தனது தீர்மானங்களை செயலுருவமாக்கக்கூடிய அதிகாரத்தை கொண்டது. பாதுகாப்பு சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானமே சர்வதேச குற்ற நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தப்பட முடியும். இஸ்ரேல் சிரியா மீது பாதுகாப்பு சபை நிறைவேற்றிய தீர்மானங்கள் மீது இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே, மனித உரிமைகள் கவுன்சிலில் நிறைவேற்றப்படும் தீர்மானம் அடுத்த நாளே இலங்கை அரசையும், மஹிந்த ராஜபக்ஷவையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்திவிடப்போவதில்லை. இத் தீர்மானம் நாட்டின் ஆட்சியாளரை சர்வதேச அரங்குகளில் வெட்கித் தலைகுனிய வைப்பதற்கான ஒரு கருவியாக அமையலாம். இதன் மூலம் இலங்கை மீதான சர்வதேச சலுகைகள் மறுக்கப்படலாம். மிக அண்மைக்காலம் வரை பர்மா மீது இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதிகாரத்தின் பெயரால் ஒரு உயிர் பறிக்கப்பட்டதற்கும், ஒரு நபர் காணாமல் போனதற்கும் காரணமாயமைந்தது எது அல்லது யார் என்ற வினாவிற்கு விடை சொல்ல வேண்டிய கடப்பாடு அரசுக்கு உண்டு. இறுதி யுத்ததின் முடிவில், தமது பிள்ளைகள் அல்லது உறவினர் இராணுவத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு பஸ் வண்டிகளில் ஏற்றப்பட்டதை நேரில் கண்டவர்கள், இன்றுவரை அவர்கள் ஏன் திரும்பி வரவில்லை என்ற கேள்விக்கு விடைதேடி காத்திருக்கிறார்கள்.

பிரிவும், உயிரிழப்பும் தருகின்ற துயரத்திலிருந்து மீண்டெழுந்து, தமது வாழ்க்கையை முன்னோக்கி சீரமைத்துக் கொள்வதற்கான மனரீதியான மற்றும் பொருளியல் ரீதியான உதவிகளை வழங்குவது அரசாங்கத்தின் முக்கியமான கடமை. அதற்கும் ஒருபடி மேலே சென்று இனங்களுக்கிடையேயான சுமுக உறவையும், நல்லிணக்கத்தையும் மேம்படுத்துவதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதும் அரசின் மிக முக்கிய பொறுப்பு. நாட்டு மக்கள் அனைவரினதும் சுமுகமான எதிர்காலத்தை மனதில் கொண்டு, ஐ. நா. தீர்மானம் தரக்கூடிய அழுத்தங்கள் எதிர்நோக்கப்பட வேண்டும். ஏற்கனவே கற்றுக்கொண்ட அனுபவப் பாடங்கள், இத்தகைய பெருந்துயர் கொண்ட பேரழிவு மீண்டும் ஏற்படாமல் இருபதற்கும், சமூகங்களுக்கிடையேயான நட்பும், புரிந்துணர்வும் வளர்வதற்கான காரணியாகவும் அமைய வேண்டும். தீர்மானத்தினால் ஏற்படக் கூடிய விளைவுகளைவிட மக்களின் எதிர்காலம் குறித்த அக்கறை முன்னிறுத்தப்பட வேண்டும்.

மனித உரிமை கவுன்சிலில் இலங்கை மீதான தீர்மானம் ஒரு வேண்டுகோளாகத்தான் வெளிப்படுத்தப்படுகிறது. அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் புலம்பெயர்ந்த தமிழர்கள் அதை வெற்றியாக கொண்டாடுவதோ அல்லது தோற்கடிக்கப்பட்டால், அந்த வெற்றி தரக்கூடிய

**டானியல்**

மமதையில் இலங்கை அரசு நாட்டிலுள்ள ஏனைய இனங்களின் உரிமைகளை வழங்க மறுப்பதோ தவிர்க்கப்பட வேண்டும். வெற்றியடைந்தாலும், தோல்வியடைந்தாலும் தீர்மானம் இலங்கை மக்களுக்கு நன்மையளிக்கக் கூடியதாக அமைய வேண்டும்.

எது எவ்வாறு இருப்பினும் யாழில் இருந்து கொண்டு ஜெனிவாவுக்கும் ஒபாமா அரசிற்கும் விடுத்திருக்கும் சவாலானது புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் வெறுப்புணர்வை தேற்றுவித்துள்ளது என்று தான் கூறவேண்டியுள்ளது.

## யாழ் ஓசை 'கார்ட்டூன்'



# அடுத்த பிரதமர் யாரென்பதை அ.தி.மு.க. வே தீர்மானிக்கும்

அண்மையில் நடந்த அ.தி.மு.க. பொதுக் குழுவில் முன்னாள் பிரதமர் வாஜ்பாயை உதாரணம் காட்டிப் பேசினார் முதல்வர் ஜெயலலிதா. கூடவே மத்திய அரசுக்கு எதிராக தொடர்ந்து விமர்சனங்களையும் வைத்தார். மத்தியில் யார் ஆட்சிக்கு வரவேண்டும் என்று அ.தி.மு.க. தான் தீர்மானிக்கும் என்ற அவரது பேச்சு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த அரசியல் மாற்றங்கள் குறித்த கேள்விகளோடு பா.ஜ.க. வின் மூத்த தலைவர் இல. கணேசனை சந்தித்தோம்...



## அந்தச் சக்திதான் ஜெயலலிதா!

முதல்வர் ஜெயலலிதா மத்திய அரசுக்கு எதிராக கடுமையான விமர்சனங்களை தொடுத்துக் கொண்டு இருக்கிறார். ஒருவேளை பா.ஜ.க. வோடு நெருங்குகிறாரோ?

என்னைப் பொறுத்தவரையில் அ. தி. மு. க. சக்தி வாய்ந்த கட்சி. கட்சியின் பொதுக் குழுவில் ஜெயலலிதா அகில இந்திய அளவில் மத்தியில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வரவேண்டும் என்பதை நிர்ணயிக்கும் சக்தியாக அ. தி. மு. க. இருக்கும் என்று பேசியிருக்கிறார். தொண்டர்களுக்கு உத்வேகம் ஏற்படுத்துவதற்காக கூட அவர் இப்படிப் பேசியிருக்கலாம். ஆனாலும் உண்மையாகவே மத்திய அரசை நிர்ணயிக்கும் பலம் அ. தி. மு. க.விற்கு இருக்கிறது. இன்றைய சூழலில் ஜெயலலிதா யாருக்கு ஆதரவு தருகிறாரோ அந்தக் கட்சிதான் மத்தியில் ஆட்சிக்கு வர முடியும்.

நிச்சயமாக அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வியைச் சந்திக்கும். இதைப் புரிந்து கொண்ட மாநிலக் கட்சிகள் பாரதிய ஜனதா கட்சியுடன் நெருங்கி வருகின்றன.

பா.ஜ.க. இன்னமும் சிறுபான்மையினரின் நம்பிக்கையை முழுதாகப் பெறவில்லையே?

பா. ஜ. க. வகுப்புவாதக் கட்சி அல்ல. குஜராத்தில் பா.ஜ.க. ஆட்சியில் தொடர்ந்து இஸ்லாமியர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவர்கள் அங்கே சட்டமன்ற உறுப்பினர்களாகவும் இருக்கிறார்கள். நாங்கள் ஆட்சியில் இருந்த போதுதான் அப்துல் கலாம் இந்திய ஜனாதிபதியானார். சிலர் திட்டமிட்டு பா. ஜ. க. மீது வகுப்புவாத முத்திரை குத்தி ஆதாயம் தேடுகிறார்கள். வரும் தேர்தலில் இது எடுபடாது!

பா.ஜ.கவுடன் அ.தி.மு.க. கூட்டணி அமைக்க பத்திரிகையாளர் சோ முயற்சி எடுப்பதாகச் சொல்லப்படுகிறதே?

சோ அவர்களுக்கு பாரதிய ஜனதா தலைவர்களுடன் நல்ல நட்பும் நெருக்கமும் உள்ளது. அதேபோல் அ. தி. மு. க. தலைமையும் அவரை நம்புகிறது. ஆனால் இரு கட்சிகளின் கூட்டணிக்கு அவர்தான் முயற்சி செய்கிறார் என்ற செய்தியையும் அவரே மறுப்பார்!

அ.தி.மு.க வில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து?

சசிகலா அந்தக் கட்சியின் ஒரு சாதாரண பொதுக் குழு உறுப்பினர். அவ்வளவுதான். இவரின் வெளியேற்றத்தை ஊடகங்களே பெரிதுபடுத்துகின்றன. சசிகலா - ஜெயலலிதாவின் நட்பு ஆழமானது. இந்த நட்பில் விரிசல் விழும் அளவிற்கு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. இருவரின் பிரிவைக் கண்டு மகிழ்பவன் நான் அல்லன்!

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் பா.ஜ.க. இரட்டை நிலைப்பாடு எடுப்பது சரியா?

ஒரு தேசியக் கட்சி மாநில பிரச்சினைகளில் அதிகமாக தலையிடுவதில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. அதை மீறி தலையிட்டால் தனிப்பட்ட ஒரு மாநிலத்திற்கு மட்டும் சலுகை காட்டுகிறது என்று குற்றம் சாட்டுகிறார்கள். முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் தமிழக பா.ஜ.க. தங்கள் தரப்பையும் கேரள பா.ஜ.க. தங்கள் தரப்பையும் கட்சியின் மேலிடத்தில் கூறியிருக்கிறார்கள். என்னதான் நியாயத்தை நாங்கள் தலைமையிடம் பேசினாலும் இந்த விவகாரத்தைத் தீர்க்கும் பொறுப்பு மத்திய அரசிடம்தான் உள்ளது.

இந்த விவகாரத்தில் முதன் முறையாக தமிழகத்தில் அனைத்துக் கட்சிகளின் நிலைப்பாடும் ஒரே மாதிரி இருப்பது வரவேற்கத்தக்கது!

லோக்பால் மசோதாவிற்கு முதலில் ஆதரவுக் குரல் கொடுத்த பா.ஜ.க. அந்த மசோதா நிறைவேறும் போது முட்டுக்கட்டை போட என்ன காரணம்?

ஊழலை விசாரிக்க ஒரு தனி அமைப்பு வேண்டும் என்பதில் பா.ஜ.க.விற்கு உடன்பாடு உண்டு. ஆனால் காங்கிரஸ் அரசு கொண்டு வந்துள்ள லோக்பால் மசோதாவால் எந்தப் பயனும் இல்லை. காமன் வெல்த் ஊழல், ஆதர்ஷ் ஊழல், 2ஜி ஊழல் இவை அனைத்திலும் அங்கீகாரம் கொடுத்து கையொப்பமிட்டது பிரதமர் தான். லோக்பால் மசோதாவிற்குள் பிரதமரையும் கொண்டுவரவேண்டும் என்ற குறிப்பில் காங்கிரஸ் சில மாற்றங்களைச் செய்தது. அதைத்தான் பா.ஜ.க. ஏற்றுக்கொள்ளவில்லை. வாஜ்பாய் பிரதமராக இருக்கும் போதே லோக்பால் மசோதாவில் பிரதமரை விசாரிக்கும் அதிகாரம் இல்லை. அதில் கட்டாயம் பிரதமர் பெயரையும் சேர்க்க வேண்டும் என்று சொல்லி திருப்பி அனுப்பினார். இந்தத் துணிச்சல் காங்கிரஸ் அரசிற்கு உள்ளதா? மடியில் கனம் இருப்பதாலேயே பயப்படுகிறார்கள்!



அன்னை ஹசாரேவை பா.ஜ.க. தான் இயக்குகிறது என்ற குற்றச்சாட்டு உள்ளதே?

அன்னா ஹசாரேவை பின்னால் இருந்து இயக்குவது ஆர். எஸ். எஸ். என்றுதான் சொல்கிறார்கள். ஒருவேளை ஆர். எஸ். எஸ். அமைப்பு இயக்கியிருந்தால் அன்னா ஹசாரே குழுவிற்கு இந்தத் தோல்வி கிடைத்திருக்காது. ஏனெனில் ஆர். எஸ். எஸ். முத்திரை அக்மார்க் முத்திரைக்குச் சமம்!

**தகவல்:- ப. ரஜினிகாசன்**

# தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் இலங்கை அரசின் தமிழ் பிரதிநிதிகளும்

முன்னைய காலத்தில் அரசியல் என்பது பாராளுமன்றில் பேசுவதும் அதனை பத்திரிகைகள் பிரசுரிப்பதுமாக அமைந்தது. ஆனால் இன்றைய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் கணினி கலைப் பூங்காக்களும் சிறந்த அரசியல் மையமாக மாறிவிட்டது. இன்று மக்களைச் சர்வாதிகாரிகள் ஏமாற்ற முடியாத கணினி ஜனநாயகப்புரட்சி ஏற்பட்டு விட்டது.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் தமிழர்களது அரசியல் நீரோட்டத்தில் வகிபாகம் என்ன என்பதனை ஆராய்தல் அவசியம். உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இலங்கை அரசின் தமிழ்ப் பிரதிநிதிகளாக தமிழீழ விடுதலைப் புலிகளினால் உருவாக்கப்பட்டது. அது உருவாக்கப்பட்டபோது ஆயுதக் குழுக்களையே இலங்கை அரசு தனது தமிழ் பிரதிநிதிகளாக செயற்பட வைத்தது. தமிழ் மக்களின் ஆயுத அரசியலில் இருந்து ஜனநாயக அரசியலுக்கு மாற்றம் கண்டபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் செயற்பாடுகள் வடக்கு, கிழக்கு பிரதேசத்திற்கு இன்றியமையாததாக அமைந்தது.

இதனாலேயே 2009 ஆம் ஆண்டு யுத்த அழிவுகளுக்குப் பின்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை தமிழ் மக்கள் தங்களின் பிரதிநிதிகளாக உருவாக்கி இருந்தனர்.

இக்கூட்டமைப்பின் செயற்பாடு தமிழ் மக்களுக்கு இலங்கை அரசிடம் இருந்து நீதியைப்பெற்றுத் தருவதும் இலங்கை அரசு தொடர்ந்து தமிழ் மக்களுக்கு அநீதியினை இழைக்காது காப்பாற்றுவதுமாக இருக்குமென மக்கள் எதிர்பார்த்தனர்.

ஆனால் துரதிஷ்டவசமாக இக் கூட்டமைப்பினர் தாங்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் (பாராளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் எடுத்து) என்பதனை மறந்து தாங்களே இலங்கை அரசாங்கத்தின் பங்குதாரர்கள் என்ற எண்ணத்துடன் அரசியல் நடத்த தலைப்பட்டனர். இதன் ஒரு கட்டமே ஜெனிவாவில் தமிழ் மக்களின் நீதிக்காக நடைபெறும் மனித உரிமைக் கூட்டத் தொடரினை புறக்கணித்தமை. ஒருவரிடம் நாம் அதிகளவு எதிர்பார்த்தால் அது அவரிடம் இல்லாவிடில் எவ்வாறு ஏமாற்றம் அடைகிறோமோ அவ்வாறே தமிழ்க்கூட்டமைப்பினை மக்கள் இன்று ஏமாற்றத்துடன் நோக்குகின்றனர். ஆனால் உண்மையான தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக செயற்படக் கூடிய ஜனநாயக சூழ்நிலை இன்று இல்லை.

கடந்த காலங்களில் தமிழ்க் கூட்டமைப்புடன் நெருங்கிச் செயற்பட்டவர்களில் தமது இருப்பிற்கு ஆபத்தானவர்களாக கருதப்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதனை அக்காலத்தில் மக்களால் உணர முடியாது இருந்தது. இதனை தற்போதைய சூழலில் மீளக்காட்சிப்படுத்தின் ''மன்னவனும் நீயோ? வளநாடும் உன்னதுவோ? உன்னை நம்பியே தமிழை ஓதினேன்?'' என்ற கம்பரின் வேதனையை ஒவ்வொரு தமிழரும் உணர்வர்.

அண்மையில் புத்திஜீவிகளுக்கும் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் இடையில் ஓர் சந்திப்பு நடைபெற்றபோது, கூட்டமைப்பினரிடம் காரசாரமான கேள்விகள் கேட்கப்பட்டன. உண்மையில் புத்திஜீவிகளது இருப்பினையே இவர்கள் கேள்விக்குறியாக்கி விடுவார்கள். தமது அரசியல் நலனுக்காக ஜெனிவாவிற்கு போனால் இலங்கையில் வன்முறை மீளவும் ஏற்பட்டுவிடும் என்று தமிழரை பயங்கரவாதிகள் என்று மீளவும் பணயம் வைக்கும் வசனத்தினை உயர்த்தி நடந்த அரசியல் சாணக்கியம் மிகவும் கேவலமானது.

எனவே தமிழ் மக்கள் வெளிப்படையாகவே தமது கருத்துக்களை இணை வெளியில் கூறுவதனால் தமிழ் மக்களுக்கு உரிய மனிதநேயம் கட்டிக்காக்கப்படும். எமது அரசியல் பிரக்ஞையின் பிரவாகம் வற்றாத கங்கை நதி போன்றது. அதில் சில இடங்களில் சாக்கடை நீர் பாய்ந்து வந்தாலும் அதன் புனிதம் தொலைந்து போகாது.

-டாக்டர் சி. யமுனானந்தா


சென்ட்ரல் பினான்சின்

மாபெரும்

வாகன சந்தை



மார்ச் 2ஆம் 3ஆம் மற்றும் 4ந் திகதிகளில்

யாழ்ப்பாணம்

முற்றவெளி மைதானத்தில்
(முனியப்பர் கோவில் முன்பாக)

அனுமதி இலவசம்

உங்கள் வசதிக்கேற்ற குறைந்த அடிப்படைக் கட்டணம்

• ஜப்பான், இந்தியா மற்றும் சீன உற்பத்திகளான பதிவு செய்யப்பட்டதும் பதிவு செய்யப்படாததுமான மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டி, கார்கள், வேன்கள், ட்ரக், ட்ரக்டர்கள், லொறி உட்பட அனைத்துவிதமான வாகனங்களுக்கு லீசிங் வசதி செய்து கொள்ளவும் வாகனங்களை விலைக்குப் பெற்றுக்கொள்ளவும் வாருங்கள்.

• இந்த நாட்டிற்கு வாகனங்களை இறக்குமதி செய்து விநியோகிக்கின்ற அனைத்து முக்கிய விற்பனை பிரதிநிதித்துவ நிறுவனங்களின் பங்களிப்பு.

• குறைந்த பட்ச மாதாந்த தவணையில் கொடுப்பனவு வசதி.

• துரித ஒருநாள் சேவையின் மூலமாக அன்றைய தினத்திலேயே வாகனத்தை எடுத்துச் செல்லக்கூடிய சந்தர்ப்பம்.

• முச்சக்கரவண்டி, மக்ஸிமோ ட்ரக், டாடா நனோ, மைக்றோ பன்டா, மற்றும் டிமோ பட்டாவுக்கு விசேட குத்தகை வசதி.

1988ன் 78ம் இலக்க நிதி நிறுவன சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியில் நிதிச்சபையின் மூலமாக பதிவு செய்யப்பட்டுள்ளது

சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
இல. 364, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 1608 / 021 222 1942

டி.ஹிமால் 0774 109151 டி.ரஜீந்தன் 0772 588352 என்.ஜெரோன் 0770 431183

# இரத்தம் தோய்ந்த குறிப்பேடுகள்



எப்போதுமில்லாதவாறு யாழ். குடாநாட்டு ஊடகவியலாளர்கள் மரணித்த சர்வதேச ஊடகவியலாளரொருவருக்கு இவ்வாரம் ஒன்று கூடி அஞ்சலி செலுத்தியுள்ளனர். உலகிலேயே ஊடகவியலாளர்களுக்கு மிகுந்த உயிர் அச்சுறுத்தல் மிக்க பகுதிகளுள் யாழ்ப்பாணமும் ஒன்றாகவே இன்று வரை உள்ளது. தமது உயிர்களை தக்கவைக்க போராடும் சூழலில் அவர்கள் மீண்டுமொருமுறை ஒன்று திரண்டு இன்னொருவருக்காக தமது அஞ்சலிகளை செலுத்தியுள்ளனர். ஏனெனில் தமக்காக குரல் கொடுப்பவர்களுக்கு தமது ஆதரவு குரல்களை பதிவு செய்து கொள்ளவே அவர்கள் தயாராகவிருக்கின்றனர்.

கடந்த வருடம் ஜனவரியிலிருந்து மேற்கு ஆசியாவில் அமைந்துள்ள சிரிய நாட்டில் அதிபர் பஷர் அல் அசாத்திற்கு எதிரான கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. மேற்கத்தைய நாடுகளின் தூண்டுதலின் பேரிலேயே இக்கிளர்ச்சிகள் இடம்பெற்று வருவதாக சிரியா அறிவித்துள்ள நிலையில், மேற்கத்தைய நாடுகளைச் சேர்ந்த செய்தியாளர்கள் அந்நாட்டுக்குள் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை.

கிளர்ச்சிக் குழுக்களின் ஆதரவுடன் சில பத்திரிகையாளர்கள் அந்நாட்டுக்குள் நுழைந்து அங்கு நடைபெறும் உண்மைச் சம்பவங்களை உலகப் பத்திரிகைகள் ஊடாக வெளிக்கொண்டுவருகின்றனர். அவ்வாறானவர்களுள் பிரித்தானியாவின் சண்டே டைம்ஸ் பத்திரிகையின் பிரபல போர் முனைச் செய்தியாளர் மேரி கொல்வின் மற்றும் பிரபல பிரெஞ்ச் புகைப்படக்காரர் ரெமி ஒச்லில் ஆகியோரும் முக்கியமானவர்கள்.

இவ்விரு பத்திரிகையாளர்களும் சிரிய அரச படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி அண்மையினில் உயிரிழந்தார்கள்.

சண்டே டைம்ஸ் பத்திரிகையின் புகழ்பெற்ற வெளிநாட்டுச் செய்தியாளரான மேரி கொல்வின், 1956ஆம் ஆண்டில் அமெரிக்காவில் பிறந்தவர். பல ஆண்டுகளாக லண்டனில் வசித்து வந்த மேரி கொல்வின், உலகின் மோதல் நடக்கும் நாடுகளுக்குச் சென்று செய்தி சேகரிப்பதில் துணிச்சல் மிக்கவர். 1985ஆம் ஆண்டிலிருந்து இவர் சண்டே டைம்ஸ் பத்திரிகையில் பணியாற்றத் தொடங்கியிருந்தார்.

உலகின் மோதல் நடக்கும் நாடுகளுக்கு துணிச்சலுடன் பிரவேசிக்கும் மேரி கொல்வின் நடக்கும் உண்மைச் சம்பவங்களை உலகமயமாக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கோசோவோ, செசெண்யா, கிழக்கு திமோர், லிபியா உட்பட பல நாடுகளில் பணியாற்றிய அனுபவம் உடையவர். அரசியல் இஸ்திரத்தன்மையற்ற பல அரபு நாடுகளிலும் தனது பணியினை மேற்கொண்டு அங்கு நடக்கும் சம்பவங்களைத் துணிச்சலுடன் பேசியும் எழுதியும் வந்தவர் .

கடந்த 2001ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் செய்தி சேகரிக்க, எல்லையைத் தாண்டியபோது அரச படைகள் நடத்திய




யாழில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வின்போது...

குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்த கொல்வின், தனது ஒரு கண்ணையும் இழந்தார்.

ஒரு கண்ணை இழந்தாலும், மனதின் உறுதியை இம்மியும் இழக்காத மேரி கொல்வின், தனது போர் முனை செய்தியாளர் பணியைத் தொடர்ந்தார். தனது ஒரு கண்ணை கறுப்புத் துணியினால் மூடியே இது வரை காலமும் வந்துள்ளார். அதற்கான காரணத்தைக் கேட்டபோது போரின் வலியைப் பிரதிபலிக்கும் முகமாகவேதான் இப்படியாக கறுப்பினால் கண்ணை மூடித் துக்கத்தை வெளிப்படுத்துவதாக கூறியிருந்தார்.

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் சம்பவத்தின்போது, வெள்ளைக் கொடியுடன் சரணடையச் சென்ற விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோருடன் கடைசியாகப் பேசியவர் மேரி கொல்வினே ஆவார்.

கடைசியாக விடுதலைப்புலிகள் நிலைகொண்டிருந்த மிகச்சிறிய காட்டுக்குள் இருந்து கொண்டு 2009 மே 17 ஆம் திகதி செய்மதித் தொலைபேசியில் ப. நடேசன், 'நாங்கள் எமது ஆயுதங்களைக் கீழே போடுகிறோம்' என்று தனக்கு கூறியதாக மேரி கொல்வின் 'சண்டே டைம்ஸ்' மற்றும் 'த கார்டியன்' பத்திரிகைகளுக்கு முன்னர் பேட்டி கொடுத்திருந்தார்.

அப்போது அவர், 'உயர் பிரித்தானிய மற்றும் அமெரிக்க அதிகாரிகளுக்கூடாக நான் கொழும்பில் இருந்த ஐ.நா.விசேட தூதுவர் விஜய் நம்பியாரோடு தொடர்பு கொண்டேன். புலிகளின் சரணடைதலுக்கான கோரிக்கைகளை நான் அவருக்கு தெரியப்படுத்தினேன். அவரும், தான் அதைச் இலங்கை அரசிற்கு தெரிவிப்பதாகக் கூறினார். இந்த நடவடிக்கை ஒரு சமாதானம் வருவதற்கான அறிகுறியாக எனக்குத் தோன்றியிருந்தது.

எப்போதுமே கலகலப்பாக இருக்கும் புலித்தேவன் சிரித்த முகத்துடன் ஒரு படத்தை தொலைபேசியில் எடுத்து எனக்கு அனுப்பியிருந்தார். கடைசி ஞாயிறு இரவின் போது, இலங்கை இராணுவம் நெருங்கிய போது, புலிகளிடமிருந்து ஒரு அரசியல் கோரிக்கைகளும் புகைப்படங்களும் இருக்கவில்லை. நடேசன் சரணடைதல் என்ற சொல்லைப் பாவிக்க மறுத்தார். ஆனால் அவர் என்னை அழைத்தபோது அதைத் தான் செய்ய முன்வந்திருந்தார். விடுதலைப்புலிகளின் பாதுகாப்பிற்கு நம்பியாரின் வருகை வேண்டுமென்றும் கேட்டார்.

நியூயோர்க் 24 மணி நேரமும் இயங்கும் அவசரப் பிரிவு ஊடாக நம்பியாரைத் தொடர்பு கொண்டேன், அப்போது அங்கே காலை 5:30. புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டார்கள் என்று அவரிடம் கூறினேன். தான் நடேசன் மற்றும் புலித்தேவனின் சரணடைதலின் பாதுகாப்பை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நிச்சயமாக்கிக் கொண்டதாகவும் அவர் கூறினார். அவர்கள் வெள்ளைக் கொடியைப் பிடித்து வந்தால் சரியென்றும் கூறினார். இலங்கை சரணடைதலின் சாட்சிக்கு நம்பியாரும் வடக்குக்குப் போகத் தேவையில்லையா என்று நான் அவரிடன் கேட்டேன். அதற்கு அவசியமில்லையென்றும், வெள்ளைக் கொடியை உயர்த்திப் பிடிக்கும்படியும் நம்பியார் கூறினார்' என அவர் அப்பேட்டியில் கூறியுள்ளார்.

இவரின் இவ்வாக்குமூலம் இலங்கையில் நடைபெற்ற போரின்போது வெள்ளைக்கொடி வழக்கிற்கு ஒரு முக்கிய சாட்சியாக பதியப்பட்டிருந்தது. இன்று அதுவும் இல்லாமல் போய்விட்டது.

உயர்த்திய வெள்ளைக் கொடிகள் இரத்தத்தினால் தோய்ந்து போன கதை பின்னர் உலகறிந்ததே. இலங்கை அரசை மரணத்தின் பின்னரும் துரத்தும் போர் குற்றங்கள் விவகாரத்தில் விஜய் நம்பியார் முதல் மஹிந்த ஈறாக வேட்டியை துகிலுரியும் பணியில் மேரி கொல்வின் பங்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

இவரின் இறப்பு யுத்த சூழலில் வாழும் ஊடகவியலாளர்கள் மற்றும் நீதி கேட்டுப் போராடும் மக்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பே. இந்த வகையினிலேயே அதே உன்னத நோக்கத்தோடு பணியாற்றி படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பு மேரியை நினைவு கூருவது மிகவும் போற்றுதலிற்குரியது. களங்களில் போராடிக்கொண்டிருக்கும் ஊடகவியாலனர்களிடையே மேரி என்றுமே கலங்கரை விளக்கமாகவே இருப்பார்.

இவருடைய வழியிலான பணியினை செய்வதுதான் அவருக்கு நாம் அளிக்கும் இறுதி மரியாதையாக இருக்கும். இவரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும் பல கோடி மக்களில் குடாநாட்டு ஊடகவியலாளர்களும் இணைந்து கொள்கின்றனர்.

# மாதர் தம்மை இழிவு படுத்தும் கொடுமைகளை ஒழிக்க ஒன்றுபடுவோம்

மார்ச் 8 ஆம் திகதி உலகளவில் சர்வதேச மகளிர் தினம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுவரும் வேளையில் இன்றுவரை பெண்களின் பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகவுள்ளது.

இலங்கைதான் உலகில் முதல் பெண் பிரதமரையும் ஜனாதிபதியையும் அரியணையில் ஏற்றி அழகுபார்த்துள்ளது. மிக அண்மையில் முதலாவது பெண் உபவேந்தர், உயர்நீதிமன்ற நீதிபதி, அமைச்சின் செயலாளர் எனப் பெண்கள் இந்நாட்டில் பதவியேற்றுள்ளனர். அரச துறை, தனியார் துறை என பல துறைகளிலும் பெண்கள் முக்கிய பங்காற்றுகின்றனர். இலங்கையில் பெண்களின் எழுத்தறிவு கிட்டத்தட்ட 90 சதவீதத்தினை எட்டியுள்ளதாக அண்மைய தரவு ஒன்று குறிப்பிடுகின்றது. பெண்கள், பொது வாழ்க்கையில் முன்னெப்போதும் இல்லாத அளவு பிரவேசித்துள்ளனர்.

மார்ச் – 08
சர்வதேச
மகளிர் தினம்

குறிப்பாக வட பகுதியில் அரச அதிபரிலிருந்து உள்ளூராட்சி தலைமை பதவிவரை பெண்களே முன்னணி வகித்து வருகின்றனர் என்பது யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் பெருமைக்குரிய விடயமாகும். 20 ஆம் நூற்றாண்டின் இறுதி தசாப்தங்களில் இலங்கைப் பெண்களின் வாழ்வில் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் யுத்தத்தின் பின்னரான காலத்தில் பெண்களுக்கெதிரான வன்முறைகளும் துஷ்பிரயோகங்களும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதையே நாம் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

பெண்கள் கண்ணிருந்தும் குருடராய், வாயிருந்தும் ஊமைகளாய், படித்திருந்தும் மூடர்களாக பல சந்தர்ப்பங்களில் மௌனித்துப் போயுள்ளதைப் பார்க்கும்போது அடிமனதிலிருந்து வேதனைத் தீ, சுவாலை விட்டு எரிகின்றது. பல விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், ஆலோசனைகள், உரிமைகள், சட்டங்கள் இருந்தும் பெண்களிடையே குறிப்பாக சிறுமிகள், இளம் யுவதிகளிடையே சீரழிவுகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் பெண்கள் பிழைப்பிற்கான திறன்களை புதிதாக அமைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. பெண்களைக் கீழ்மைப்படுத்தும் ஆணாதிக்க அமைப்புக்களும் மனப்பாங்குகளும் இலங்கையில் இன்னமும் ஓயாது தொடர்கின்றன. அநேக சந்தர்ப்பங்களில் பெண்கள் அடக்குமுறை வாய்ந்த சமூக வழக்கங்களால் பாதிக்கப்பட்டமைக்கு பண்பாடு, மரபு, சம்பிரதாயச் சட்டம் என்பவை சாட்டாக காட்டப்பட்டுள்ளது. பெருகிவரும் மனித உரிமை, மனித நேய, சுதந்திரச் சிந்தனைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் பெண்களும் உரிமை பூண்டவர்கள் என்பதை ஒப்புதல் கொள்ளவேண்டும்.




எல்லாவற்றிற்கும் மேலாக பெண் தன்னை உணர வேண்டும். ஆணாதிக்க கருத்துருவாக்கங்களால் கட்டமைக்கப்பட்ட தன்னுடைய விம்பத்தை உடைத்தெறிந்து சுதந்திரம், சமத்துவம், மனித உரிமை என்ற கோட்பாடுகளைக் கொண்ட மனித வாழ்க்கைக்கு முழுச் சொந்தக்காரர்களாக மாற வேண்டும். அத்தகைய மாற்றம் பெண்களைப் பொறுத்தவரையில் ஒரு போராட்ட வாழ்க்கையாகும். ஆகவே இத் தினத்தில் மகளிர் ஆகிய நாம் இத்தகைய வாழ்வை நோக்கி அடியெடுத்து வைப்போமெனக் கூறி திடசங்கற்பம் பூணுவோம்.

மகளிர் அபிவிருத்தி நிலையம்
யாழ்ப்பாணம்



# கந்தையா வாத்தியும் சுகந்தி ரீச்சரும்



**கந்தையா :-** என்ன பிள்ளை கண்டு கனநாளாகுது.

**சுகந்தி :-** ஓம் சேர் அம்மாவுக்குக் கொஞ்சம் ஏலாது அதனால அதிகம் வெளிக்கிடுறதில்ல.

**கந்தையா :-** அது சரி பிள்ளை கலாசாரச் சீரழிவு, கலாசாரச் சீரழிவெண்டு எங்கட ஜீ.எயும் பேப்பர்காரரும் கத்துகினம். உண்மையில அப்பிடி ஏதேனும் நடக்குதோ இல்லாட்டி உவை சும்மா ஒண்டு இரண்டு விசயத்தை ஊதிப் பெருப்பிக்கினமோ ....

**சுகந்தி :-** அது உண்மைதான் சேர். ஆனா அதுக்காண்டி முழுக்க முழுக்க எல்லாம் அழிஞ்சு போச்சு எண்டும் சொல்லேலாது. சில விசயங்கள் கற்பனை பண்ணிக்கூடப் பாக்கேலாதளவுக்கு நடக்குது.

**கந்தையா :-** அப்படி என்ன பிள்ளை நடக்குது?

**சுகந்தி :-** ஒரு இணையத்தளமொண்டு 'மற்ற தொழில்' செய்து பிடிபட்ட ஆக்களுக்கு நீங்கள் சுயதொழில் செய்யிறதுக்கான உதவி செய்யிறம். நீங்கள் உந்தத் தொழிலை விடுங்கோ எண்டு ஐம்பதாயிரம் குடுத்தவையளாம். அதைப் பார்த்திட்டு இன்னொருத்தி தானும் இந்தத் தொழில் செய்யிறனான். எனக்கும் உதவி செய்யுங்கோ எண்டு சொல்லி ஆரோ நான்கு பேரோடை சல்லாபிக்கிற மாதிரி வீடியோ எடுத்து அனுப்பியிருக்கிறாளாம். பாருங்கோவன், நாடு எந்தளவுக்கு கேவலமாப் போச்சுதெண்டு.

**கந்தையா :-** என்னடி பிள்ளை சொல்லுறா..!

**சுகந்தி :-** நானும் முதல் நம்பேல்லை சேர். ஆனா அந்த இணையத் தளம் நடத்துற பெடியன் தங்களுக்கு ஈமெயில்லை வந்திருக்கெண்டு சொன்னான். சரி எண்டு போட்டுப் பார்த்தால் அதைப் பாக்கவுடனேயே வயித்தப் பிரட்டத் தொடங்கியிட்டுது. சீ.... இப்படியும் பொம்பிளையள் இருக்கிறாளவையோ எண்டு. நல்ல வடிவான பெட்டை சேர் ஒரு இருவத்திமூண்டு இருவத்திநாலு வயதிருக்கும். உரும்பிராய் ஐயப்பன் கோயிலடியிலை இருக்கிறவளாம். பேர் ஊர் அற்றஸ் ரெலிபோன் நம்பர் எல்லாம் போட்டெல்லே அனுப்பியிருக்கிறாள் பாவி.

**கந்தையா :-** அந்தக் காலத்திலை நான் தமிழ் படிப்பிக்கேக்கை அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எண்டெல்லாம் படிப்பிச்சனான். இனிமே உதுகளை இலக்கியத்திலையிருந்து நீக்கிவிடும் காலம் வரும்போல கிடக்கு.

**சுகந்தி :-** உதுகலால தான் மற்ற எல்லோருக்கும் கெட்டபெயர் ...சரி நான் வாறன் சேர்.

**கந்தையா :-** ஓம்பிள்ளை போட்டு வா. பணத்துக்காக மானத்தை விக்கும் காலமாப் போச்சு ...

# நடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாக நிகழ்ந்து வருகின்ற சம்பவங்கள் குடாநாட்டு பெண்களின் வாழ்வியலில் பாரிய அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி நிற்கின்றன. கடந்த வாரமளவில் சிறுப்பிட்டிப் பகுதியில் மூன்று இளம் பருவப் பெண் பிள்ளைகள் தந்தையாலேயே தொடர் பாலியல் ரீதியான சித்திரவதைப்படுத்தி சிதைக்கப்பட்டிருக்கும் சம்பவம் நெஞ்சைப் பிழியும் வேதனையாகும். காலம் செய்த கோலத்தால் தாயை இழந்த பிரஸ்தாப மூன்று பெண்களும் தந்தையின் அரவணைப்பில் இருந்தவேளையிலேயே இவ்வாறு பாலியல் தொல்லை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. கடந்த 6 ஆண்டுகளாக மதுபோதையில் வரும் தந்தைக்கு எதிராக இந்தப் பிள்ளைகள் கிளர்ந்தெழாதமை ஏன்? என்ற வினா எம்மத்தியில் எழுகின்றமையும் தவிர்க்கமுடியாததாகிறது. அண்மையில் அச்சுவேலி பொலிஸாரிடம் மேற்படி பெண்கள் தஞ்சம் புகுந்த வேளையில்தான் இச்சம்பவம் வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது. அதுவரையிலும் அதாவது ஆறு ஆண்டுகளாக தங்களுக்கு ஏற்பட்ட இந்த அவலத்தை அவர்கள் மூடி மறைத்தே வந்திருக்கின்றனர். ஒருவேளை தமது தந்தையை விட்டால் வேறு யார் துணை என்ற பயம் அவர்களை வாட்டியிருக்கலாம். அல்லது தந்தை மீது வைத்திருந்த அளவு கடந்த அன்பு, காரணமாக இருந்திருக்கலாம். அல்லது நீதி கேட்டு நீதிமன்றில் தஞ்சம் புகுந்தால் தமது குடும்ப கௌரவம், மானம் என்னாவது? என்ற அச்சம் அவர்களில் படர்ந்திருக்கலாம். எது எப்படியென்றாலும் இறுதியில் வேறு வழியின்றி நீதியின் கதவைத் தட்டியிருப்பது தமக்கு ஏற்பட்ட இந்த அவலம் இனியும் தொடராதிருப்பதற்கே என ஊகித்து உணர முடிகிறது. தமது தந்தையினால் இவ்வாறு துன்புறுத்தப்படும் வேளையில் ஒருவாறு தப்பி ஓடி வந்து தமது பேர்த்தியின் வீட்டிலேயே தஞ்சமடைவது வழமை. சம்பவம் நடைபெற்ற அன்றைய தினமும் தமது தந்தையின் தாயாரான பேர்த்தியாரின் வீட்டிலேயே அடைக்கலம் தேடியிருந்த வேளையிலேயே இந்த நிட்டூரம் நிகழ்ந்திருக்கிறது. மது மயக்கத்தில் தள்ளாடியபடி வந்த அந்த காமுகன் தனது தாய் வெளியே சென்று விட்டதனால் தனிமையில் இருந்த அந்த மூன்று பெண்களையும் பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முனைந்தபோது இனியும் பொறுத்துப் பயனில்லை என்று கருதிய அந்த மூன்று அப்பாவிப் பெண்களும் அச்சுவேலிப் பொலிஸாரிடம் நடந்த விடயத்தைக் கூறியுள்ளனர்.

விடயத்தை கேட்டறிந்து கொண்ட பொலிஸார் உடனடியாகச் செயற்பட்டு அக் காமுகனை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தி விசாரணைக்குட்படுத்திய வேளையில்தான் ஊடகங்களுக்கும் எட்டியது. அது மாத்திரமன்றி வேறொரு சம்பவமும் அச் சம்பவத்தையடுத்த தினத்தில் நடைபெற்றிருக்கிறது. 08 வயதான பாலகியும் அவளது தந்தையால் மூர்க்கத்தனமாக வேட்டையாடப்பட்ட சம்பவமும் கோப்பாய் பகுதியில் நிகழ்ந்து முடிந்திருக்கிறது. தனது தந்தையை கலங்கரைவிளக்கமாகவும் எதிர்கால வாழ்விற்கு ஒளியேற்ற வந்த தெய்வமாகவும் நினைத்த அந்த பிஞ்சின் மனதில் இடி விழுந்தமைபோல பாரிய உளப்போர் அதிர்ச்சியை இந்தச் சம்பவம் ஏற்படுத்தியிருக்கின்றது. அவளின் தந்தையும் மது போதைக்கு அடிமையானவர்தான். தான் விரும்பி திருமணம் முடித்த மனைவியுடன் நீண்ட காலம் வாழ்க்கை நடத்தவில்லை. இடை நடுவில் அவர்களது திருமண வாழ்வு முறிந்து விட மனைவி வேறு ஒரு ஆணுடன் ஓடிப்போயிருக்கிறாள். அப்போது துரதிஷ்டவசமாக அவர்களுக்கு ஒரு பெண்பிள்ளையும் பிறந்திருந்தது. பெற்ற பிள்ளையைக்கூட மறந்தவளாக அத்தாயின் முடிவு அப்பிஞ்சை கடுமையாகவே காயப்படுத்தியிருந்தது. வேறு வழியின்றி தந்தையிடமே இறுதியில் தஞ்சமடைய வேண்டிய நிலை. ஆனால் தந்தையோ அப்பிஞ்சை தனது பிள்ளையாகக் கருதாமல் ஏதோ விளையாட்டுப் பொருளாக நினைத்து தனக்கிருந்த காமப் பசியை தீர்த்துக் கொண்டமையானது கொடுமையிலும் கொடுமை.

தாயின் மடியில் தலைவைத்திருந்தால் வேதனை தெரியாது என்பார்கள். ஆனால் அந்த பிஞ்சுக்கு கடவுள் கொடுத்த தண்டனையோ என்னவோ பிறந்தவுடனேயே தாயைப் பிரிந்துவிட்டது. இறுதியில் தனது தந்தையையே கண்கண்ட தெய்வமாக அப்பிஞ்சு நம்பியிருப்பாள். பாவம் அவளது நம்பிக்கை வீணாகிப் போய்விட்டது. யாரை தனது கண்கண்ட தெய்வமாகவும் கலங்கரை விளக்காகவும் நினைத்தாளோ அவனாலேயே மிக மோசமாக வேட்டையாடப்பட்ட அவலம் நிகழ்ந்திருக்கிறது.

இச் சம்பவம் நிகழ்ந்ததை அறிந்த கோப்பாய் பொலிஸார் உடனடியாகவே கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்தபோது அவன் ஏற்கனவே நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டமையும் தெரிய வந்தது. முன்னர் செய்த ஒர குற்றத்திற்காக 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்று அண்மையில் தான் வெளியேறியிருக்கிறான். தற்போது இவனை பிணை எடுப்பதற்காக இவனது கள்ளக் காதலி முன்வந்திருப்பதாகவும் அறியப்படுகிறது. மேற்படி இரு சம்பவங்களின் பின்னணியில் தந்தையர்களின் மோசமான செயற்பாடுகளால் சீரழிக்கப்பட்ட பெண்களே இருக்கின்றனர். உண்மையில் பெண்களுக்கு வெளியில் தான் பாதுகாப்பில்லை என்றால் வீடுகளிலும் அவர்களால் பாதுகாப்பாக வாழமுடியாது என்ற நிலையை இச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

வன்னிப் பிரதேசத்தின் பல பகுதிகளில் பகல் வேளையிலேயே வீதியில் பெண்கள் தனியாகச் செல்லுகையில் பல்வேறு விதமான பாலியல் இம்சைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனராம்.

யாழ். குடாநாட்டிலும் வன்னிப் பிரதேசத்திலும் பெண்களுக்கு ஏற்படுகின்ற சம்பவங்கள் அதிர்ச்சியில் உறைய வைத்திருக்கின்றன.

எனவே பெண்கள் தமக்கு ஏற்படும் அவலங்களை சட்டரீதியாக சந்திப்பதற்கு ஏற்றவாறும் அவர்களின் எதிர்கால நலனில் அக்கறையெடுத்துச் செயற்படுவதற்கும் மகளிர் மன்றங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் நிறுவ சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். பாலியல் ரீதியாக, உடல், உள ரீதியாகத் துன்பம் இழைப்பவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான இலவச சட்ட உதவிகள் மற்றும் ஆலோசனைகளைச் சம்பந்தப்பட்ட மகளிர் மன்றங்கள் வழங்க முன்வரவேண்டும். அது மாத்திரமன்றி கிராம மட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான விழிப்பூட்டல் கருத்தமர்வுகள் நடமாடும் சேவைகள் என்பவற்றை சம்பந்தப்பட்ட மகளிர் அமைப்புக்கள் உடன் செயற்படுத்த வேண்டும். தற்போது யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் பல மகளிர் அமைப்புக்கள் இருந்தாலும் அவை வினைத்திறனான முறையில் செயலாற்றுவதில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாகக் காணப்படுகிறது.

எனவே இவ் அமைப்புக்கள் பெண்களுக்கெதிரான வன்முறையை குறிப்பாக குடும்பத்தில் நிகழ்த்தப்படும் அநீதிகளை தடுத்து நிறுத்துவதற்குரிய வழிவகைகளை சம்பந்தப்பட்ட மகளிர் அமைப்புக்கள் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது.

**- உதிஷ்டிரன்**

# தேச வழமைச் சட்டம் – ஓர் அறிமுகம்

*(சென்ற வாரத்தொடர்ச்சி)*

ஒரு பராயமடையாத குழந்தைக்கு தாயும் தந்தையுமே இயற்கையான பாதுகாவலர்கள் என்றும் பாட்டி அல்ல என்றும் இதனை ஒரு மாவட்ட நீதிமன்று (Upper guardian) என்ற முறையில் தீர்மானிக்க நியாயாதிக்கம் கொண்டது என்ற சட்டக்கோட்பாடுகளின் பிரகாரம் இந்த சட்ட விதி தேசவழமைச் சட்டத்தில் புகுத்தப்பட்டுள்ளது. ஆங்கிலச் சட்டத்தில் வரும் காப்பாண்மை (Guardianship) விதி இங்கு நடைமுறைக்கிடப்பட்டுள்ளது. ஒரு பிள்ளையை தத்தெடுத்தல் (Adaption) வழக்கிலும் இன்று ஆங்கில சட்டமுறைமைகள் (English law System) நடைமுறைக்கு வந்துள்ளன. 'பழைய கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்ற தொல்காப்பியரின் இலக்கண வரிகள் தேச வழமைச் சட்டத்தை செம்மையாக்குவதற்கு வழியமைத்துள்ளன என்றால் மிகையல்ல.

### தோற்றுவாய்கள் அல்லது மூலகங்கள்

சட்டத்தின் மூலகங்கள் அல்லது தோற்றுவாய்கள் என்பது எல்லாச் சட்டங்களுக்கும் பொதுவானதேயாகும். அந்த வகையில் தேச வழமைச் சட்டத்தின் மூலகங்கள் எவை என்பது ஆய்வுக்குரிய விடயங்களாகும்.

முதலாவது யாழ்ப்பாண பட்டம் (Jaffna Patam). அதாவது யாழ்ப்பாண பட்டணம் என்பதில் ''ண'' என்ற சொல்லை உச்சரிப்பதில் ஒல்லாந்தருக்கு ஏற்பட்ட நாப்பிறழ்வு காரணமாக ஒல்லாந்தரின் நாவில் பட்டணம் என்பது பட்டம் என்றே உச்சரிக்கப்படலாயிற்று. ஒல்லாந்தரால் வரையறுக்கப்பட்ட 'யாழ்ப்பாண பட்டம்' என்ற அந்த பெரு நிலப்பரப்பான இன்றைய வடமாகாணத்தில் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் (மலபார்) மத்தியில் நிலவிவருகின்ற வழக்காறுகள் (Customs) விழுமியங்கள் (Norms) பழக்கவழக்கங்கள் (Usages) பாரம்பரிய முறைமைகள் வழமைகள் (Traditions) இவையாவும் இவற்றின் நீண்டகாலத் தன்மை காரணமாகவே சட்டத்திற்கு சமமானவையாகக் கணிப்பீடு செய்யப்படலாயின. யாழ்ப்பாண இராச்சியத்தை ஒல்லாந்தர் கைப்பற்றி ஆட்சி செய்த காலத்தில் யாழ்ப்பாண டச்சு ஆளுநராக இருந்த சைமனஸ் விடுத்த வேண்டுகோளின் பேரில் யாழ்ப்பாணப் பட்டணத்தின் திசாவையாக இருந்த (வரி அறவீட்டாளர்) (Tax collector) கிளாஸ் ஐசாக் என்ற டச்சுக்காரனால் 1704 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மக்கள் மத்தியில் நிலவிவந்த பழக்கவழக்கங்கள் வழக்காறுகள், தேசவழமைகளாகத் தொகுக்கப்பட்டன. இவ்வாறு தொகுக்கப்பட்ட தேசவழமைகள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு அவை சரியாக இருக்கிறதா என்பதைச் சரிபார்க்க அக்கால கட்டத்தில் இருந்த பன்னிரண்டு முதலியார்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அவை சரியென முதலிமார்கள் ஒப்புதல் செய்தார்கள். தேசவழமையை ஜேன் பைருஸ் என்பவர் டச்சு மொழியில் மொழி பெயர்த்தார். இதன்பின் 1708 ஆம் ஆண்டு டச்சு ஆளுநர் தேசவழமையை தமிழ் மக்களது சட்டமாகப் பிரகடனம் செய்தார். *(தொடரும்)*

## சட்டமும் சமூகமும் 67





வழக்கறிஞர் பொன். பூலோகசிங்கம்

# பெண்ணுரிமை பாதுகாக்கப்படல்

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

இளம்பெண்கள் நாளாந்தம் நீதிமன்றத்திற்கும், பொலிஸ் நிலையத்திற்கும் பெண்கள் வன்முறை தடுப்பு பிரிவு சேவை நிலையத்திற்கும் பிள்ளைகளும் கையுமாக அழைந்து திரிவதையும் இவர்களின் எதிர்காலம் சீழிந்த நிலையிலும் காணப்படுகின்ற நிலைகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளது. இவர்களுக்கு எழுத்து வடிவிலும், நூலுருவிலும் உள்ள சட்டங்களை அமுல்படுத்துவதில் ஏற்படும் சட்டப் பிரச்சினைகளுக்கு சட்டங்கள் இருந்தும் பெண்கள் நிர்கதியான வாழ்வை மேற்கொள்வது பெண் இனத்திற்கே ஓர் சாபக்கேடாக அமைகின்றது.

இன்றைய சூழலில் சட்டத்தை வலியுறுத்தி அமுலாக்குவதும் பெண் உரிமைகளைப் பாதுகாப்பதும் வெறுமனே சட்டங்களை உருவாக்குவதனூடாக மாத்திரமே ஈடேறப்போவதில்லை. இதில் தாக்கத்தை ஏற்படுத்துகிற பல காரணிகள் நிலவுகின்றன. அதாவது, கொள்கை வகுப்பாளர்களினதும் சட்டமன்ற உறுப்பினர்களினதும், சட்டத்தை வலியுறுத்தி அமுலாக்குகின்ற உறுப்பினர்களினதும், சட்டத்தரணிகள், வைத்தியர்கள் மற்றும் கல்விமான்களினதும் வெகுசன தொடர்பு ஊடகங்கள் மற்றும் பொதுமக்களினதும் (விசேடமாக பெண்களின்) தீவிரமான ஒத்துழைப்பின் அடிப்படையிலும் பெண்ணுரிமைகள் பாதுகாக்கப்படுதல் மற்றும் சட்டத்தை வலியுறுத்தி அமுலாக்குதல் ஆகியன தங்கியுள்ளன.

இத்தகைய மூலகாரணிகள் அனைத்தும் வெற்றிகரமாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் இயங்க வேண்டுமாயின் இதற்குப் போதுமான அளவு வளங்களைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அதைப்போலவே குற்றவியல் நீதிமுறைமை வினைத்திறன் மிக்கதாக மாற்றப்படவேண்டியதும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான தகவல்களும் தரவுகளும் திரட்டப்படவேண்டியதும் அரசாங்கம் ஈட்டப்படவேண்டிய கருமங்களாகும்.

## பெண்களும் சட்டங்களும் 25



சரோஜா சிவசந்திரன் (M.A.)

மகளிர் விவகார அமைச்சின் தேசிய மகளிர் குழுவின் அங்கத்தவர்




சட்டத்தை வலியுறுத்தி அமுலாக்கும் அதிகாரிகளும், சட்டமா அதிபர் திணைக்களம் அத்துடன் நீதி வழங்கப்படுகின்ற முறைமைக்கும் இடையில் முறையான தொடர்பு பேணப்படவேண்டும். முறைப்பாடுகளை சரியான முறையில் பதிந்து கொள்ளவும், முறையான விசாரணைகளை மேற்கொள்ளவும், சட்டத்திற்கிணங்க குற்றச்சாட்டுக்களை கோவைப்படுத்தும் பொருத்தமான நபர்கள் மூலமாக வழக்கை முன்வைக்கவும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சாதகமான சூழலை நீதிமன்றங்களிலும்,பொலிஸ்நிலையங்களிலும் உறுதிப்படுத்தவும், துரிதமாக நீதி வழங்கப்படவும், பால்நிலைப் பாரபட்சம் காட்டப்படாத நீதிமன்றம் நிலவுவதற்கும் ஏற்புடையவாறு முறையான தொடர்புகள் பேணப்படவேண்டும். உரிய வகையிலான பயிற்றுவித்தலும், உதவிச்சேவைகளும் தனிநபர் குழுக்களின் தீவிரச் செயற்பாடுகளும் காணப்பட்டால் மாத்திரமே இவையனைத்தையும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக அமையும். சட்டத்தை உரியவகையில் பயன்படுத்திக் கொள்ளவும் சட்டத்தை அமுலாக்குவதற்காகவும் பொலிஸ், சுகாதார சேவைகள், நீதிமன்ற முறைமை, மகளிர் அமைப்பு மற்றும் சமூகதாபனங்களின் ஒத்துழைப்பு அத்தியவசியமானதாகும். இதனூடாக பெண்ணுரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் முன்னேற்றுதல் சம்மந்தமான போராட்டத்தின் போது சட்டமானது முக்கிய ஆயுதமாக மாறும். *(தொடரும்)*



தடையற தாக்க

* 'பில்லா 2' படத்தில் கௌரவ வேடத்தில் நடிக்க நயன்தாராவிடம் பேச எண்ணியுள்ளாராம் இயக்குநர் சக்ரி.
* காமெடி கதை 'தமிழ் படம்' இயக்கிய சி.எஸ். அமுதன் தான் இயக்கும் புதிய படத்துக்கு சந்தானத்திடம் கால்ஷீட் கேட்டிருக்கிறார்.
* 'கோச்சடையான்' படத்தில் மறைந்த நாகேஷ் நடிப்பதுபோல் அவரது காட்சிகள் கிராபிக்ஸில் உருவாக்கப்படவுள்ளன.

## சினி பிட்ஸ்



யாருக்கு தெரியும்

# சிலுக்கைத் தொடர்ந்து மனிஷா கொய்ராலா



சிலுக்கைத் தொடர்ந்து மனிஷா கொய்ராலா கதை படமாகிறது. இதற்கு மானிஷா அனுமதி க்கமாட்டார் என்பதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சில்க்ஸ்மிதா வாழ்க்கையை மைய மாக வைத்து பாலிவுட்டில் 'தி டர்ட்டி பிக்சர்ஸ்' என்ற படம் உருவானது. இதற்கு வரவேற்பு கிடைத்ததையடுத்து பரபரப்பாக பேசப்பட்ட ஹீரோயின்களை மையமாக வைத்து கதைகள் உருவாக்கப்படுகிறது. இந்நிலையில் பாலிவுட் மற்றும் கோலிவுட்டில் நடித்துள்ள மானிஷா கொய்ராலா வாழ்க்கையை மையமாக வைத்து இந்தியில் 'ஹீரோயின்' என்ற பெயரில் படம் உருவாக்கப்படுகிறது.

மனிஷா கொய்ராலா வாழ்க்கையில் பல்வேறு திருப்பங்கள் நிகழ்ந்துள் ளன. இந்தியில் டாப் ஹீரோக்களுடன் ஜோடியாக நடித்து புகழ்பெற்று டாப் அந்தஸ்துக்குச் சென்றார். தமிழிலும் ரஜினி, கமல் என முன்ணி நடிகர்களுடன் ஜோடியாக நடித்தார். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு திடீரென்று நேபாளத்தைச் சேர்ந்த தொழில் அதிபரை திருமணம் செய்துகொண்டார். ஆனால் அவரது வாழ்க்கை இனிக்கவில்லை. 'என் கணவரை விவாகரத்துச் செய்யப்போகிறேன்' என்று தனது டுவிட்டர் பக்கத்தில் அறிவித்த மானிஷா திடீரென்று அதை திரும்பப் பெற்றார். சமீபகாலமாக நள்ளிரவு பார்ட்டிகளில் கலந்து கொள்ளும் அவர் குடித்து விட்டு போதை அதிகமாகி தள்ளாடும் சூழலுக்குச் சென்று விடுகிறார். இதனால் அவரது நடவடிக்கையை பாலிவுட் பத்திரிகைகள் பரபரப்பாக வெளியிட்டு வருகின்றன.

இந்நிலையில் இயக்குநர் மதுர் பண்டர்கர் 'ஹீரோயின்' என்ற படத்தை இயக்குகிறார். கரீனா கபூர் ஹீரோயின். இப்படம் மனிஷா கொய்ராலாவின் வாழ்க்கையை மையமாக வைத்து உருவாவதாகக கூறப்படுகின்றது. ஆனால் இதை இயக்குநர் மறுத்திருக்கிறார். 'நடிகையின் வாழ்க்கையை பற்றிய கதையைத்தான் எடுக்கிறேன். ஆனால் தனிப்பட்ட முறையில் எந்த நடிகையின் வாழ்க்கையையும் சித்தரிக்கவில்லை' என்றார்.

மனிஷாவின் கதையை படமாக்கினால் அதை அவர் அனுமதிக்கமாட்டார் என்று மனிஷா தரப்பில் கூறப்படுகிறது.

## மீண்டும் பாடுகிறார் விஜய்

துப்பாக்கி திரைப்படத்திற்காக இளைய தளபதி விஜய், ஒரு பாடல் பாட சம்மதம் தெரிவித்துள்ளார்.

கொலிவுட்டில் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் 'துப்பாக்கி' திரைப்படத்தில் நடித்து வருகிறார்.

துப்பாக்கியில் விஜய்யுடன் காஜல் அகர்வால் இணைகிறார். ஹாரிஸ் ஜெயராஸ் இசையமைக்கிறார்.

இந்நிலையில் இளையதளபதி விஜய், துப்பாக்கி திரைப்படத்திற்காக பாடல் ஒன்று பாட சம்மதம் தெரிவித்துள்ளார். ஹாரிஸ் ஜெயராஜ் தன்னுடைய இசையில் வெளிவரும் ஒரு பாடலுக்கு விஜய் பாடினால் நன்றாக இருக்கும் என்ற கருத்தை முருகதாசிடம் தெரிவித்துள்ளார்.

இயக்குநர் முருகதாஸ் இந்த விடயத்தை விஜய்யிடம் தெரிவிக்க, உடனே விஜய் சம்மதம் தெரிவித்துள்ளார். ஏற்கனவே இளைய தளபதி, பத்ரி, சச்சின் போன்ற சில படங்களுக்கு பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

* எந்த விஷயத்திலும் சொந்தமாக முடிவெடுக்க சினேகாவுக்கு பெற்றோர் சுதந்திரம் கொடுத்திருக்கிறார்களாம்.

* '3' படத்தின் கிளைமாக்ஸை மாற்றும்படி மகள் ஐஸ்வர்யாவிடம் ரஜினி கூறவில்லையாம்.



## ஆபிரிக்காவில் சிங்கம் - 2

சிங்கம் படத்தின் இரண்டாம் பாகத்திற்கான கதையை ஹரி தயார் செய்து வருகிறார்.

இதுவரை கிராமங்களில் படப்பிடிப்புகளை நடத்தி வந்த ஹரி, முதன் முறையாக 'சிங்கம்- 2' படத்திற்காக பாடல்கள் மற்றும் சண்டை காட்சிகளை தென் ஆப்பிரிக்கா மற்றும் நைஜிரியா உள்ளிட்ட நாடுகளில் படமாக்க திட்டமிட்டு இருக்கிறார்.

சிங்கம்- 2 நாயகன் சூர்யாவிற்கு நல்ல மதிப்பை தரும் என்று கொலிவுட் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



காதல் தீவு

## நடிக்க வருகிறார் பூஜா

தனது அப்பா விதித்த தடையை மீறி மீண்டும் நடிக்க வருகிறார் பூஜா.

'நான் கடவுள்' உட்பட பல படங்களில் நடித்திருப்பவர் பூஜா. திடீரென்று தமிழ் படங்களுக்கு முழுக்குப் போட்டு ஒதுங்கி இருந்தார். தற்போது மீண்டும் பாலா இயக்கும் படத்தில் நடிக்க வருகிறார்.

கடந்த வாரம் இயக்குநர் பாலாவைச் சந்தித்தேன். 'எரியும் தணல்' படத்தில் நடிக்க கேட்டார். திரையுலகில் என் குரு பாலா தான். நான் கடவுள் படத்துக்குப் பிறகு பல படங்களில் நடிக்க வாய்ப்பு வந்தது. ஆனால் ஏற்கவில்லை. நான் கடவுள் படத்தில் பார்வை இழந்த பெண்ணாக நடித்திருந்தேன். இந்த வேடத்தை பார்த்த எனது தந்தை 'திரையுலகில் நீ சாதித்துவிட்டாய். இனி மேல் நடிக்க வேண்டாம்' என்று கூறிவிட்டார். அவரது வார்த்தையை மீற முடியவில்லை. ஆனால் இயக்குநர் பாலா என்னை மீண்டும் நடிக்கக் கேட்டபோது மறுக்க முடியவில்லை என்கிறார் பூஜா.



நடுவுல கொஞ்சம் பக்கத்தக் காணோம்

## திகில் படத்தில் நடுங்கிய சதா

சதா நடித்த இந்தி திகில் படம் தமிழுக்கு வருகிறது. 'சில காட்சிகளில் நிஜமாகவே நடுங்கிவிட்டேன்' என்கிறார் சதா.

'ஜெயம்' படம் தொடங்கிய 'அந்நியன்', 'பிரியசகி', 'வர்ணஜாலம்' உள்ளிட்ட படங்களில் நடித்தேன். பி. வாசு இயக்கத்தில் நடித்த 'புலிவேஷம்' சில மாதங்களுக்கு முன் ரிலீஸ் ஆனது. இந்தியில் 'கிளிக்' என்ற படத்தில் கிளாமராக நடித்திருக்கிறேன். இது தமிழில் 'கிளிக் -3' என்ற பெயரில் ரிலீஸ் ஆகிறது. சங்கீத் சிவன் இயக்கி இருக்கிறார். சினேகா உல்லால், ரியாசென் ஆகியோரும் நடித்திருக்கிறார்கள். இதில் மாடல் அழகியாக நடித்திருக்கிறேன். என் வேடம் கிளாமராகவும் சவாலாகவும் அமைந்தது. திகில் படமான இதில் சில காட்சிகள் நடிக்கும்போது நிஜமாகவே நடுங்கி பயந்திருக்கிறேன். புது அனுபவமாக இருந்தது.

தமிழ், இந்தி, தெலுங்கு 3 மொழிகளிலும் என்னை ரசிகர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் துறையில் 90 சதவீதம் திருப்தி இருக்கிறது. ஸ்டார் அந்தஸ்து என்பது என்னைப் பொறுத்தவரை எட்டாக்கனியாக இருக்கவில்லை. பெரிய இயக்குநர் பெரிய நடிகர்களுடன் நடித்திருக்கிறேன். நிறைய படங்கள் வந்தாலும் தேர்வு செய்துதான் ஒப்புக் கொள்கிறேன். கமர்ஷியல் ஹீரோயினாக நடிக்கவே விரும்புகிறேன் என்கிறார் சதா.

# ஒளிக் கீற்றுகள்

தொகுப்பு: அஸ்வின்

## மார்ச் - 8 இல் வெள்ளைப் பூக்கள் வெளியீடு

நெடுந்தீவு முகிலனின் மற்றுமொரு குறும்படப் படைப்பாக வெளிவரவுள்ளது 'வெள்ளைப்பூக்கள்' குறும்படம்.

இளம் வயதில் விதவைகளாக்கப்பட்டுள்ள பருவப்பெண்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் சமுதாயத்தில் உள்ளன. அவ்வாறான பிரச்சினைகளில் ஒன்றான விரக தாபத்தையும் அவர்களை சமூகத்திலுள்ளவர்கள் பார்க்கும் விதத்தையும் கருப்பொருளாகக் கொண்டு இக்குறும் படத்தினை இயக்கியுள்ளார் நெடுந்தீவு முகிலன்.

முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் இளம் விதவைப் பெண்களின் வாழ்வியல் சிக்கல்களை எடுத்துக் காட்டும் இப்படத்தினை உலக மகளிர் தினமான மார்ச் 8 ஆம் திகதி வெளியிடுகின்றார் முகிலன்.



யாழ். ஞானம்ஸ் விருந்தினர் விடுதியில் முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும் இவ் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

டெல்பிற் மூவிஸ் தயாரித்துள்ள இப்படத்தின் ஒளிப்பதிவை கோவை அமலனும் படத் தொகுப்பை எஸ். சிவநேசனும் செய்துள்ளனர். இசைப்பிரியன் இசையமைத்துள்ளார்.

## சலனம்




**ஜீ.ஏ. ஜானின்** தயாரிப்பில் உருவான 'சலனம்' என்னும் குறும் படம் எதிர்வரும் 7 ஆம் திகதி யாழ்ப்பாணம் ஞானம்ஸ் விருந்தினர் விடுதியில் வெளியிடப்படவுள்ளது.

உங்களில் ஒருத்தி தன் வாழ்க்கையில் சந்தித்த அனுபவங்களை ஒவ்வொரு பெண்ணுடனும் பகிர்ந்து கொள்ளும் ஓர் படைப்பாக இக் குறும்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கான கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியுள்ளார் ஜீ.ஏ. ஜெலான்.

இப் படத்தின் ஒளிப்பதிவை கோவை அமலனும், படத்தொகுப்பை எல். ஸ்வென்ஸ்சும் ஒலிப்பதிவை ரதீசனும் (மதுராஸ் ஒலிப்பதிவுக் கலையகம்) பின்னணி இசையை கே. யோகேஸ்வரன் எல். ஸ்லென்ஸ் ஆகியோரும் செய்துள்ளனர்.

# யாழ்ப்பாணத்தில் திரை அரங்குகளின் தோற்றமும் வளர்ச்சியும்

### றீகல் திரை அரங்கு - (1935 - 1980)

கொட்டகைகளில் சினிமா பார்த்து வந்த மக்களை மகிழ்விக்கும் முகமாக 1935ஆம் ஆண்டு டபிள்யூ. தம்பு என்பவரால் யாழ்ப்பாணத்தில் முதலாவது திரை அரங்கு என சொல்லத்தக்கதாக றீகல் திரை அரங்கினை உருவாக்கினார். ஆரம்பத்தில் அரைச்சுவர் வைக்கப்பட்டு தகரக் கொட்டகையாகவே ஆரம்பிக்கப்பட்டு பின் 1960 களில் பெரிய கட்டிடமாக சகல வசதிகளுடனும் சிறப்பாக இயங்கியது. ஆரம்பத்தில் றீகலில் ஆங்கிலப் திரைப்படங்களே அதிகமாகத் திரையிடப்பட்டன. ஆனாலும் இடையில் இரண்டு மணித்தியால தமிழ்ப்படங்களும் ஓடத்தவறவில்லை. இந்த வகையில் றீகல் திரையரங்கில் 'சார்ஸ் செஸ்ரின்' ( Charst Sesten) என்பவரது இயக்கத்தில் வெளிவந்த 'பென்கர்' (Ben - hur) என்ற ஆங்கிலப்படமே முதலில் திரையிடப்பட்டது. அன்று இப்படத்தை பார்ப்பதற்கு பாடசாலை மாணவர்களையும் அழைத்து வந்துள்ளனர். றீகல் திரை அரங்கானது யாழ். கோட்டைக்கு முன்பாக நூலகத்துக்கு அருகில் அமைந்து இருந்ததால் இங்கு திரைப்படம் திரையிடப்பட்டால் ஊர்காவற்துறைக்கு கேட்குமாம் என்று பழையவர்கள் கூறுவர். ஏனெனில் அந்தளவு ஒலியமைப்பு அங்கு (சவுண்ட் சிஸ்டம்) காணப்பட்டதாம். ஆரம்பத்தில் முப்பது அடி நீளமான வெண்திரையில் பயன்படுத்தப்பட்ட கற்பூர நாடா எனப்படும் மக்னீசியத்தை எரித்து அதிலிருந்து வரும் ஒளியில் இருந்து படம் திரையிடப்பட்டது. இதுவே புது அனுபவம் என்பதால் ஆரம்பத்தில் இயக்குனர்கள் (ஒப்பரேட்டர்) பெரும் சிரமத்தைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டது. ஆரம்பத்தில் ஒரு படத்திற்கு பதினாறு ரீல் பெட்டிகள். எட்டு அல்லது பத்து நிமிடம் ஒரு ரீல் பெட்டி திரையிடப்படும். இத் திரைப்படங்களை சிலோன் தியேட்டர் கூட்டுத்தாபனமே றீகலுக்கு விநியோகித்திருந்தன. ஆரம்பத்தில் மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்ற திரை அரங்கம் என்பதால் ஒவ்வொரு படங்களுக்கும் சனக்கூட்டம் முண்டியடித்தது. ஒரு நாளுக்கு ஐந்து, ஆறு காட்சிகள் காண்பிக்கப்பட்டன, சில வேளைகளில் ஓய்வில்லாமலும் காண்பிக்கப்பட்டன.


றீகல் திரையரங்கின் தோற்றம்

இவ்வாறாக றீகல் திரையரங்கு என்றால் ஆங்கிலத் திரைப்படம் பார்ப்பதற்கு பேர் போன இடமாக காணப்பட்டது. 1960 களின் பின் சிறிது சிறிதாக தமிழ்த் திரைப்படங்களும் திரையிடப்பட்டது. சிறுவர் முதல் பெரியவர் வரை யாழ் நகரில் தெரிந்த ஒரே இடம் றீகல் திரையரங்குதான் இங்கு திரையிடப்பட்ட ஆங்கிலத்திரைப்படங்கள் மூலம் ஆங்கில அறிவை வளர்த்துக் கொண்டார்களாம் என்பது அங்கு பார்த்தவர்களின் கருத்து. மேலும் திரைப்படங்களை விளம்பரம் செய்வதற்கு பறையடிக்கப்பட்டும், மாட்டுவண்டியில் சென்று துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தும் மக்கள் மத்தியில் திரைப்படங்களை அறிமுகம் செய்தனர். மாட்டுவண்டியில் இருபக்கமும் திரைப்பட விளம்பர போஸ்ரர்கள் கட்டப்பட்டு ஒருவர் அப்படம் பற்றி விபரித்துக் கொண்டு செல்வார்கள். அந்த அளவுக்கு சிறந்த திரைப்படங்கள் அங்கு திரையிடப்பட்டன. இவ்வாறாக சிறப்புற்று விளங்கிய றீகல் திரையரங்கு கோட்டைக்கு அண்மையில் அமைந்து காணப்பட்டதால் நாட்டில் ஏற்பட்ட வன்முறையாலும் அதனால் ஏற்பட்ட கடும் குண்டு வீச்சினாலும் 1980 களில் திரை அரங்கம் தனது இயக்கத்தினை நிறுத்திக் கொண்டது. இருப்பினும் றீகல் திரையரங்கு கட்டிடம் மட்டும் கோட்டையை பார்த்த வண்ணம் மண்றியடித்த புதருக்குள் பழைய ஆங்கிலத் திரைப்பட போஸ்டர்களுடன் காணப்பட்டது. ஆனால் கடந்த சில வருடங்களுக்கு முன் அக்கட்டிடமும் இடித்து தரைமட்டமாக்கப்பட்டுவிட்டது. தற்பொழுது அவ் உரிமையாளரின் வாரிசுகள் அதில் 'பல்வணிகத்தளம்' கட்டப்போவதாகவும் அதில் மீண்டும் றீகல் திரையரங்கு வரும் என்றும் கூறினார்கள்.

(தொடரும்)

- ஆர். அஜித்

# திரை விமர்சனம்




சின்ன சின்ன விசயத்திற்காக சண்டைப் போட்டு பிரிந்து விடும் இன்றைய காதலை, நகைச்சுவை கலந்து படமாக இயக்கி வெற்றி பெற்றுள்ளார் இயக்குனர் பாலாஜி மோகன்.

நீண்ட நாட்கள் கழித்து நடிகர் சித்தார்த் கதாநாயகனாக நடித்து உள்ளார். படத்திற்கு இணை தயாரிப்பாளராகவும் உள்ளார். இந்தப் படத்தில் தற்போது தமிழில் முன்னணியில் நிற்கும் நடிகை அமலாபால் கதாநாயகியாக நன்றாக நடித்து உள்ளார். தொடர்ந்து இதுபோல படங்களில் நடித்தால் நடிகை ரேவதி போல சிறந்த நடிகைக்கான இடம் கிடைக்கும்.

செல் பேசி ,இணைய முகப்பு புத்தகம், நண்பர்கள் இவற்றின் காரணமாக இன்றைய காதலர்கள் சந்திக்கும் பிரச்சினைகளை நன்கு கையாண்டு உள்ளார் இயக்குனர் பாலாஜி மோகன்.

காதலில் சொதப்புவது எப்படி? அதில் சொதப்புவது ஆண்களா ? பெண்களா ? என்ற பட்டி மன்றம் பார்ப்பதுப் போன்ற உணர்வு வருகின்றது . நேசிப்பது வெறுப்பது இரண்டிலும் பெண்கள்தான் மிகவும் தீவிரமாக இருப்பார்கள். ஆண்களை அவர்களுடன் இருக்கும் நண்பர்கள் உசுபேத்தி காதலில் சொதப்பச்செய்து விடுகிறார்கள். இன்றைய இளைஞர்கள் பலர் குடிக்கு அடிமை ஆகிறார்கள். குடியை பெண்கள் யாருமே விரும்புவதில்லை. நண்பர்களின் வற்புறுத்தலில் குடித்ததன் காரணமாக காதலில் சொதப்பி காதலியை இழந்த கதை நிறைய உண்டு.

அதை இளைஞர்களுக்கு உணர்த்தும் விதமாக திரைப்படத்தில் காட்டி உள்ளார். புரிதல் இல்லாமல் சிறு சண்டைப் போட்டுப் பிரியும் காதலர்கள் பற்றிய கதை. காதலில் சொதப்புவது எப்படி? என்று, படத்தின் பெயர் எதிர்மறை சிந்தனையாக உள்ளதே என்று நான் யோசித்தேன். ஆனால் இந்தப் படம் பார்க்கும் காதலர்கள், சொதப்பாமல் காதலிப்பது எப்படி? என்பதை உணர்த்துகின்றது. இப்படத்தில் பாடல்கள் அனைத்தும் மெல்லிசையாகவுள்ளன.

அமலாபால் பெயர் பார்வதி, பார்வதியின் அம்மா அப்பா இருவரும் பிரிந்து வாழ்கின்றனர். விவாகரத்து வாங்க முயல்கின்றனர். அப்பா அம்மா பிரிவு பார்வதியின் மன நிலையை வருத்தப் படுத்துகின்றது. அந்த வருத்தம் அவள் காதலில் பிரதிப்பலிக்கின்றது. காதலனுடன் சண்டையிட நேருகின்றது. பார்வதியின் தாத்தா பாட்டிக்கு எண்பது வயதுத் திருமண நிகழ்வு வருகின்றது. பிரிந்து வாழும் தந்தையை பார்வதி திருமணத்திற்கு அழைக்கின்றாள். தந்தையாக நடிகர் சுரேஷ் நன்றாக நடித்து உள்ளார்.

மாமனாரின் எண்பது வயதுத் திருமணத்திற்கு வந்து பிரிந்த மனைவியை சந்திக்க பாசம் வந்து அன்பு மேலிட விவாகரத்து பெறும் எண்ணத்தை கைவிட்டு இணைகின்றனர். கருத்து வேறுபாடு வந்தால் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும். பேசாமல் இருந்து பிரிவது தவறு. 'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை' என்ற கருத்தை நன்கு உணர்த்தி உள்ளார்.

காதலில் மட்டுமல்ல குடும்பத்தில் சொதப்பாமல் இருபது எப்படி? என்பதையும் உணர்த்துகின்றது. படத்தில் ஆபாசம் நடனம், வன்முறை, வெட்டுக் குத்து, குத்துப் பாட்டு எதுவும் இல்லாமல் தரமாக மென்மையான காதலை மிக மேன்மையாக வடித்துள்ளார் இயக்குநர் பாலாஜி.

மூன்று தலைமுறைகளின் ஆண் - பெண் உறவு முறையில் அதாவது கணவன் - மனைவி நிலையில் மாறிவரும் படிநிலைகளை இப்படம் காட்டுகின்றது.

தாத்தா பாட்டி திருமண பந்தம் இறுதி மூச்சு வரை இணைந்துள்ளது. அப்பா அம்மா தலைமுறை பிரிய முயலுகின்றது. பேரன் பேதி தலைமுறை உடனே பிரிந்து விடுகின்றது என்ற கருத்தை வலியுறுத்துகின்றார். காதல் கிடைப்பது அரிது கிடைத்த காதலை சொதப்பி இழந்து விடக் கூடாது. சிறு சிறு விசயங்களைப் பெரிதுப்படுத்தி காதலை இழந்து விடாதீர்கள்.

இப்படி பல்வேறு தகவல்களை படத்தில் வழங்கி உள்ள இயக்குனர் பாலாஜி மோகனுக்குப் பாராட்டுக்கள். வழக்கமான தமிழ்த் திரைப்படப் பாணியில் இருந்து மாறுபட்டு வித்தியாசமாக சிந்தித்து, படத்தை நன்றாக வழங்கி உள்ளார்.

இப்படத்தின் கதையை ஆரம்பத்தில் குறும்படமாகத் தயாரித்து இணையத் தளங்களில் பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்ட இயக்குநர் பாலாஜி மோகனின் இந்த முயற்சி பாராட்டத்தக்கதாகும்.

# மனதை கொள்ளை கொள்வது எப்படி?

பெண்களின் மனதை கொள்ளை கொள்வது எப்படி? என்பது அநேக ஆண்களின் கவலை.என்னென்னவோ செய்தும் இந்த பெண்களை எளிதில் கவர முடியவில்லையே என்பது தான் இன்றைய தலைமுறை இளைஞர்களின் ஆதங்கம்.

இதற்காக எத்தனையோ ஆண்கள் தங்களின் சுயத்தை இழந்து அநேக வேடங்களை போடுகின்றனர். ஆனால் இந்த நடிப்பினை



பெண்கள் எளிதில் இனம் கண்டு கொள்வதால் அநேக ஆண்களின் முயற்சி தோல்வியிலேயே முடிகிறது. உண்மையாக இருந்தால் மட்டுமே பெண்களை எளிதில் கவரமுடியும் என்று பலருக்கு தெரிவதில்லை. பெண்களை மனதை கவருவது எப்படி என்பது குறித்து உங்களுக்காக சில யோசனைகள்:

நாம் எதற்காகவாவது அதீத முயற்சி செய்தால் அது கிடைக்கும் வரை நமக்கு போராட்டம் தான். பெண்கள் விடயத்தில் இது ஒரு படி மேலாகவே இருக்கும்.

பெண்களை கவர நீங்கள் பெரும் முயற்சி செய்யாமல் இருந்தாலே வெற்றி உங்கள் பக்கம் தான். இதுதான் பெண்களை கவருவதற்கான முதல் ரகசியம். நீங்கள் உங்கள் வேலையில் உண்மையான ஈடுபாட்டுடன் செயல்பட்டு வெற்றி பெற்றாலே அனைவரின் பார்வையும் உங்கள் பக்கம் திரும்பும்.

பெண்களின் கவனத்தையும் எளிதில் கவரலாம். இந்த ரகசியத்தை புரிந்து கொள்ளாமல் ஏராளமான ஆண்கள் தேவையற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு பெண்களிடையே வெறுப்பை சம்பாதிக்கின்றனர்.

பணமும், விலை உயர்ந்த பரிசுப்பொருட்களும் கொடுத்தால் பெண்களை எளிதில் கவர்ந்து விடலாம் என்று அநேக ஆண்கள் தவறாய் கணக்கு போடுகின்றனர்.

நீங்கள் பணத்தினால் பெண்களை கவர முயலும் பட்சத்தில் உங்களை விட உங்கள் பணத்தின் மீது தான் பெண்களின் கவனம் இருக்கும். ஆகவே உண்மையான புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி பெண்களின் அபிப்பிராயத்தை பெற முயற்சி செய்வதே சிறந்த வழி.

பெண்களின் மனதை கவரவேண்டும் என்பதற்காக எத்தனையோ ஆண்கள் பகீரத பிரயத்தனம் செய்கின்றனர். அதையெல்லாம் கண்டு வெறுப்புற்றிருக்கும் பெண்களிடம், நீங்களும் பழைய பாணியை பின்பற்றி முயற்சி செய்தால் கதைக்கு உதவாது.

எனவே இயல்பாக இருந்து உங்களின் புத்திசாலித்தனத்தை வெளிப்படுத்துங்கள்.

பெண்களை கவர வேண்டும் என்பதற்காக எதையும் மிகைப்படுத்தி பேசாதீர்கள். நிறைய படித்து விசய ஞானத்தோடு பேசுங்கள். உலக நடப்புகளை கதைத்துக் கொள்ளுங்கள்.

என்ன தான் புத்திசாலியாக இருந்தாலும் தோற்றத்திலும் சிறிது கவனம் செலுத்த வேண்டும். சுத்தமான உடை, கம்பீரமான தோற்றம் போன்றவையும் ஆண்களைப் பற்றி பெண்களிடையே ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்தும்.

உங்களின் தோற்றத்திற்கும் செயல்பாட்டிற்கும் ஒத்துப்போக வேண்டும். அதற்காக மிகைப்படுத்தப்பட்ட அலங்காரமோ, செயல்பாடுகளோ தேவையில்லை. சுத்தமாக இருங்கள். உங்கள் எண்ணங்களை இயல்பாய் வெளிப்படுத்துங்கள்.

அத்தகைய ஆண்களைத்தான் பெண்களுக்கு மிகவும் பிடிக்கும். பெண்களின் மனதை புரிந்து கொள்வதென்பது எவராலும் முடியாது. எத்தனையோ அறிஞர்களும், ஞானிகளும் கூட இந்த விடயத்தில் தோற்றுத்தான் போயிருக்கின்றனர். ஆண்களின் எண்ணத்திற்கு எதிராகத்தான் அநேக பெண்கள் சிந்திக்கின்றனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

தலைமுறை தலைமுறையாக பெண்களின் மனதைக் கவர ஆண்கள் முயற்சி செய்து கொண்டு தான் இருக்கின்றனர். என்னதான் பெண்களுக்குப் பிடிக்கும்? என்று குழம்பித்தான் போகின்றனர் ஆண்கள்.

இன்றைய 21ஆம் நூற்றாண்டு இளைஞர்களிடையும் இந்த சந்தேகம் இருக்கத் தான் செய்கிறது. எனவே மேற்கண்ட ஆலோசனைகளை பின்பற்றினாலே நீங்கள் பெண்களின் உள்ளம் கவர் கள்வனாவது நிச்சயம்.




சைக்கிளில் வந்தேன் 'ஹாய்' என்றாள்
பைக்கில் வந்தேன் 'மச்சான்' என்றாள்
காரில் வந்தேன் 'டார்லிங்' என்றாள்
அத்தனையும் ஓசி என்றேன் 'அண்ணா' என்றாள் ...!

ஆசிரியர்:- பாம்புக்கு என்ன நோய் வரும் என்று தெரியுமா?
மாணவன்:- கண்டிப்பாக புற்று நோய்தான் வரும். ஏனென்னா அது எப்பவும் புற்றுக்குள்ளேயே இருக்குது.


*பல் வலி என்றால் பல்லைப் புடுங்கலாம்.*
*கண் வலி வந்தால் கண்ணைப் புடுங்கலாமா?*

**பொலிஸ்காரன்:-** வாகனத்தை நிறுத்தும்படி விசிலடித்தேன். ஏன் நிறுத்தலே ..?
**சாரதி:-** நான் பிறேக் போட்டே வண்டி நிற்கேல்ல விசிலடிச்சா நிற்கப் போகுது...

**டாக்டர்:-** நான்தான் உங்களுக்கு கால் ஆபரேஷன் பண்ணப்போற டாக்டர்.
**நோயாளி:-** அப்ப மீதி முக்கால் ஆபரேஷனை யார் பண்ணுவாங்க?



## பொரி விளங்கா உருண்டை



**தேவையான பொருட்கள்**

புழுங்கலரிசி - 1 படி (நன்றாக பொரிய வறுத்து அரைத்தது)
பொட்டுக்கடலை மா - 1/4 படி
தேங்காய் - 1 (துருவியது)
வெல்லப்பாகு தயாரிக்க
வெல்லம் - 1 கிலோ
சுக்கு - ஒரு துண்டு
ஏலக்காய் - 4

**செய்முறை**

வெல்லத்தை கொஞ்சம் தண்ணீர் சேர்த்து சுக்கை தட்டி, ஏலக்காயை பிய்த்து போட்டு பாகு போல காய்ச்சி வடிகட்டி வைக்கவும்.

தேங்காய் துருவியதை நெய்யில் வறுத்து வைக்கவும்.

பின் அரிசிமா, பொட்டுக்கடலை மா, தேங்கா அனைத்தும் கலந்து கொஞ்சம் வெல்லப் பாகை ஊற்றி உருண்டையாக பிடிக்கவும்.

சத்தான பொரி விளங்கா உருண்டை ரெடி.

நொறுக்குத் தீனி என்றால் சிப்ஸ், பப்ஸ்தான் என்று இல்லை. இந்த மாதிரி பொரி விளாங்கா உருண்டைம்தான். இப்படியொரு தின்பண்டம் இருக்கிறதே பல குழந்தைகளுக்கு தெரியாது. உடலுக்கு சத்தான மிகவும் ருசியான இதை வீட்டிலேயே சுலபமாக செய்யலாம்.

## HOME டிப்ஸ்

- 1 மூடி எலுமிச்சையைப் புளித்த தயிரில் தோய்த்து கரைபட்ட இடத்தில் தேய்க்கவும். பின்னர் அந்தப் பகுதியின் மீது ஆவி படியும்படி பிடித்தால் கறை போகும்.
- பழுத்த தக்காளி / கொய்யாவை இரண்டாக வெட்டி கேசச் சாயம் படிந்த இடத்தில் தேய்க்கவும். அல்லது சிறிது சுண்ணாம்பை / சாக்கட்டியை அந்த இடத்தில் தேய்க்கவும். வெந்நீரில் துணியைச் சிறிது நேரம் ஊற வைத்து பிறகு துவைக்கவும்.
- வினிகரில் 1/2 மணி நேரம் கறை படிந்த துணியை ஊற வைக்கவும். அதிலிருந்து எடுத்து கறை படிந்த இடத்தில் முகப் பவுடர் தூவவும். மறுமுறையும் வினிகரில் ஊறவைத்துத் துவைக்கவும்.
- 1 தேக்கரண்டி சிட்ரிக் அசிட், 1 தேக்கரண்டி உருளைக் கிழங்கு சாறு, 1 தேக்கரண்டி உப்பு, 1/2 தேக்கரண்டி சர்க்கரை கலந்து கறைபட்ட இடத்தில் 5 இலிருந்து 7 நிமிடங்கள் வரை தேய்க்கவும். நல்ல சோப்பு பவுடர் போட்டுத் துவைக்கவும்.
- வால் பேப்பரில் (wall paper) எண்ணெய்க் கறையைப்போக்க அதன்மீது ஒரு பிளாட்டிங் பேப்பரை வைத்து சூடான இஸதிரிப் பெட்டியை வைத்து அழுத்தவும்.
- துணியிலிருந்து மை கறை போக உப்புக்கலந்த எலுமிச்சைச் சாறு அல்லது சிறிது தயிர் தேய்த்து 10, 15 நிமிடங்கள் ஊற வைத்துத் துவைக்கவும்.
- மெழுகு கறை போக - துணியை குளிர் சாதனப் பெட்டியில் சிறிது நேரம் வைக்கவும். கூர்மங்கிய கத்தியால் மெழுகைச் சுரண்டி எடுத்துத் துணியை உள் பக்கம் திருப்பி இஸ்திரி செய்யவும்.
- ஆடைகளிலிருந்து கறையைப் போக்க இரண்டு மூன்று ஆஸ்பிரின் மாத்திரைகள் கரைத்த தண்ணீரில் ஊற வைத்துத் துவைக்கவும்.
- நகப் பாலிஷ் / மை கறை விரல்களிலிருந்து போக ப்யூமிக் கல்லை (Pumic stone) வைத்துத் தேய்க்கவும்.




மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
"யாழ் ஓசை" வீரகேசரி கிளைக் காரியாலயம்
117,புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# சடுதியாக ஏற்படும் பிரச்சினையை எதிர்கொள்ள முடியாதவர்களே தற்கொலைக்கு முயற்சிக்கிறார்கள்

**யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த 12 வருடங்களாக உளவளத்துணை ஆலோசராக இருந்து சேவையாற்றிவரும் நா. நவராஜ், யாழில் அதிகரித்துவரும் தற்கொலைகள், அதனை தடுப்பதற்கான வழிவகைகள் பற்றி யாழ்ஓசைக்கு வழங்கிய விசேட செவ்வி....**

## ■ உளவளத்துணையாளர் நா. நவராஜ்

**கேள்வி :- உங்களது நீண்டகால அனுபவத்தின் படி உளவளத்துணை என்ற எண்ணக்கரு பற்றிய விளக்கம் சமூகத்தில் எவ்வாறான செல்வாக்கைச் செலுத்துக்கின்றது என்பது பற்றிச் சற்று விளக்கமாகக் கூறுங்கள்?**

**பதில்:-** நாம் ஒவ்வொருவரும் இவ்வுலக வாழ்க்கையில் எம்மை உயர்த்தி வெற்றி பெற்று இன்பம் அடையவே விரும்புகின்றோம். அதை நோக்கியே எமது வாழ்வின் பயணம் தொடங்குகின்றது. எனினும் எமது விருப்பத்தை இலகுவாகப் பூர்த்திசெய்து வாழ்வில் உயர்ந்து நிற்பதற்கு வாழ்க்கைப்பாதை இலகுவில் அனுமதிப்பதில்லை. காரணம் வாழ்க்கை என்ற பாதை ஒரே சீராகக் 'காபட்' றோட்டுப்போல இருப்பதில்லை.

அது வண்டிச் சக்கரம் போலச் சுழன்றபடி இன்பம் துன்பம், வெற்றி தோல்வி என்ற இருநிலைகளுக்குள் எம்மை இட்டுச் செல்லுகின்றது. எமக்கு இன்பம் வரும் போது இருக்கும் மனநிலை உளசக்தி துன்பம் வரும் போது இருப்பதில்லை அது தன்னுடைய நிலையில் இருந்து தளர்ந்து விடுகின்றது. இவ்வாறு தளர்வதற்குக் காரணம் நாம் கொண்டிருக்கும் தாங்கு திறனில் உள்ள வேறுபாடேயாகும். உதாரணமாக ஒருவருடைய தாங்கு திறன் ஒரு எவர்சில்வர் கப் கொள்ளளவிருக்கும் என்றால் இது இன்னொருவருக்கு இரண்டு அல்லது மூன்று எவர்சில்வர் கப் இணைந்த கொள்ளவாக இருக்கலாம்.

ஒரு விபத்தையோ அல்லது கசப்பான சம்பவத்தையோ எதிர்கொள்ளும் போது அதனால் ஏற்படும் விளைவுகள் தாக்கங்கள் மாறுபடுவதற்குக் காரணம் தாங்குதிறனின் வித்தியாசம் எனலாம். இதன் அடிப்படையில் பார்க்கின்ற போது எமக்கு வரும் பிரச்சினை தாங்குதிறனுக்கு உட்பட்டு அமையுமானால் அதனை நாமே சமாளித்து எதிர்கொள்வோம். ஆனால் பிரச்சினை எமது தாங்குதிறனுக்கு அப்பாற்படுமானால் அதனைத் தீர்க்கும் வலு எம்மிடம் இருந்தாலும் அதனைக் கண்டுகொள்வதற்கு எமக்கு



இன்னொருவரது உதவி தேவைப்படுகின்றது. ஏனெனில் பிரச்சினை தாங்குதிறனுக்கு அப்பாற்படும் போது எமது பிரச்சினைக்குள் நாம் மூழ்கி விடுகின்றோம். அதனை விட்டு வெளியில் வந்து நின்று சிந்திக்கும் தன்மைபோய் பிரச்சினைக்குள்ளே நின்று சுற்றிக் கொண்டிருப்போம்.

இதனால் பிரச்சினையில் இருந்து வெளியே தூக்கி, அதனை எதிர்கொள்வதற்குரிய வலுவைச் சக்தியைக் பிரயோகிப்பதற்கு எம்மைத் தயார்ப்படுத்த இன்னொருவரது உதவி எமக்குத் தேவைப்படுகின்றது. எமக்குத் தேவைப்படுகின்ற இவ்உதவியினை வழங்குவதை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்து வரும் துறையே உளவளத்துணையாகும். இதனை ஒருவர் தனது உளவளங்களின் விருத்தியை நோக்கிச் செல்லுகின்ற பயணத்தின்போது அவர் தான் சந்திக்கும் தடைகளை வெற்றிகொள்ள அவருக்குக் அளிக்கும் ஒரு தொடர்செயற்பாட்டு உதவி என்று வரைவிலக்கணப்படுத்தலாம். இதற்கு நம்பிக்கையான உறவு முக்கியமானது.

முன்னைய காலத்துடன் ஒப்பிடும் போது உலகமயமாதல், கைத்தொழிற்புரட்சி, சமூகக் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்கள் போன்றவற்றால் அதிக முக்கியத்துவம் உடைய துறையாக உளவளத்துணை வளர்ச்சியடைந்து வருகின்றது. உதாரணமாக இன்றைய எமது வாழ்க்கை முறை வேகமானதாக நேரமில்லை என்ற முணுமுணுப்பைக் கொண்டதாக இருப்பதால் எமது பிரச்சினையைப் பகிர்ந்து கொள்ளவோ அல்லது இன்னொருவரது பிரச்சினையை இருந்து ஆறுதலாகக் கேட்கவோ எமக்கு முடிவதில்லை அத்தோடு நாம், மற்றவர்கள் மீது நம்பிக்கை வைப்பதை இழந்த ஒரு சமூகமாக மாறிக்கொண்டிருக்கின்றோம் இதனால் மனசாரக் கதைத்தல், மனந்திறந்து கதைத்தல் என்பன குறைந்து விட்டது. இன்று உளவளத்துணையாளர் ஏற்றிருக்கும் பாத்திரத்தை முன்னர் கிராமங்களில் மதகுருமார், ஊர்பெரியவர்கள் குடும்ப அங்கத்தவர்கள் மேற்கொண்டனர். இன்று இவை மாறிவிட்டது. இதனை செய்வதற்குத் தொழில்ரீதியான ஒருவர் தேவை என்ற நிலை உளவளத்துணையாளர்களைப் பிரசவித்துள்ளது.

**கேள்வி:- உங்களிடம் வருகின்ற துணைநாடிகள் அதாவது உளசமூகப்பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்கள், பெரும்பாலும் எந்தவகையான உளசமூகப்பிரச்சினைகளால் பாதிப்படைந்திருக்கின்றனர் எனக் கூறமுடியுமா?**

**பதில்:-** எம்மிடம் வரும் துணைநாடிகளில் பலர் மனச்சோர்வு நிலைக்கு உட்பட்டவர்களாகவும் பதகளிப்பு, மெய்பாட்டு முறைப்பாடுகளை (தமக்குள் அடக்கிவைக்கும் பிரச்சினைகளால் வெளிப்படும் உடலியல் முறைப்பாடுகளை) உடையவர்களாகவும் கணப்படுகின்றனர். இந்த உளநோய்களின் பின்னணியில் இருக்கும் காரணங்களை ஆராய்ந்தால், பெரும்பாலும் பொருளாதாரக் கஷ்டம், வறுமை, மதுபோதை தொடர்பான பிரச்சினைகள், வீட்டுவன்முறைகள் போன்றவற்றோடு திருமணத்துக்குப் புறம்பான உறவுச்சிக்கல்களும், பாலியல் சார்ந்த பிரச்சினைகளும் காணப்படுவதை அவதானிக்க முடிக்கிறது.

நேர்கண்டவர் : எஸ். நதிபரன்

**கேள்வி:- நீங்கள் சந்தித்த, சந்திக்கும் துணைநாடிகளில் காணப்படும் பிரச்சினைகளில் உங்களுக்குச் சவாலாக அமைந்திருந்த பிரச்சினைகள் அல்லது அவற்றால் வெளிக்காட்டப்படும் அறிகுறிகள் பற்றி விளக்க முடியுமா?**

**பதில்:-** துணைநாடிகளின் பிரச்சினை என்று குறிப்பிட்டுக் கதைக்கும்போது அது உளவளத்துணையின் ரகசியம் பேணல் என்ற ஒழுக்க விதிகளுக்குப் புறம்பானதாக ஆகிவிடலாம். எனவே பொதுப்படையாகச் சவால்கள் என்று நோக்கினால் உளவளத்துணை என்பதே சவாலான ஒரு செயற்பாடு என்றுதான் நான் கருதுகின்றேன்.

முன்பின் தெரியாத ஒருவருடன் நல்லுறவை வளர்த்து உரையாடி அவர் மனத்திருக்கும் அந்தரங்க விடயங்களைக் கூட வெளிப்படுத்தி அவரது பிரச்சினைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து சரியாக மதீப்பிடு செய்வது என்பது நீண்டகாலம் வேலை செய்வதால் இலகுவானதாக இருக்கின்றது என்று நான் பொய் சொல்லமாட்டேன்.

இன்னொருவரது மனத்தோடு சம்பந்தப்பட்ட விடயம் என்பதாலும் உடல் நோய்நிலைமைகளைக் கண்டு பிடிப்பதுபோல அவரது மனத்தில் இருப்பதை எக்ஸ்றே மூலமோ ஸ்கான் மூலமோ கண்டுபிடிக்க முடியாது என்பதாலும் அதனை அவரே வெளிப்படுத்த வேண்டும் என்பதாலும் நாம் சந்திக்கும் ஒவ்வொரு துணைநாடியும் ஒவ்வொரு வகையில் சவாலானவர்களாகவே இருக்கின்றனர்.

(14ஆம் பக்கம் பப்க்க)

## மாதிரிக் கவிதைகள்

என் வாழ்வு
உனக்கோ
நகைச்சுவை
பெட்டகம்

***

முடியா என்
இரவிற்கு
முழு விளக்கம்
கொடுத்தவள் நீ....

***

நீ இரவானாய்
எனக்கு அது
பட்ட பகல்...
உன்னிடம் தானே
ஆயிரம் நிலாக்களின்
ஊர்வல தரிசனம்

***

உனக்கு சாத்தும்
காகிதப் புடவைகளுக்கு
பட்டாபிஷேகம்
நடத்துகிறேன்

***

வார்த்தைகளை
நீ ஊமையாக்கினாய்
வனவாசம்
கண்டது
எனது இரவுகள்

***

யாரும் என்னை
நம்பாதமையால்
நிலவையும்
வஞ்சி என
வெறுத்து விட்டேன்

***

என்னை வனையும்
உனது குணம்
எனை ஏமாற்றுமென
யார் கண்டது ...

***

நான் சிலவேளை
உன்னை நினைப்பேன்
நீ பலவேளை
என்னை அணைப்பாய்

***

முன்னழகில்
இல்லாத மாற்றங்களை
பின்னழகில்
பிறப்பித்தவள் நீ

மருதங்கேணியூர்
**- வே.வே. அகிலேஸ்வரன்**

## மெய்ப்பாடு

அன்பே!
புகுமுகம் புரிதலும்
பொறிநுதல்
வியர்த்தலும்
நகுநயம்
மறைத்தலும்
அதை நீ
சிதைவு பிறர்க்கு
இன்மையொடு
தகுமுறை நான்கும்
ஒன்றிணையே
உணர்த்தும்

அன்பே!
உன்மனம்
இசைந்ததை
கட்டவிழத்துடிக்கும்
மொட்டுப் போல
புன்னகை பூக்கிறாய்
ஓ! இதுதான்
புகுமுகம் புரிதலா?

இயற்கை
மலர்களில் எழுதிய
பனிக்கவிதை போல
நாணத்தால்
உன் நெற்றியில்
வியர்வைத் துளிகள்
ஆ!
உனக்குள்ளும் காதல்
கனிந்துவிட்டது
ஆகா! இதுதான்
பொறிநுதல்
வியர்த்தலா?

இத்தனை மெய்ப்பாடும்
இங்கிதமாய் வெளிப்பட்ட
ஏனோ ...?
நகுநயம் மறைக்கிறாய்
ஓ!
அன்பின் பரிமளிப்பில்
புன்னகை தோன்றுவதை
மறைக்க முயலுகிறாய்
அற்புதம்!
உந்தன் முயலுதல் கூட
மெய்ப்பாடாகிறதே!

நறுமுகையே! குளிர்நிலவே!
உன்னை
மெய்தொட்டுப்
பயிலவேண்டும்
வா! அன்பே! வா!

வேலெறிந்த விழிகளில்
காதல் வந்து சேர்ந்ததோ?
இரும்புபோன்ற
மனத்திண்மை
இழகிமெல்லக் கனிந்ததோ?
உறுதி மெல்லக்
குலைந்ததை
மறைக்க நீயும் முயலுகிறாய்
இதைத்தான்
பிறர்க்கு இன்மையென
தொல்காப்பியன்
உரைத்தானே!

**- கு. றஜீபன்**

## ஒப்பனை மனிதர்கள்

பஸ் புறப்படத் தயாரானது
காலியாய் இருந்த
இருக்கைகள் எல்லாம்
நிரம்பி வழிந்தன

பாடசாலை மாணவர்கள்
பல்கலைக்கழக மாணவர்கள்
மதகுருமார்கள்
பொது மக்கள் என்று ...
எல்லாத் தரப்பினர்களுக்கு
மத்தியிலும் - ஒரு
பிச்சைக்காரனும் கூட
இருந்தான்.

ஒற்றைக் காலுக்கு பதிலாக
ஊன்றுகோல் - அவனுக்கு
உதவியாய் இருந்தது

அவன் பயணியாயினும்
பாதித் தூரம் கடப்பதற்குள்
கையை நீட்டிக் கொண்டு
தனது கடமையிலே
கண்ணாயிருந்தான்

சில்லறைகளையேனும்
வழங்க
ஒருவர் கூட
முற்பட்டதாக இல்லை

கேலியாய் அவனைப்
பார்த்து
சிரித்துக்கொண்டு தான்
இருந்தார்கள்

தனது குடும்பம் பற்றியும்
குழந்தைகளின்
எண்ணிக்கை - எதிர்காலம்
பற்றியும் ...
இடைவிடாது
அவன் புலம்பிக்
கொண்டிருந்தான்.

பஸ்
தரிப்பிடத்திற்கு
பறந்து வந்தது

ஒவ்வொருவரும் - இறங்கி
எங்கெங்கோ நகர்ந்தார்கள்

அவனோ
தொழில் தேடி
அடுத்த பேருந்தில் ஏறினான்

அன்புப் பயணிகளே!

அன்றைய நாளில் ...
நடத்துனரிடம்
விட்டுச் சென்ற - உங்கள்
மீதிச் சில்லறைகளை வாங்கி
அவனுக்கு
வழங்கியிருந்தாலாவது

அவனின்
ஒரு நேர வயிறாவது
நிறைந்து இருக்கும்
அல்லவா?

* * *

## எரிக்கப்பட்ட வயல் வெளிகள்

வீடு
ஒன்றில்

இரவு நேரத்தில்

பெரிய
யன்னல்கள்

திறந்திருப்பதை
அவதானித்தேன்

பக்கத்தில்
இருந்த
பிரயாணி

தட்டிச்
சொன்னான்

அது யன்னல்கள்
அல்ல

குண்டுகள் துளைத்த
ஓட்டைகள் என்று ...

**- நெடுந்தீவு முகிலன்**



தாளை என்ற ஊரைச் சேர்ந்த ஒரு தமிழர் இவ்வாலயத்தைக் கட்டியதாகக் கூறப்படுகிறது. அவர் சென்ற படகு புயலில் சிக்கியதால் அதிலிருந்து தப்பிக் கொள்ள அவர் புனித அந்தோனியாரை வேண்டிக் கொண்டதாகவும் அதன் காரணமாகவே இக் கோவில் கட்டப்பட்டதாகவும் இதன் வரலாற்றில் கூறப்படுகிறது.

இராமநாதபுரத்தின் 1972 வர்த்த மானப்படி தங்கச்சி மடத்திலிருந்து ஒரு கத்தோலிக்க குருவானவர் அங்கு சென்று திருவிழா செய்து வந்தார். இந்த தேவாலயம் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் ஒரு நேர்த்திக் கடனை நிறைவேற்றுவதற்காக இராமநாதபுரம் தமிழ் நாட்டைச் சேர்ந்த மீனவரான சீனிக்குப்பன் படையாச்சியால்



# அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழா

முடிவுறாத இலங்கை - இந்திய மீனவர்களுக்கிடையிலான பிரச்சினைகள், இலங்கைப் படையினரால் இந்திய மீனவர்கள் கொல்லப்படுதல் என்ற குற்றச்சாட்டுப் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் கச்சதீவை மீளப்பெறவேண்டும். அதுவரை ஓயப்போவதில்லை என்ற தமிழக அரசின் விடாப்பிடிக்கு மத்தியிலும் மீண்டும் இந்த வருடத்துக்கான கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவம் ஆரம்பமாகியுள்ளது.

கடந்த காலங்களில் ஒரு வாரம் வரை இடம்பெற்று வந்த உற்சவம் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களால் சில வருடங்கள் நடைபெறாதிருந்தது. தற்சமயம் நிலை முன்போல மெல்ல மெல்ல வந்து கொண்டிருந்தாலும் கடந்த காலங்களில் இருந்த மகிழ்ச்சியும் உற்சாகமும் தற்போது இருப்பதாக இல்லை. கடந்த மூன்று தசாப்தங்களின் பின்னர் 2006 இல் கச்சதீவு வருடாந்த உற்சவம் மீண்டும் ஆரம்பமாகியது.

மீனவர்கள் கடலில் அடிக்கடி தாங்கள் சந்திக்கும் ஆபத்துக்களிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவும் தொழில் முயற்சிகள் நல்ல முறையில் நடைபெற வேண்டும் எனக் கருதியும் இத்தீவில் 1913 இல் நம்பு கட்டப்பட்டதாக இந்திய மக்களால் கூறப்படுகிறது. எனினும் கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் நெடுந்தீவு வெடியரசனின் ஆட்சியில் இருந்தபோது கச்சதீவு அதனுடன் இணைந்திருந்தது எனவும் நெடுந்தீவைச் சேர்ந்தவர்கள் அங்கு நெல் உற்பத்தி செய்ததாகவும் நெடுந்தீவு மக்களால் கூறப்படுகின்றது. நெடுந்தீவைச் சேர்ந்த உடையார் தனது மகள் குஞ்சாச்சிப் பிள்ளைக்கு இத்தீவை சீதனமாக வழங்கியிருந்தார் எனவும் ஒரு கதை உள்ளது. இதனால் 'குஞ்சாட்டி' என இதற்குக் காரணப் பெயர் வந்துள்ளது. (குஞ்சாட்டி என்பது சிறிய தீவு எனப் பொருள்படும்) அந்தோனியார் ஆலயத்தை நெடுந்தீவைச் சேர்ந்த போஞ்சி அந்தோனி என்பவரே 1819 இல் ஒரு சிறிய குடிலாக இந்த ஆலயத்தை முதன்முதலில் அமைத்ததாகவும் நெடுந்தீவில் உள்ள முதியவர்கள் சொல்லுவதுண்டு.

வரண்ட வலயத்தில் முட்புதர்கள் சிறிய புல்தரைகள் கடற்கரைத் தாவரங்களைக் கொண்ட 285 ஏக்கர் நிலப் பரப்புமிக்க ஒரு சிறிய தீவு என்றாலும் இலங்கை இந்திய பாதுகாப்புக்கு ஒரு முக்கிய பகுதியாக இது விளங்கியதாலேயே அந்நியர் காலம் தொட்டு இன்றுவரை ஆட்சியில் உள்ளவர்களின் கவனத்தில் இத்தீவுக்கு முக்கிய இடம் தரப்படுகின்றது.

கச்சதீவில் கொடியேற்றுவேன், நீந்திச் செல்வேன் எனக் கூறி தமிழக மீனவரை ஏமாற்றிக் கொண்டு தமது அரசியலை நடத்த தமிழக அரசியல்வாதிகளுக்கும் இந்த வரண்ட தீவு உதவுகின்றது.

அரசியல் நிலை இவ்வாறு இருந்தபோதும் காலங்காலமாக நெடுந்தீவு மக்களே இத் தீவிலுள்ள புனித அந்தோனியார் ஆலயத்தின் உற்சவத்தை முன்னின்று நடாத்தி வருகின்றனர். இதன் மூப்பராக இருந்து ஐம்பத்திநான்கு வருடங்களுக்கு மேலாக ஆலயத்தைக் கவனித்து வந்தவர் நெடுந்தீவைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளையாவார்.

இக்காலங்களில் உற்சவம் ஆறு நாட்கள் வரை இடம் பெற்று வந்தது. உற்சவ ஏற்பாடுகளைக் கவனிக்க மூப்பர் குழு பத்துத் தினங்கள் முன்னதாகவே செல்வதுண்டு. அக்காலங்களில் மீன்பிடிக்கவரும் தமிழக மீனவர்கள் இங்கு வந்து இந்தக் குழுவினருடன் மகிழ்ச்சியாக பேசிக் கதைத்து சந்தோஷமாகச் செல்வதுண்டு. மனிதர்கள் நடமாட்டமற்ற இத்தீவில் தங்கியிருக்கும்போது ஒரு தனிச் சந்தோஷம் இருக்கும். அப்போதெல்லாம் படையினரின் கெடுபிடிகள் இருந்ததில்லை. உற்சவம் தொடங்கியதும் பல ஆயிரக்கணக்கான இந்திய மக்கள் அங்கு வருகின்றனர். உற்சவம் குறித்து கச்சதீவுக்கு வரும் மீனவர்களே அங்கு தகவல்களை வழங்குபவர்களாக இருப்பார்கள்.

நிறைய இந்திய மக்கள் வியாபாரிகள் என தீவு முழுவதும் நிரம்பிக் காணப்படும். பிரார்த்தனைகள் ஒருபுறம் பண்டமாற்றுக்கள், வியாபாரங்கள், இலங்கை மலைய மக்கள் அவர்களது தமிழக உறவினர்களைச் சந்தித்து ஆனந்தக் கண்ணீர் சிந்தி ஆரத்தழுவி மகிழ்ந்து பரிசுப் பொருட்களைப் பரிமாறி எல்லாமே கண்கொள்ளாக் காட்சியாக நடந்தேறும்.

இப்போது அந்த நிலைமைகள் இல்லை. இரு நாடுகளுக்கிடையிலான ஒரு வாரச் சந்தையாக இருந்த கச்சதீவில் ஆசைப்பட்டு வாங்கலாமென்று அண்மைக் காலமாக வந்த இரு நாட்டு மக்களும் ஏமாற்றமுடனேயே திரும்பினர். எதிர்காலத்தில் கச்சதீவு முன்னர் இருந்த நிலைக்குத் திரும்ப வேண்டும் என்பது இரு நாட்டு மக்களின் விருப்பமாக இருந்தாலும் அரசியல் சூழ்நிலைகள் அதற்கு இடம்கொடுக்குமா என்பதே அனைவரினதும் கேள்வியாகவுள்ளது.

- துருந்தி

## FOLLOW WITH YARL OSAI SPOKEN ENGLISH PROGRAMME

**LESSON 7:**

டு and று Endings-Direct Object (cont.)

Some nouns ending in டு and று follow a special rule for forming the direct object. Look at the following list of nouns and their direct objects:

| Noun | | Direct Object |
|---|---|---|
| விளையாட்டு | - | விளையாட்டை |
| ஆண்டு | - | ஆண்டை |
| கன்று | - | கன்றை |
| காற்று | - | காற்றை |
| வீடு | - | வீட்டை |
| மாடு | - | மாட்டை |
| ஆறு | - | ஆற்றை |
| வயிறு | - | வயிற்றை |

When a noun ends in டு/று that is not preceded by a dotted consonant, the டு/று becomes a ட்டு/ற்று before adding I to form the direct object.

**Exercises**

1. Write the direct object of the following nouns:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| a. காடு | - | field forest | h. பாட்டு | - | song |
| b. கயிறு | - | rope | i. வண்டு | - | beetle |
| c. கிணறு | - | well | j. கரண்டி | - | spoon |
| d. பூனை | - | cat | k. அக்கா | - | elder sister |
| e. கோ | - | king | l. துண்டு | - | towel; piece |
| m. ஆடு | - | goat | | | |

**2. Translate**

a. He chases the cat.
b.We (நாம்) build that house.
c.She holds the spoon.
d.They cross the river.
e. I touch the cow.
f. The dog chews the rope.
g.You (all) throw the box.

(to) chase = துரத்து3

(to) build = கட்டு3

(to) hold = பிடி 6

(to) cross = கட 7

(to) chew = மெல் 1



# எது நியாயம்?

ஒரு கிராமத்தில் ஒரு விவசாயி இருந்தான். அவனுடைய நிலத்தின் ஒரு பகுதியை அடுத்த நிலத்துக்காரன் தன்னுடைய நிலத்தோடு சேர்த்து உழுது பயிரிட்டு வந்தான்.

''என்னுடைய நிலத்தின் பகுதியை நீ உன்னுடைய நிலத்தோடு சேர்த்துக் கொள்ளலாமா? இது நியாயமா?'' என்று கேட்டான்.

''நியாயம், அநியாயம் என்பது எனக்குத் தேவையில்லை. அது என்னுடைய நிலத்தை ஒட்டியிருப்பதால் அது எனக்கே சொந்தமானது'' என்று முரட்டுத்தனமாகப் பதில் சொன்னான்.

கிராமப் பஞ்சாயத்தாரிடம் போய் முறையிட்டான் விவசாயி. அவர்கள் அவனை வரவழைத்து விசாரித்தார்கள்.

''அது எனக்குச் சேர்ந்தது. திருப்பிக் கொடுக்கமுடியாது'' என்று மறுத்து விட்டான்.

நிலத்தை இழந்தவன் மிகவும் வருத்தத்தோடு இருந்தான்.

அவன் மனைவி ''அவனை சும்மா விட்டு விடக்கூடாது. நீதிமன்றத்தில் வழக்குப் போட்டு நியாயம் கேட்க வேண்டும்'' என்று யோசனை சொன்னாள்.

விவசாயி உடனே ஒருவழக்கறிஞரிடம் போய் விவரம் கூறி வழக்குத் தொடுத்தான்.

நீதிமன்றத்திலே நிலத்தை இழந்த விவசாயிக்குப் பாதகமாக தீர்ப்புக் கிடைத்தது.

''அதற்கு மேல் ஒரு நீதிமன்றம் இருக்கிறது. அங்கே போய் வாதாடலாம்'' என்றார் வழக்கறிஞர்.

அதன்படி அங்கே போய் வாதாடியதில் அதிலும் பாதகமாகத் தீர்ப்புக்கிடைத்தது.

''இன்னொரு நீதிமன்றம் இருக்கிறது. அதில் நிச்சயம் நமக்கு வெற்றி கிடைக்கும்'' என்றார் வழக்கறிஞர்.

''ஐயா நான் இழந்த நிலம் சிறு பகுதிதான் அதை மீட்பதற்காக நான் செலவு செய்த பணம் அந்த நிலத்தினை விலை மதிப்பைக் காட்டிலும் நான்கு மடங்க ஆகும். மேலும் என்னுடைய விவசாய வேலைகளையும் கவனிக்க முடியாமல் அதுவேறு நஷ்டம்! முட்டாள்தனம் செய்து விட்டேன். இனி இன்னொரு நீதிமன்றத்துக்குப் போகவும் வழக்காடவும் என்னிடம் ஒரு காசு கூட இல்லை. அநியாயக்காரனைக் கடவுள் தண்டிக்கட்டும்'' என்றான் விவசாயி.

''அதர்மம் ஒரு நாள் அழிவைத் தரும்''

## மாணவர் மலர்

### சாரணியத்தின் தந்தை பேடன் பவல் பிரபு

'என்னால் கூடுமான வரையில் என் சமூகத்திற்கும் தேசத்திற்கும் பிறருக்கும் உதவி புரியவும் சாரணர் விதிகளுக்கு அமைந்து பணிந்து நடக்கவும் நான் என் கௌரவத்தின் மீது வாக்குறுதி அளிக்கின்றேன்' என்ற உறுதி மொழியோடு சாரணியம் என்ற இயக்கத்தை ஆரம்பித்தார் பேடன் பவுள் பிரபு.

பேடன் பவுள் பிரபு இங்கிலாந்திலே லண்டன் நகரிலே கென்றீற்றரா கிறேசிக்கம் அம்மையாருக்கும் றொபேட் கிறேஸ் பேடன் பவுள் பெருந்தகைக்கும் ஏழாவது குழந்தையாக 1857 ஆம் ஆண்டு மாசி மாதம் 22 ஆம் திகதி பிறந்தார். அவருக்கு பெற்றோர் சூட்டிய பெயர் ஸ்ரீபன் பேடன் பவுள். மூன்று வயதிலே தந்தையை இழந்து தாயாரின் பாதுகாப்பிலேயே வளர்ந்தார்.

பேடன் பவுளால் உருவாக்கப்பட்ட சாரணியம் 1912 இல் ஜி.ஸ்ரீபன் பிரபுவால் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

இலங்கைக்கு முதன் முதலாக பேடன் பவுள் பிரபு 1921 ஆம் ஆண்டு வந்தார். இரண்டாவது முறையாக 1934 ஆம் ஆண்டு வந்தார். தான் மட்டுமின்றி தனது மனைவியையும் சாரணியத்தில் இணைத்தார். இதன் மூலம் பெண்களுக்கும் சமமான வாய்ப்பை அளித்து மதிப்பு வழங்கினார்.

அவரது ஏற்பாட்டில் உலக சாரணர் சபை மாநாடு 1907 இல் நடைபெற்றது. முதலாவது திரி சாரணர் சம்மேளனம் 1931 ஆம் ஆண்டு கூடியது. உலக சாரணர் இயக்கப் பொன் விழா இங்கிலாந்தில் நடைபெற்றது. இளைஞர்களுக்கான சாரணர் நூல் 1908 இல் வெளியிடப்பட்டது. பேடன் பவுள் பிரபுவின் விடா முயற்சியால் உருவான சாரணர் இயக்கம் அன்றும் இன்றும் உலகெங்கும் சிறந்து விளங்கி வருகிறது.

**நேசராஜ் - வித்தியாசகர்**
சாரணர்
கிளிநொச்சி ம. வி.



மானிப்பாய் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியில் இடம் பெற்ற சின்னஞ்சிறிய மாணவச் செல்வங்களின் வினோத உடை நிகழ்வு.
(படம் : தெல்லிப்பழை நிருபர்)

# 2 ஆவது உலக மகா யுத்தமும் இலங்கையும்

**5.4.1942 இல்** ஜப்பானிய குண்டு வீச்சு விமானங்கள் கொழும்பில் முதலாவது குண்டு வீச்சை நிகழ்த்தினர். அதனால் 2 வர்த்தகக் கப்பல்களும் இரத்மலானையில் பல கட்டிடங்களும் நாசமடைந்தன. மீண்டும் அதேமாதம் 9 ஆம் திகதி திருக்கோணமலையில் குண்டு வீச்சப்பட்டது. அங்கு சீனக்குடாவில் உள்ள எண்ணெய்க் குதங்கள் தீப்பற்றி எரிந்தன.
ஆங்கிலேயருடைய யுத்தக் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. 12.4.1942 இல் ஜப்பானியர் சிங்கப்பூரின் நகரமாகிய ரங்கூனை பிடித்துக் கொண்டனர். அமெரிக்கப் படைகளும் இலங்கையைத் தளமாகப் பயன்படுத்தினர்.
இந்த யுத்தத்தினால் 1940 இல் எதிர்பார்க்கப்பட்ட 3 ஆவது சட்ட சபைத் தேர்தல் இலங்கையில் நடைபெறவில்லை. அந்தத் தேர்தல் நடைபெற்றிருந்தால் அந்தக் காலத்தில் பிளவுபடாமல் இருந்த லங்கா சமசமாஜக் கட்சியே அதிக ஆசனங்களை கைப்பற்றி இருக்குமென யாழ்ப்பாணத்து தமிழ் அறிஞர் க.சி. குலரத்தினம் 1966ஆம் ஆண்டு வெளியிட்ட தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.


2ஆவது உலகப் போரில் பயன்படுத் தப்பட்ட போர்க்கப்பல்

ஆனால் இந்த 2 ஆவது உலக மகாயுத்தம் உலகத்திலே மார்ச்சிசத்தைப் பின்பற்றுகிற கட்சிகளிடையே முதலாவது பெரிய பிளவை ஏற்படுத்தியது. 1917 இல் உதயமான சோவியத் யூனியனின் முதலாவது தலைவர் லெனின் 24.01.1942 இல் மரணமானார். அதற்குப்பின்பு அந்த நாட்டின் தலைவராக ஸ்டாலின் பதவி ஏற்றார். இவருடன் எதிர்ப்பாளராக ட்டிரெஸ்கி என்று ஒரு தலைவர் இருந்தார். இவர்களிடையே ஏற்பட்ட பதவிப் போட்டியில் அவர் தப்பி வட அமெரிக்க நாடான மெக்ஸிக்கோவுக்கு தப்பி ஓடினார். இந்த ட்டிரெஸ்க்கியைப் பின்பற்றுபவர்கள் இலங்கையில் லங்கா சமசமாஜக் கட்சியினர் இலங்கை கம்யூனிஸ்ற் கட்சியினர் சோவியத் யூனியன் சார்பாக இருந்து வருகிறார்கள். இந்தப் பிளவு இந்தியாவிலும் தாக்கத்தை உண்டாக்கியது. சுபாஸ் சந்திர போஸ் நேத்தாஜி மலேசியாவில் 4.2.1944 இல் இந்திய தேசிய இராணுவம் என்ற ஒன்றை உருவாக்கினார். இந்தப் படை மார்ச் 14 ஆம் திகதி அசாம் மாநிலத்தைக் கைப்பற்றியது.
12.9.1944இல் பாங்கொக்கில் இருந்து நேதாஜி பயணம் செய்த விமானம் ஆகாயத்தில் வெடித்துச் சிதறியது.
இவர் உயர் கல்வி கற்ற இந்திய நிர்வாக சேவைக்குத் தெரிவானார். இந்தியாவுக்கு பூரண சுதந்திரம் வேண்டி இவரும் நேருவும் இந்திய காங்கிரஸ் மகாநாட்டில் முதன்முதலாக பிரேரணையை சமர்ப்பித்தனர். அந்தக் காலத்தில் மகாத்மா காந்தி இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்தையே பிரேரித்தார். ஜப்பானிய நகரங்களான ஹிரோசிமா நாகாசாக்கி ஆகிய நகரங்கள் மீது ஆகஸ்ட் மாதம் 1945 6, 9 தினங்களில் முதலாவது அணுகுண்டையும் இரண்டாவது அணுகுண்டையும் வீசினர்.
30.4.1945 இல் ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டுவிட்டார். ஹிட்லர் படைகள் ஜெர்மனியில் சோவியத் இராணுவத்திடம் சரணடைந்தனர். 09.05.1945 இல் இரண்டாவது உலக மகா யுத்தம் முடிந்த தினமாக சோவியத் யூனியன் கொண்டாடியது. இரண்டாவது உலக மகா யுத்தம் முடிந்த பின்பே அமெரிக்கா ஜப்பானிய நகரங்கள் மீது அணுகுண்டை வீசியது. உண்மையில் அணுகுண்டை இத்தாலியிலோ அல்லது ஜேர்மனியிலோ வீசியிருக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் தான் யுத்தத்தை ஆரம்பித்தார்கள். முதலாவது உலக யுத்தம் 1914 இல் தொடங்கி 1918 இல் முடிந்தது. யுத்தத்தை தொடங்கிய ஜேர்மனி தோற்கடிக்கப்பட்டது. இரண்டாவது உலக மகா யுத்தம் ஏற்படாமல் இருக்க ஒரு சர்வதேச சங்கத்தை எல்லா நாடுகளும் அமைத்தனர். பிறநாடுகளின் உள் விவகாரங்களில் தலையீடு செய்வதில்லை என்ற கொள்கையை அமெரிக்கா அந்தக் காலத்தில் பின்பற்றி வந்தது. முதலாவது உலக மகா யுத்தத்தில் பாதிக்கப்படாமல் தலையிடாமல் யுத்த தளபாடங்களை விற்று அமெரிக்கா பெரிய இலாபத்தைப் பெற்றுக் கொண்டது.
1918 முதல் ஹிட்லர் நாசிசக்கட்சியை வளர்த்து 1935 இல் ஆட்சியைப் பிடித்தார். முதலாவது உலக மகா யுத்தத்தில் வெற்றியடைந்த ஐரோப்பிய - இங்கிலாந்து நாடுகள் ஜேர்மனி தேசத்தின் மீது போர்க்கால நட்டத்திற்கு ஈடு வழங்க வேண்டுமென்று ஒப்பந்தத்தைச் செய்து கொண்டனர். இதன்படி ஒவ்வொரு ஜேர்மனியர்களும் பத்துத் தலைமுறைகளுக்கு நாளொன்றுக்கு நூறு மார்க் செலுத்த வேண்டி இருக்கும். ஜேர்மனியின் வரவு செலவுத்திட்டத்தில் பெரிய துண்டு விழும் தொகையை உண்டாக்கியது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆரிய இனம்தான் ஆளப்பிறந்த இனம் என்ற கோசத்தை ஹிட்லர் முன்வைத்தார். இப்படித்தான் ஹிட்லர் ஒரு பிரபல்யமான தலைவராக உருவானார்.
1945 இல் அமெரிக்கா ஜப்பானிய நரகங்கள் மீது வீசிய அணுகுண்டால் அந்த நாட்டில் பெரிய நாசங்கள் விளைந்தன. எட்டு இலட்சத்துக்கு அதிகமான மக்கள் கருகி மாண்டனர். 100 மைல் சுற்றாடலில் பிறந்த குழந்தைகள் குறை உடல் உறுப்புக்களுடன் பிறந்தன. இன்று கூட அந்த நாட்டில் ஏற்பட்ட பூகம்பத்தினால் அணு உலைகள் பாதிக்கப்பட்டு அங்கு விளையும் நெல் கதிர்களில் அணு வீச்சு கதிர் இருப்பதாக அந்த நாடு அறிவித்துள்ளது.
முதலாவது உலக மகா யுத்தத்தில் கொல்லப்பட்ட மக்களின் தொகை 2 கோடி இரண்டாவது உலகப் போரில் கொல்லப்பட்டவர் தொகை 5 கோடி முதலாவது உலகப்போரில் பீரங்கிகள், டாங்கிகள், கப்பல் கள் என்பன அதிகமாகப் பயன்படுத் தப்பட்டன.
யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் சோவியத் யூனியனின் தரைப்படையினரிடம் ஹிட்லர் படைகள் படு தோல்வி அடைந்தன. சோவியத் படைகள் பல முனைகளில் முன்னேறி சுற்றி வளைத்தனர். ஆனால் ஹிட்லர் சரணடைய வேண்டும் என்ற முடிவுக்கு ஒத்துக் கொள்ளவில்லை. ஜனவரி 1945 தொடக்கம் ஹிட்லரின் படைகளுக்காக1000 யுத்த டாங்கிகளும் 2800 போர் விமானங்களும் உற்பத்தி செய்யப்பட்டன.
படுமோசமான ஆட்கள் பற்றாக்குறை ஹிட்லருக்கு ஏற்பட்டது. 16 வயதைத் தாண்டியவர்கள் எல்லோரும் படையில் சேரவேண்டும் என்று கட்டளை இட்டார். உலகத்தில் இடதுசாரி இயக்கங்கள் பிளவுபட்டபோது பாசிசம் பெரிதாக வளர்ந்தது. தற்பொழுது இலத்தீன் அமெரிக்க நாடுகளில் கொலம்பியாவைத் தவிர எல்லா நாடுகளிலும் சோசலிசக் கட்சிகள் ஸ்ரீலங்காவைப் போல ஒரு பெரிய கூட்டணி அமைத்து ஆட்சியை நடத்தி வருகிறார்கள். அமெரிக்கா இலத்தீன் அமெரிக்கா நாடுகளிலுள்ள பிரிவினைவாத சக்திகளுக்கு ஊக்கமளித்து வருகின்றது.

**- சி. குமாரலிங்கம்**
**ஓய்வுநிலை வங்கியாளர்.**

# சமூகப் பொறுப்புணர்ந்து செயற்படும் இவர்களும் இளம் சந்ததியினரே!

இன்று வறுமையிலே வாழ்பவர்களின் நிலை கருதி எத்தனையோ கழகங்கள், தனியார் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் பல உதவிகளை வழங்கி வருகின்றன. அவர்களில் பலர் பெரிய உயர் பதவிகளில் இருப்பவர்கள் நம் பணிகள் முடிந்து ஓய்வு நிலையில் இருப்பவர்களே இவ்வாறான சேவையில் ஈடுபடுகின்றனர். இன்று பலரின் துணிப்பும் அதுவாகவே காணப்படுகின்றது. இன்றைய இளம் சந்ததியினர் பேஸ்புக், கையடக்கத் தொலைபேசிஎன எதுவித பொறுப்பும் அற்று திரிகிறார்கள் என்று ஆனால் எம் மக்களுக்கு எங்கு தேவை இருக்கிறதோ அதனைக் கண்டு அவர்கள் தேவைகளை நிறைவு செய்யும் ஒருஇளம் குழுவினரைக் கண்டோம். யார் இவர்கள் இளைஞர், யுவதிகள் எனப்பலர் பல இடங்களில் கண்டுள்ளோம். அவர்கள் எந்த நிறுவனம் சார்ந்தவர்கள்? என்று பலரும் கேட்டனர். அவர்கள் எந்த நிறுவனத்தையோ அமைப்பையோ சார்ந்தவர்கள். பலருக்கு இப்படி ஒரு கழகம் இருப்பதே தெரியாது. இந்த இளம் சந்ததியினர் சுன்னாகம் றோட்டறக் கழகத்தைச் சார்ந்தவர்கள். றோட்டறக் கழகமா? றோட்டறிக் கழகமா? என பலரிடையே குழப்பம். இரண்டும் ஒன்றா என்பது கூட பலரின் வினா றோட்டறக் (Rotaract) கழகத்தின் தாய்க்கழகமே (Rotary) றோட்டறிக்கழகம். இந்த சுன்னாகம் றோட்டறக் கழகத்தை எத்தனை வருடங்களுக்கு முன் ஆரம்பித்தீர்கள் என்றபோது 17 வருடங்கள் கடந்துள்ளது தெரிந்தது. 17 வருடம் சேவை செய்யும் கழகம் பற்றி பலர் தெரியாது இருப்பதனால் இதன்தோற்றம், வளர்ச்சி செயற்பாடுகள் பற்றி வெளியுலகிற்கு தெரியப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. அவர்கள் சேவைகள் பற்றி 'சுருதி' புத்தகம் வாயிலாக அறியமுடிந்தது.
சேவை சர்வதேச புரிந்துணர்வு என்பன தொடர்பாக அர்ப்பணிப்புடைய இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குவதோடு அவர்களின் தனிப்பட்ட ஆளுமை அறிவு திறனை வளர்ப்பதற்காகவும் உயர்த்துவதற்காகவும் 1994 இல் சுன்னாகம் றோட்டறக் (Rotaract) கழகம் ஆரம்பிக்கப்பட்டு 1995 இல் அமெரிக்காவிலுள்ள சர்வதேச றோட்டறிக்கில் பதிவு செய்யப்பட்டது. 35 அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட கழகத்தில் 8 பெண் உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர். இக்கழகத்தில் அங்கம் வகிப்பவர்கள் 18 - 30 வயதிற்கு உட்பட்டவர்களே. முதலாவது கழகத் தலைவராக Rtr ஜெயச்சந்திரா தெரிவு செய்யப்பட்டார். இவருடைய காலப்பகுதியிலே பல வருடங்களாக திருத்தப்படாமல் இருந்த மானிப்பாய் உடுவில் வீதி திருத்தப்பட்டது. அதன்பின் இடம்பெயர்வுகளை சந்தித்த போதும் கூட அவர்களால் இயன்றளவு தமது செயற்திட்டங்களை சேவைகளை செயற்படுத்தி வந்தனர். அதனை தொடர்ந்து 96/97 றகான தலைவராக Rtr ரி. வாமதேவன் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அதனை (97/98) தொடர்ந்து Rtr சசிவர்ணன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இவரின் காலகட்டத்திலே பிரதான செயற்திட்டமாக மாணவரிடையே பட்டிமன்றச் சுற்றுப்போட்டி பொது அறிவுப் போட்டி என்பன நடத்தப்பட்டன. சகல வழிகளிலும் பங்களித்து இந்நிகழ்வுகள் நன்கு நடைபெற ஒத்துழைப்பு நல்கி வந்தார்கள். அந்த காலகட்டத்திலே இக்கழகமானது 'சுருதி' என்ற நூலினை வெளியிட்டது. அதன் இதழாசிரியர்களாக Rtr சசிரேகா, Rtr வசந்தராஜ் என்பவர்கள் இருந்தார்கள்.
இந்த றோட்டறிக் கழகத்தின் கீழ் றோட்டறக் கழகம் இன்றறக்கழகம் என்பன காணப்படுகின்றன. இன்றறக்ட் கழகத்தில் 14 - 18 வரை வயதுள்ள மாணவர்கள் இருக்கும் கழமாகக் காணப்பட்டது. தற்போது 12 - 18 வரை என மாற்றியமைக்கப்பட்டுள்ளது).
அதனைத் தொடர்ந்து Rtr கணேந்திரா தலைவர் பதவியை ஏற்று திறம்படத் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தார். அதனைத்தொடர்ந்து 99/ 2000 தலைவராக பிரதீபன் . 2000/ 2001 இல் தலைவராக செல்வேந்திரதாஸ் 2001/ 2002 இல் Rtr கமலதாசன் 2002 / 2003 இல் Rtr சிவரூபி. 2003 / 2004 Rtr ஜெயக்குமார். 2004 /2005 நவரூபன். 2005/ 2006 இல் தயாபரன் தலைவர் பதவிகளை வகித்தனர். இவர் பன்னிரண்டாவது கழக ஆண்டில் 11 ஆவது தலைவராக பதவி ஏற்றார். இவரின் காலப்பகுதியிலே இரண்டாவது 'சுருதி' வெளிவந்தது. இக்கழகமான தனது அயராத உழைப்பாலும் சேவையாலும் தமது சேவைகளை மேலும் விரிவுபடுத்திக் கொண்டே சென்றது. இரண்டாவது 'சுருதி' யின் ஆசிரியர்களாக Rtr கலைவாணி, Rtr சோபனா ஆகியோர் செயற்பட்டனர். அதனைத் தொடர்ந்து 2006 2007 இல் Rtr உமாகரன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். 2007 2008 இல் Rtr ஜெசிந்தன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அவரின் காலத்திலே சுருதி 3 வெளியிடப்பட்டது. இதன் இதழாசிரியர்களாக Rtr ஜசிதரன் Rtr ஸ்ரீரங்கநாயகி செயலாற்றினார்கள். இந்த வருட காலத்திலே கழக அங்கத்தவர்களது தளரா செயற்பாடு காரணமாக பல விருதுகளைப் பெற்றது. முன்னைய காலத்திலும் பார்க்க இவரது காலத்திலே அதிகமாக செயற்பாடுகள் செயற்திட்டங்கள் அதிகரித்துக் காணப்பட்டன.இந்த இளைஞர்கள், யுவதிகளின் செயற்திட்டம் செய்பாடுகளை இந்த சமூகத்தினருக்கு எடுத்துக் காட்டுவது மட்டுமன்றி எவ்வாறான உதவிகளைச் செய்கிறார்கள் மக்களுக்கு எப்படியான உதவிகள் தேவைப்படுகின்றது என்பதனை எம் சமுதாயத்திற்கு சுட்டிக்காட்ட வேண்டிய கடமைப்பாடு இருக்கிறது.

*(தொடரும்)*

# யாழ் ஓசை ஜோதிடம்

யாழ் ஓசை 02.03.2012 முதல் 08.03.2012 வரை

**மேடம்:-** மேட ராசியினருக்கு நற்பலன்கள் சிறப்பாக அமைகின்ற நிலையுண்டு. தொழில் சார்ந்த நல்ல முன்னேற்றம் உண்டு. குடும்ப நிலையில் சிறப்பான அனுகூலமான பலன் அமையும். பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையில் ஏற்படும். உறவினர்களின் மூலம், அனுகூலமான நன்மை அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்கட்கு வெற்றியுண்டு.

**இடபம்:-** இடப ராசியினருக்கு தொழில் நிலைகளில் அலைச்சல், தொழில் சார்ந்த பிரயாணம் என்பன அமையும் நிலை இருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதான செயல் வேண்டும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. குடும்ப நிலைகளில் ஓரளவிற்கு நற்பலன் அமையும். கடன் நிலையில் சிறு சிறு அலைச்சல்கள் தொடரும். பெண்களுக்கு சற்று அலைச்சல் உண்டு. மாணவர்கள் நிதானம் தேவை.

**மிதுனம்:-** மிதுன ராசியினருக்கு மிகவும் சிறப்பான பலன் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான பலன்கள் அமையும் பலனுண்டு. தொழில் நிலைகளில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் நிலையுண்டு. பணவரவு மிகவும் திருப்திகரமானதாக அமைகின்ற பலனுண்டு. எடுக்கும் முயற்சிகள் வெற்றிகளை கொடுக்கும். கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்கட்கு வெற்றியுண்டு.

**கடகம்:-** கடக ராசியினருக்கு மத்திமமான பலன்களே அமையும். தொழில் நிலையில் நிதானமான நிலை வேண்டும். பணவரவு சற்று மத்திமமானதாகவே இருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயல் வேண்டும். குடும்ப நிலையில் மத்திமமான பலனே அமையும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலை இருக்கும். பெண்கள் நிதானம் தேவை. மாணவர்கள் முயற்சி தேவை.

**சிம்மம்:-** சிம்மராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமுண்டு. தொழில் சார்ந்த முன்னேற்றம் அமைய இடமுண்டு. குடும்பத்தில் அனுகூலமான பலன் அமையும். பண வரவு தேவைகளை பூர்த்தி செய்யும் பலனுண்டு. எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் வேண்டும். கடன் நிலைகளில் சுமாரான பலன்களே ஏற்படும். பெண்களுக்கு அனுகூலமுண்டு. மாணவர்கள் நிதானம் தேவை.

**கன்னி:-** கன்னிராசி அன்பர்களுக்கு சிறு மந்த நிலைகள் இருக்கும். தொழில் சார்ந்த நிலைகளில் நிதானம் வேண்டும். குடும்பத்தில் தேவையற்ற குழப்ப நிலைகள் இருக்கும். பணவரவு சற்று சுமாராகவே அமையும் பலனுண்டு. மருத்துவ செலவீனங்கள் அமையும் பலன் இருக்கும். கடன் நிலைகளில் இழுபறி நிலை இருக்கும். பெண்களுக்கு சஞ்சல நிலை இருக்கும். மாணவர்கள் கவனம் வேண்டும்.

**துலாம்:-** துலாம் ராசியினருக்கு சிறப்பான நற்பலன்கள் அமையும். தொழில் நிலை சிறப்புகள் அனுகூலமாக அமைந்திருக்கும். பணவரவு திருப்திகரமாக அமையும் நிலை உண்டு. குடும்ப நிலையில் மகிழ்வும் சிறப்புகளும் ஏற்படும். எடுக்கின்ற முயற்சிகள் நல்ல வெற்றியை கொடுக்கும். கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்கட்கு வெற்றியுண்டு.

**விருட்சிகம்:-** விருட்சிக ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலம் அமையும். உடல் சார்ந்த சுகயீனம் அமைந்திருக்கும். தொழில் நிலையில் அலைச்சல் இழுபறி அமைந்திருக்கும். தாயார் வழியில் செலவுகள் திடீர் சுகயீனம் இருக்கும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் சற்று மந்தமான பலன் இருக்கும். பெண்கள் நிதானம் தேவை. மாணவர்கட்கு வெற்றியுண்டு.

**தனுசு:-** தனுசு ராசியினருக்கு சிறுசிறு மந்த நிலை இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் நிதானமான செயல்பாடு வேண்டும். தொழில் நிலைகளில் நிதானம் வேண்டும். பணவரவு சற்று மத்திமமாகவே அமைந்திருக்கும். சகோதரர் வழியில் இழுபறி சஞ்சலம் இருக்கும். கடன் நிலைகளில் ஓரளவிற்கு அனுகூலம் இருக்கும். பெண்கள் நிதானம் வேண்டும். மாணவர்கள் முயற்சி வேண்டும்.


**மகரம்:-** மகரராசி அன்பர்களுக்கு சிறப்பான பலாபலன்கள் அமையும். தொழில் சார்ந்த முன்னேற்றம் இருக்கும். பணவரவு மிகவும் சிறப்பான நிலையில் அமையும். குடும்பத்தில் நன்மைகளும் சிறப்புகளும் ஏற்படும். எடுக்கும் முயற்சிகள் நல்ல வெற்றிகள் கொடுக்கும். கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் அமையும். பெண்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும். மாணவர்கட்கு சிறப்புகள் ஏற்படும்.

**கும்பம்:-** கும்பராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன் இருக்கும். உடல் நிலையில் சுகயீனம். மருத்துவ செலவு ஏற்படும். எடுக்கும் முயற்சியில் நிதானம் வேண்டும். தொழில் நிலைகளில் அலைச்சல் இருக்கும். பணவரவு சற்று மத்திமமாகவே அமையும். கடன் நிலைகளில் நிதான செயல்பாடு வேண்டும். பெண்கள் பொறுமை தேவை. மாணவர் முயற்சி வேண்டும்.

**மீனம்:-** மீன ராசியினருக்கு திடீர் அலைச்சல் நிலை இருக்கும். எதிர்பாராத செலவீனங்கள் அமையும் பலனுண்டு. குடும்ப நிலையில் பொறுமை நிதானமாக செயற்படவும். பணவரவு சற்று சுமாரான நிலையிலேயே அமையும். கடன் நிலைகளில் சிறு சிறு இழுபறி நிலை இருக்கும். எந்த விடயம் என்றாலும் நிதானமாக செயல்படவும். பெண்களுக்கு மனக்கஷ்டம் இருக்கும். மாணவருக்கு மந்த நிலை இருக்கும்.

கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள்
(சாரதாபீட ஜோதிடம்)

# தமிழர் மருத்துவ மரபில் செகராசசேகரம் காட்டும் நாடி அறிவியல்



சித்த மருத்துவத்தை வளர்த்த சித்தர்கள்

சித்த மருத்துவமானது மக்கள் வளமாக வாழ்வாங்கு வாழும் பொருட்டு உலக மக்களுக்கு சித்தர்களால் உவந்தளிக்கப்பட்ட இறைவனது கொடையாகக் காணப்படுகிறது. சிந்துவெளி நாகரிகத்தில் (Induscivilization) சிறப்பாகக் காணப்பட்ட திராவிட பண்பாட்டில் முகிழ்ந்தெழுந்த சித்த மருத்துவமானது சித்தர்களால் சிறப்பாக வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வளர்த்தெடுக்கப்பட்ட சித்தமருத்துவத்தில் தொடர்ச்சியும் வளர்ச்சியுமான முறையில் சித்த மருத்துவ நோய் அறிமுறைகள் (Diagnosis in Siddha Medicine) வளர்ச்சி பெற்று வந்துள்ளன. ஓலைச் சுவடிகளில் அல்லது ஏடுகளில் (Plm lea manuscripts) புராதன இந்திய மருத்துவ முறையில் (Ancient Indian Medical System) உள்ள சித்தமருத்துவ நாடி அறிதல் முறைகள் (Pulse of Siddha Medicine) நீர்க்குறி (Urine Examination) நெய்க்குறி (Oil in urine Examination) போன்றன சிறப்பான இடத்தைப் பெறுவதைக் காணலாம்.

காலையில் எழுந்தவுடன் முதலாவதாகப் பெறப்படும் சிறுநீரானது நீர்க்குறி பரிசோதனைக்காக சித்தமருத்துவர்களால் நோயாளியிடம் இருந்து பெறப்படுகின்றது. இச்சிறுநீரானது ஊறிய வைக்கோலின் நீரின் (straw colour) நிறம் போல காணப்படும் பொழுது சமிபாடு இன்மையையும் சிவப்பு கலந்த மஞ்சளாக (Reddish yellow) இருக்கும்போது உடலின் அதிகரித்த வெப்பத்தையும் மென் சிவப்பு (Rose tinge) இரத்த அழுத்த நிலையையும் அறிய உதவியாக இருக்கும்.

மேலும் நெய்க்குறி (Oil in urine examination) பரிசோதனையானது சூரிய ஒளியுள்ள நிலையில் ஓர் எண்ணெய்த்துளி (Oil drop) கவனமாக விடப்படும்போது பாம்பு (snake) போன்று பரவுமாயின் வாதமாகவும் மோதிரம் (Ring) பித்தத்தையும் முத்து (Pearl) போல மிதப்பதாக இருந்தால் கபத்தையும் குறித்துக் காட்டும். நீர்க்குறி நெய்க்குறி பரிசோதனைகள் சித்த நோய் அறிமுறையியலில் (Siddha Methodology of diagnosis) சிறப்பிடம் பெறுவதோடு மலக்குறியானது (Faecal Examination) அவசியமாகக் காணப்படுகின்றது. வாத நிலைமைகளில் மலமானது கறுப்பாகவும் பித்த நிலைகளில் சிறிது சிவப்பு நிறத்துடனும் கப நிலைகளில் வெளிறிய வெண்மை கலந்ததாகவும் காணப்படும். நாடி அறிதலானது முக்கிய நோய் அறிதல் முறையாகக் (Diagnostic tool) காணப்படுகின்றது. ஆயுள்வேதமானது உயிர் வாழ்வதற்கான வாழ்வியல் விஞ்ஞானமாகக் (Science of life) காணப்படுகின்றது.

எண்ணெய்க்குளிப்பு ஓடுதல், கடும் உழைப்பு, கடும் உடற்பயிற்சி (Physical exercise) உளரீதியாக மனம் குழம்பி (Emotionally Upset) காணப்படும் நிலைகளில் நாடி பரிசோதனை செய்வதைத் தவிர்த்தல் வேண்டும். மதிய வேளைகளில் அதிகரித்த வெப்பத்தினால் பித்த தோஷமானது நாடியில் தாக்கத்தை ஏற்படுத்துவதைக் காணலாம். தொல் சீர் சித்த மருத்துவ நூல்களில் (Classical text books of Siddha Medicine) எண்வித தேர்வும் (Eight Methods of Diagnosis) புராதன சித்தர்களது (Ancient Sages) நாடி அறிதல் முறைகளும் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இந்நாடி அறிவியலானது புராதன விஞ்ஞானத்தின் அதிசயமான கலையாகக் (Miraculous art of Ancient Science) காணப்படுகின்றது.

**''எண்பதோரையும் பித்து மியங்கிடிலெட்டு நாளில்**
**வன்பு செய்யாமல் வெப்பு மாறிடு மென்று**
**சொல்வார்**
**நண்புறு வாதமையை நணுகியே பெலத்து நிற்கில்**
**அன்புறு சீவன் போல தண்ணி தென்றருளினாரே'**
**(செகராசசேகரம் -85)**

ஐயநாடியும் அழல் நாடியும் சேர்ந்து இயங்கும் பொழுது வெப்பு என்று சொல்லப்படுகின்ற வெப்பமானது உடலில் தாக்கத்தை ஏற்படுத்தாது. நோய் குணமடையும் வளி நாடியும் ஐய நாடியும் வன்மை உடையதாக இருந்தால் ஏற்பட்ட நோயானது குணமடையும் என்று கூறப்படுகின்றது.

**''அருங்கை கால் குடைந்து மெய்யு மளவினிற்**
**கணக்குமாகில்**
**நெருங்கிய வாதநாடி நிற்பதென்றறியப் பின்னை**
**வருந்து கைப்பிடிக்கிற் காய்ந்து வாத நாடியுமே**
**யாகில்**
**பொருந்திய வெய்ய வெப்புப் போக நாட் செல்லுந்**
**தானே''**
**(செகராசசேகரம் -86)**

கை கால்களில் குடைவது போல உளைவு ஏற்பட்டு உடல் கனதியுடன் வாத நாடி அதிகரித்துக் காணப்படுவதுடன் கை நாடி பிடித்துப் பார்க்கும்போது வறட்சித் தன்மையும் இணைந்து காணப்படும் பொழுது உடலில் ஏற்பட்ட வெப்ப நோயானது குணமடைய நீண்ட நாட்கள் எடுக்கும் என்று கூறப்படுவதைக் காணலாம்.

**''செல்லுமுன்னு தரந்தன்னிற் சென்று தானுயர்ந்து**
**நிற்கில்**
**பல்லுயிர் புகழும் நாடி பணிந்துற நிற்குங் கண்டாய்**
**மெல்லுரு மிளகு தன்னை மிகவுமுட் கொண்டார்**
**நாடி**
**அல்லுறு குழலினாளே அமர்ந்திடு பித்தந்தானே''**
**(செகராசசேகரம்-88)**

வயிற்றில் பித்தமானது அதிகமாகச் செயற்படும் போது பித்த நாடியானது தணிந்து காணப்படும். மிளகு சேர்ந்த மருந்தை உட்கொள்ளும் போது பித்த நாடியானது தன்னிலையை அடைவதைக் காணலாம்.

**''தான் மிகக் குளிர்ச்சி கொள்ளில் தங்கியநாடி ஐயம்**
**ஈன் முகிற் குழலாய் நெய் பால் இறைச்சிண்டினும்**
**வாதம்**
**தீன் மிகக்கவருங் கோழி தின்றவர் நாடி பித்தம்**
**மான நற்கனியும் பிட்டும் அருந்தினும் வாதமாமே''**
**(செகராசசேகரம் 89)**

குளிர்ச்சி அதிகமாகவுள்ள உணவுகளை உட்கொள்ளும் போது குளிர்ச்சியுடன் கபநாடி துடிப்பதைக் காணலாம். நெய், பால், இறைச்சி போன்ற உணவுகளை உட்கொள்ளும் போது நாடிஓட்டத்தில் வாதம் அதிகரித்திருப்பதைக் காணலாம்.

திக உணவை உட்கொள்கின்ற கோழியின் இறைச்சியைச் சாப்பிடும் பொழுது நாடி ஓட்டத்தில் பித்தம் அதிகரிப்பதைக் காணலாம். சிறப்பான பழங்களையும் பிட்டையும் உட்கொள்ளும் போது வாத நாடி ஓட்டத்தைக் காணக்கூடியதாக இருக்கும். இவ்வாறு நோயாளி உட்கொண்ட உணவை நோயாளிடமிருந்து கேட்டு அறியாமல் நோயாளியின் நாடி ஓட்டத் தன்மைகளை வைத்துக் கொண்டு நோயாளி உட்கொண்ட உணவுகளை மருத்துவர் அறியக் கூடியதாக இருக்கும்.

(வளரும்)

டாக்டர் வெற்றிவேல் சக்திவேல்
*B.A.(with English Lit), B.S.M.S, M.A*

---

## சடுதியாக...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்கொலை முயற்சி செய்து தப்பித்தவர்கள் உளவளத்துணை என்பதை ஒரு விசாரணை என்றரீதியிலேயே எதிர்கொள்கின்றனர். அவர்களை உளவளத்துணைக்குரியவராகப் பக்குவப்படுத்துவது என்பது ஒரு சவால்நிறைந்த விடயமாகவே இருக்கின்றது. இதனைச் திறம்படச் செய்ய முடியாவிடில் அவர்கள் அடுத்த அமர்விற்கு, சந்திப்புக்கு வரமாட்டார் என்ற நிலையே காணப்படுகின்றது.

அதுமட்டுமன்றி ஒரு துணைநாடியின் பிரச்சினைக்குரிய காரணம் அவரது சூழலில் காணப்படுகின்றபோது அச்சூழலின் மாற்றம் என்பது எமது எல்லைகளுக்கு அப்பாற் பட்டிருக்கின்ற நிலைமையில் அத்தகைய ஒரு துணைநாடியைக் குணப்படுத்துவது என்பது சவாலாகவே இருக்கின்றது.

நீங்கள் அறிகுறிகளைப் பற்றிக் கேட்டிருந்தீர்கள் எம்மிடம் வரும் பலர் உடல்சார்ந்த முறைப்பாடுகளையே அதிகளவு முன்வைக்கின்றனர். உதாரணமாக தலையிடி, தலையம்மல், நெஞ்சிறுக்கம், கைகால் உளைவு போன்றவற்றைக்குறிப்பிடலாம். அவர்கள் அதனைச் சுற்றியே தமது சிந்தனைகளைக் கட்டமைத்து வைத்துள்ளனர். அதற்கான காரணத்தையும் அவர்கள் உடல்வருத்தம் ஒன்றின் வெளிப்பாடு என்றே கொள்ளுகின்றனர். அதற்கு உளமும் காரணமாகலாம் என்ற அறிவை அவர்கள் பெறுகின்றபோது அதனில் இருந்து விடுபடுவது சாத்தியமானதாக இருக்கின்றது. எனினும் சிலர் உளக்காரணங்கள் என்பதை முற்றாகவே நிராகரித்து விடுகின்றனர். அவர்களுடன் வேலைசெய்வது என்பது மிகவும் சிக்கலான சவாலான ஒரு விடயமாகவே இருக்கும். ஒரு கட்டத்தில் அம்முறைப்பாடுகளுடன் எப்படி இயல்பாக வாழ்வது என்பது பற்றிய சிந்தனையை அவர்களிடத்தில் தூண்டிவிடுவது பயனுள்ளதாக இருந்திருக்கின்றது.

**கேள்வி:- தற்போது யாழ் குடநாட்டில் என்றுமில்லாதவாறு தற்கொலை செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இதற்கான காரணங்கள் மற்றும் தடுப்பதற்குரிய வழிவகைகள் பற்றிக் கூறமுடியுமா?**

**பதில்:-** தற்கொலை செய்வோரின் எண்ணிக்கை அதிகரிப்பதாக ஒரு எண்ணப்பாங்கு நிலவிவருகின்றமை உண்மைதான். எனினும் அது பற்றி யாழ் மாவட்டத்தில் முழுமையான தரவுகளைப் பெற்று ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை என்ற கருத்தும் ஒரு பக்கம் இருக்கின்றது. உளவளத்துணையாளர் என்ற வகையில் நாங்கள் தற்கொலைக்கு முயற்சி செய்து தப்பிய தற்கொலை முயற்சியாளர்களுடனேயே அதிகளவு வேலைசெய்கின்றோம்.

இவ்வருடத்தின் தைமாதம் மட்டுமே மொத்தமாக ஐம்பது தற்கொலை முயற்சியாளர்கள் எமது பிரிவுக்கு வந்து போயுள்ளனர். ஒரு நாளுக்கு இரண்டுபேருக்குக் குறையாத அடிப்படையில் இவர்களது வரவு அமைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவர்களுள் பெரும்பாலானவர்கள் 25 வயதுக்குட்பட்டவர்களாக உள்ளனர். இவர்களின் இந்தத் தற்கொலை முயற்சிக்கான காரணங்களை ஆராய்ந்தால் பெரும்பாலானவர்கள் சடுதியாக ஏற்படும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து அதனை எதிர்கொள்ளும் திறன் இன்மையாலேயே - கையாளும்திறன் இல்லாமையாலேயே உணர்ச்சிவயப்பட்டதொரு நிலையில் மேற்படி முடிவை எடுத்துள்ளமை தெளிவாகின்றது. இவர்களிடத்தில் இம்முயற்சிக்கான காத்திரமான காரணம், நீண்டகாலக் காரணம் இருப்பதில்லை. இவர்களுக்கு பிரச்சினைகளைக் கையாளும் வழிமுறைகளைப்பற்றிய தெளிவையும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்குரிய வழிவகைகளைப்பற்றிய அறிவையும் வழங்கினால் எதிர்காலத்தில் இத்தகைய முயற்சிகளை இயன்றளவு தடுக்கமுடியும்.

எனினும் தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் தாம் ஒளிபரப்புச்செய்யும் நாடகங்களில், திரைப்படங்களில் ஒருவர் தனது பிரச்சினையைத் தீர்க்கும் வழிமுறையாக இன்றுவரை தற்கொலை செய்வதையே காட்சிப்படுத்தி வருகின்றன. இவை எமது விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் தாண்டி இலகுவில் மக்களைச் சென்றடைந்து விடுகின்றன. பத்திரிகைகளைப் பொறுத்தவரையில் தற்கொலை பற்றிய செய்திகளை முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிப்பதன் மூலம் இப்பிரச்சினையின் அதிகரிப்பிற்குத் தங்கள் பங்களிப்பை செய்கின்றன.

எழுத்தில் வாசித்துப் பெற்றுக்கொள்ளும் ஞாபகங்களைவிடக் காட்சிகளாகப் பெற்றுக்கொள்ளும் ஞாபகங்கள் இலகுவில் மனதில் பதிந்து விடுகின்றன என்பார்கள். ஒரு பிரச்சினைவரும் போது இந் ஞாபகங்கள் முன்னுக்கு வந்துவிடுகின்றன. முடிவு விபரீதமாகி விடுகின்றது. எமக்குப் பயிற்சி அளித்த அவுஸ்திரேலிய நாட்டுப் பெண்மணி சொன்னார் தமது நாட்டுப்பத்திரிகைகள் தமது நாட்டில் இடம் பெறும் தற்கொலைச் செயற்பாடுகளை (மற்றவர்களுக்கு இது தூண்டுகோலாக இருக்கும் என்பதால்) முக்கியத்துப்படுத்திப் பிரசுரிப்பதில்லை என்று குறிப்பிட்டார். இது சிந்தனைக்குரியது. நாம் எல்லோரும் பொறுப்புணர்வுடன் செயற்பாட்டால் இவற்றைத் தடுப்பதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்து செவ்வனே செயற்படுத்தி வெற்றி பெற முடியும்.

---

# 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'

**நீரிழிவு நோய் உள்ளவர்கள் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ முடியுமா?**

★ ஆம். சிறந்த குருதிக் குளுக்கோஸ் கட்டுப்பாடு மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைப் பாங்கு என்பவற்றின் மூலம் நீரிழிவு நோய் உள்ளவர்கள் சாதாணரமான ஆரோக்கிய வாழ்வு வாழ முடியும்.

★ ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வதற்கு உணவருந்தாத வேளையில் செய்யப்படுகின்ற குளுக்கோஸ் சோதனை, உணவின் பின்னரான (உணவு உட்கொண்டு 2 மணித்தியாலங்களுக்குப் பின்னர்) குருதிக் குளுக்கோஸ் சோதனை, HbA1c சோதனை போன்றன போதுமானதில்லை.

★ நீரிழிவு நோய் உள்ள ஒவ்வொருவரிலும் சிக்கல் நிலைகளை ஆரம்பத்திலேயே கண்டறிய உதவுகின்ற சோதனைகள் மற்றும் ஆய்வுகூடப் பரிசோதனைகள் போன்றன மேற்கொள்ளப்பட வேண்டும்.

**உதாரணம் - கண் பரிசோதனை**

★ அல்புமின் மற்றும் மைக்கிரோ அல்புமின் ஆகியவற்றைக் கண்டறிய உதவும் சலப் பரிசோதனை

★ குருதி அமுக்க அளவீடு

★ குருதிக் கொலஸ்ரோல் சோதனை

சரியான முறையில் கட்டுப்பாட்டில் வைத்திருக்கப்படாத நீரிழிவு நோயினால் பின்வரும் அங்கங்கள் பாதிக்கப்படலாம்.

★ இதயம் மற்றும் குருதிக் கலன்கள்

★ கண்கள்

★ சிறுநீரகங்கள்

★ மூளை, நரம்புகள்

★ கால்கள்

அங்கவீனம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு பாதிப்புகள் ஆரம்பத்திலேயே கண்டறியப்படவேண்டும்.

**முக்கியமானது**

★ நீரிழிவு நோயுள்ளவர்கள் சிபார்சு செய்யப்பட்ட உணவு மற்றும் சிகிச்சை மூலம் குருதிக் குளுக்கோஸ் அளவினை சாதாரண நிலையில் பேணமுடியும்.

★ குருதிக் குளுக்கோஸ் சாதாரண அளவில் காணபப்டுவது நீரிழிவு நோய் குணமடைந்து விட்டதைக் குறிக்காது.

★ குருதிக் குளுக்கோஸ் அளவு சாதாரண அளவுக்குள் இருந்தாலும் கூட அவர்கள் சிபார்சு செய்யப்பட்ட உணவினையும் சிகிச்சையையும் பின்பற்ற வேண்டும்.

★ வைத்தியரின் ஆலோசனையின்றி நீரிழிவு நோய் சிகிச்சையை நிறுத்துதல் கூடாது.

## குருதிக் குளுக்கோஸ் அளவு குறைவை அறிவது எப்படி?

**1. எனது குருதிக் குளுக்கோஸ் மிகக் குறைவாக செல்லக் கூடுமா?**

ஆம், நீங்கள் உங்களுடைய உணவினை அல்லது சிற்றுண்டியை சரியான வேளையில் எடுக்காதிருந்தால் உங்கள் குருதிக் குளுக்கோஸ் மிகக்குறைந்த நிலையை அடைய முடியும். இது குளுக்கோஸ் குறைவு நிலை (கைபோகிளைசீமியா) என அழைக்கப்படும்.

★ நீங்கள் நீரிழிவைக் கட்டுப்படுத்த இன்சுலின் சிகிச்சை அல்லது சிலவகை மருந்துகள் பாவிப்பவராயின் குளுக்கோஸ் குறைவு நிலை ஏற்படும் வாய்ப்பு உண்டு.

★ நீங்கள் நீரிழிவுக்காக உணவுக் கட்டுப்பாட்டுச் சிகிச்சையை மாத்திரம் கைக்கொள்பவராக இருந்தால் குளுக்கோஸ் குறைவு நிலை ஏற்படும் வாய்ப்பு மிகக்குறைவாகும்.

**2. எனது குருதிக் குளுக்கோஸ் அளவு மிகக்குறைவாக உள்ளதை அறிவது எப்படி?**

★ நீங்கள் அதிக பசி, மயக்கம், நடுக்கம், அதிக வியர்வை சிலவேளைகளில் எரிச்சல் தன்மை அல்லது ஆத்திரப்படுதல் போன்றவற்றை உணரக்கூடும்.

**3. குளுக்கோஸ் குறைவு நிலையை ஏற்படுத்துவது எது?**

நீங்கள் குருதிக் குளுக்கோசைக் கட்டுப்படுத்த இன்சுலின் அல்லது குளிசைகளைப் பயன்படுத்துவராக இருந்தால்,

★ உணவுவேளை அல்லது சிற்றுண்டியை தவற விடுவதன் மூலம் அல்லது வழமையான அளவு உணவை விடக்குறைவாக உட்கொள்வதன் மூலம் குளுக்கோஸ் குறைவு நிலை ஏற்படலாம்.

★ சில வேளைகளில் மேலதிகஉணவு எதனையும் உட்கொள்ளாமல் நீண்டநேரமாக வேலை செய்தல் அல்லது உடற்பயிற்சி செய்தல் உதாரணமாக தோட்டத்தை நீண்டநேரமாகச் சுத்தம் செய்தல் போன்றன குருதிக் குளுக்கோஸ் குறைவு நிலையை ஏற்படுத்தலாம்.

**4. குளுக்கோஸ் குறைவு நிலை ஏற்படின் என்ன செய்யவேண்டும்?**

★ உங்களில் குளுக்கோஸ் குறைவு நிலைக்குரிய அறிகுறிகள் ஏதேனும் ஏற்படின் சிறிதளவு குளுக்கோஸ் அல்லது சீனி சேர்ந்த (1/2 - 1 தேக்கரண்டி) ஒரு கோப்பை தேநீர் அல்லது பழரசம் குடியுங்கள். நேரத்தைக் குறித்து வையுங்கள். உடனடியாக சீனி சேர்க்காத சிற்றுண்டி ஒன்றை உட்கொள்ளுங்கள்.

★ நீங்கள் முதல் நாள் குளுக்கோஸ் குறைவு நிலை ஏற்பட்டவேளைக்கு சற்று முன்னர் சீனி சேர்க்காத ஒரு சிற்றுண்டியை உண்பதன் மூலம் மறுநாளும் இந்நிலை ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

★ உங்கள் வைத்தியருக்கு குளுக்கோஸ் குறைவு நிலை ஏற்பட்ட நேரத்தைத் தெரியப்படுத்துங்கள். நீங்கள் உங்களுடைய இன்சுலின் அளவை அல்லது நீரிழிவு மாத்திரையைக் குறைக்குமாறு வேண்டப்படலாம்.

★ குளுக்கோஸ் குறைவு நிலைக்குரிய அறிகுறிகள் தென்பட்டால் உங்களிடம் குளுக்கோமானி காணப்படின் (குளுக்கோஸ் அல்லது சீனி உள்ளெடுக்க முன்னர்) உங்கள் குருதிக் குளுக்கோஸ் அளவைப் பரிசோதித்து அதனைக்குறித்த திகதி மற்றும் நேரத்துடன் பதிவு செய்து வையுங்கள்.

★ நீங்கள் வாகனம் செலுத்திக் கொண்டிருந்தால் அதனை நிறுத்தி ஒரு சிற்றுண்டியை அல்லது இனிப்பை உள்ளெடுங்கள்.

(தொடரும்)

09



# மாமன்னன் சங்கிலியன்

செங்கை ஆழியான்

''தகுதி உணர்ந்து நேசித்திருக்க வேண்டும் சங்கிலி''

''தகுதியைப் பார்த்தா உண்மைக் காதல் பிறக்கிறது அண்ணா?''

''நமது அரசக்குலப் பெருமை என்னாவது? பரவை இளவரசி.. அவன் மடப்பள்ளியின் மகன்...''

''இதில் ஒன்றும் தவறில்லை. மனமொத்த இருவரைப் பிரிப்பதா?''

''நீ சொல்வதைப் பார்த்தால் இருக்கும் நீயே கட்டி வைத்துவிடுவாய் போல இருக்குது. நான் இதற்கு ஒத்துக் கொள்ள மாட்டேன்.''

''மன்னியுங்கள் அண்ணா.. இது அரசியல் அல்ல. வாழ்க்கை''

பரநிருபசிங்கர் கோபத்துடன் நகர்ந்தார். அதன் பின் பரவை கண்ணீர்விட்டு அழுதாள்.

மாளிகைக்குத் திரும்பி வந்த பரநிருபசிங்கரை அறையில் அலங்கோலமாகக் கிடந்த மனைவி மாலதிதேவி எதிர்பட்டாள். அவள் கோலம் அவரைக் கலக்கியது.

''நீங்கள் துரோகி.. தம்பிக்கு முடியைக் கொடுத்து விட்டீர்கள்..''

''மாலதி, நடந்து முடிந்தவை..''

''காலம் ஒன்றும் கடந்து விடவில்லை. கொடுத்த மகுடத்தை மீளக் கேளுங்கள்''

பரநிருபசிங்கன் திகைத்து விட்டார்.

'மாதவி அவன் சர்வாதிகாரம் கொண்ட மன்னன். முடியைக் கேட்பதா?''

''உங்க' மனைவியை நீங்கள் விரும்புகிறீர்களா?''

''உயிரினும் மேலகா..''

''நான் உயிரேடு இருக்கவேண்டுமாயின் உங்கள் மகன் பரராசசிங்கனை மன்னனாக்குங்கள்...''

ஏழூர் அதிபரின் விழிகள் கலங்கின

''எப்போதாவது ஒரு நாள் மகனை மன்னனாக்குவேன்''

* * *

### சேதுகாவலன்

யாழ்ப்பாண இராச்சியத்துக்கு புதியதொரு மன்னன் கிடைத்து விட்டான் ஆரியச் சக்கரவர்த்திகள் நாடு பேணி, தமிழ் பேணி,கலை பேணி அமர்ந்திருந்த எழில் நந்திச் சிம்மாசனத்தில் சங்கிலி அமர்ந்து ஒரு திங்கள் கழிந்துவிட்டது. நாட்டின் விழாக்கோலம் படிப்படியாக் குறைந்து அரசு வழமைக்குத் திரும்பியது.

இன்று அவன் யாழ்ப்பாண இராச்சியத்தின் முடிபதி. காலை மலர்ந்து வெகு நேரமாகி விட்டது. மஞ்சத்தைவிட்டெழுந்து சாளரத்தை நாடிச் சென்றான் தூரத்தில் அரண்மனை வாசலில் சேதுகவைத் தாங்கிய கொடி பறந்து கொண்டிருந்தது. எல்லாம் கனவு போல... எத்தனை கோடி நினைவுகள்?

காற் சலங்கை ஒலி 'சல்..சல்' 'என எழுந்தது. மெதுவாக மணிக் கதவுகளைத் திறந்து கொண்டு அவனது பட்டமகசி அரசமாதேவி வந்தாள். மன்னன் அசையாது நின்றான்.

''சுவாமி!...''

அழைப்போடு மென் மலர் மொக்கொன்று அவன் தோளில் விழுந்தது. வளையல்கள் சப்தித்தன.

''என்ன அப்படி பலமான யோசனையாம்?''

சங்கிலி திரும்பினான். பனிச்சையாகக்கட்டிய கூந்தலில் தேன் சிந்தும் மலர்கள் குவிந்தும் விரிந்துமிருக்க, பிறை நுதலுக்குக் கீழ் அந்த விற்புருவங்களுக்குக் கீழ் இரு ஏக்க விழிகள் இமைக்க மறந்து தேங்கி நின்றன.

''அரசமாதேவி'' என அழைத்தான்.

''நீ என்ன கேட்டாய்? உன் எழில் தரும் பிரமிப்பில் மறந்து போனேன்..''



''கேலியாக இருக்கிறதா?''

''பட்டத்துமகசியிடம் கேலியா .....? உண்மையாகத் தான் கேட்டேன்''

சங்கிலி மௌனமாக மாளிகை வாசலில் காற்றில் படபடத்துப் பறக்கும் நந்திக் கொடியைப் பார்த்தான்.

''அந்த சேதுக்கொடியில் என்ன இருக்கிறது?''

''எவ்வளவோ இருக்கிறது மாதேவி. எங்கள் சின்னம் நந்தி அதாவது சேது. பட்டயமும் சேது சின்னத்தை கொண்டது. குலச்சின்னம் சேது. எங்கள் நாணயங்களில் சேது என்றே பொறிப்போம். வார்க்கின்ற பொற்காசுகளிலும் செப்புக்காசுகளிலும் சேது எனப் பொறிப்போம். அரசமாதேவி, சேது என்றால் பல அர்த்தம் இருக்கிறது. அணை, எல்லை, கடல் வழிப்பாதை, பாலம் எனப் பலவாறாகும்''

''அதனால் தான் இராமர் கட்டிய பாலத்தை சேது பாலம் என்கினமாக்கும். ராமேஸ்வரதீவையும் சேது என்பார்கள். யாழ்ப்பாண அரசர்களுக்கு இன்னொரு பெயர் சேது காவலன் அல்லவா ...?''

''சரியாகவே சொன்னாய். கோட்டகம கல்வெட்டில் சேது என எம் முன்னோர்கள் பொறித்துள்ளனர். செகராசசேகரமாலையில் 'சேதுகாவலன்' எனக் குறித்துள்ளது. 'உம்பர் வந்திறஞ்சும் சேது உயர்கரைக்காவலன்'எனவும் ஒரு நூல் கூறும். செகராசசேகரை தட்சண கைலாச புராணம் ஒரிடத்தில் 'இடபவான் கொடி எழுதிய பெருமாள்' என்று கூறும். சேது நாணயத்தின் ஒரு பக்கத்தில் சேது என்ற எழுத்தும் மறுபக்கத்தில் குத்துவிளக்கு, மயிலின் தலை திரிசூலம், பிறைச்சந்திரன் என்பன காணப்படும். இன்று இந்த நாணயங்களை வார்க்கும் பொறுப்பை அண்ணர் பரநிருபசிங்கர் ஏற்றுள்ளார். அவருடைய மாளிகையின் நில அறைகள் நாணய வார்ப்பு ஆலைகளாக விளங்கும்'' என்றார்.


அரண்மனை வாயிலூடாக பயண வண்டில் ஒன்று பிரவேசித்தது. அலங்காரமான அந்த வண்டிலை தம்பலகாமத்து எருதுகள் இரண்டு இழுத்து வந்தன. அவற்றின் வாய்களில் நுரை கக்கியதிலிருந்து வெகுதூரத்திலிருந்து புறப்பட்டு வருவது புரிந்தது. அந்த வண்டிலைத் தொடர்ந்து புரவி ஒன்றும் பிரவேசித்தது.

தொடரும்...

# நூல் இரசனைக்குறிப்பு

## ஆறுமுகநாவலர்

எழுத்துருவாக்கம் - பேராசிரியை மனோன்மணி சண்முகதாஸ்




நாவலர் என்றால் நாவன்மை உடையவர் என்பது பொருள். ஆறுமுக நாவலர், சபாபதி நாவலர், அம்பல வாண நாவலர் என எம்சமூகத்தில் நாவன்மையுடைய பலர் பெயர்களைப் பெற்றிருந்தனர். ஆயினும் 'நாவலர்' என்றதும் நாம் முதலிற் சுட்டுவது யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுகநாவலரைத்தான்.

1822 ஆம் ஆண்டு பிறந்த நாவலர் 56 ஆண்டுகள் வாழ்ந்து சமயப்பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி எனப் பல பணிகளை முன்னெடுத்தார். நாவலர் இன்று எம்முடன் இல்லாவிட்டாலும் நாம் நாமாக இருப்பதற்கு நாவலரே காரணம் எனத்துணிந்து கூறலாம்.

இத்தகைய பெருந்தகையது வாழ்வு வளத்தைச் சிறுவர்களும் அறியும் வகையில் 'ஆறுமுகநாவலர்' என்ற நூல் படைத்தளிக்கப்பட்டுள்ளது. கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் நூலின் எழுத்துருவாக்கத்தைச் செய்துள்ளார். கொக்குவில் இந்துக் கல்லூரித் தமிழாசிரியர் எஸ். சந்திர சேகர் ஓவியங்களை வரைந்துள்ளார். இலக்கியன் வெளியீட்டகம் நூலை வெளிக்கொணர்ந்துள்ளது.

'தந்தையோடு கல்வி போம்' என்பது நம்மவர் முதுமொழி. ஆனால் இதனைப் பொய்ப்பித்தவர்களும் இருக்கிறார்கள். இவர்களுள் நாவலர் முதன்மையானவர். ஒன்பதாவது வயதில் தந்தையை இழந்த நிலையிலும் வாழ்க்கையில் நிமிர்ந்தார். எப்படி நிமிர்ந்தார்? என்பதற்கு நூல் விடை தருகிறது.

நாவலரது வாழ்வு நமது தன்னம்பிக் கையைத் தட்டியெழுப்பவல்ல பல செய்திகளைக் கொண்டு வந்தது. இவரது வெற்றிகளுக்குப் பின்னால் இறையாசி, மனவலிமை, ஞாபகத்தி றன் என்பன உள்ளதாகக் கொள்ளலாம்.

நாவலர் எழுதிய 'சந்தியாவந்தனம்' பற்றிய குறிப்புரை அவரது கையெழுத் திலேயே சேர்க்கப்பட்டுள்ளது. நாவல ருடன் தொடர்புடைய பெரியார்கள், நிறுவனங்களது படங்களுக்குச் சந்திர சேகரது கைவண்ணம் உயிர்ப்பூட்டியு ள்ளது. கறுப்பு, கருஞ்சிவப்பு என இரட்டை வண்ணங்களில் ஒவ்வொரு பக்களிலும் படங்களும் பதிவுகளும் அமைந்துள்ளன.

சமயப் பணி என்பது வெறுமனே ஆலயங்களைக் கட்டும் பணி அல்ல. அது சமூகத்தின் உயிர்ப்பை நாடும் உன்னத பணி என்பதைப் பெரியவர்க ளும் உணரக் கூடிய வகையில் நாவல ரின் வாழ்வியல் நம்மைப் போதிக்கி றது. அனைத்துத் தரப்பினரும் வாசிக்க வேண்டிய அழகிய தமிழ்நூல் 'ஆறுமுகநாவலர்'.

- ச.லலீசன்
*விரிவுரையாளர்,*
*கோப்பாய் ஆசிரியர் கலாசாலை*

# உளர் புதினம்

*பிறந்த நாள், திருமண நாள், ஆண்டுத் திவசம், ஆண்டு நினைவு நாள் போன்றவற் றிற்கு பணத்தை வாரியிறைத்து விலாசம் காட்டும் விளம்பரம் காட்டும் பலர் எம் சமூகத்தில் வாழ்கின்றனர்.*

*அவர்கள் மத்தியில் சமூக நோக்குள்ள முன்மாதிரியான சிலரையும் காண்கின் றோம்.*

*தனமும் நல்ல மனம் உள்ள இவர்கள் இத்தகைய தினங்களில் நலிவுற்ற வறிய மக்களின் தேவைகள் சில வற்றை நிறை வேற்றி வைத்து திருப்தி காணுகின்றனர். தையல் இயந்திரம் கொடுத்தல், கிணறு கட்டிக் கொடுத்தல், பாடசாலை மாணவர்க ளுக்கான கற்றல் உபகரணம் கொடுத்தல், பொதுப் பரீட்சைகளில் திறமை காட்டி யோருக்கு புலமைப் பரிசில் அளித்தல், வளங்கள் குறைந்த பாடசாலைகளுக்கு தேவையறிந்து மிக அவசியமான வளங் களைப் பெற்றுக் கொடுத்தல் போன்றவற் றைச் செய்கின்றனர்.*

*இறைவன் இவர்களை ஆசீர்வதித்து மேலும் மேலும் செல்வங்களைக் கொடுப் பார். பண்ணிய புண்ணியம் பயிரில் தெரி யும். ஆடம்பரங்கள், விலாச விளம்பரங்க ளுக்கு செலவழிக்கும் பணத்தில் கால்பங் கையாவது தர்ம காரியங்களுக்குக் கொடுத்துப் பாருங்கள். எத்தனையோ ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்ற முடியும். ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணமுடியும்.*

*அரசாங்கம் செய்ய வேண்டும், அரசசார் பற்ற நிறுவனங்கள் செய்யவேண்டும் என்ற மனப்பாங்கை மாற்ற முடியும். முயன்றால், மனம் வைத்தால் உலகம் எம் கையில்.*

சிவகாமி

# குறுக்கெழுத்துப் போட்டி 69

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | ■ | 05 | 06 | 07 |
| 08 | 09 | 10 | 11 | ■ | 12 | 13 | ■ |
| 14 | ■ | 15 | 16 | 17 | ■ | ■ | 18 |
| 19 | ■ | 20 | ■ | ■ | 21 | 22 | 23 |
| 24 | 25 | ■ | 26 | 27 | 28 | ■ | 29 |
| ■ | 31 | 32 | 32 | ■ | 33 | 34 | ■ |
| 35 | 36 | ■ | 37 | 38 | ■ | ■ | 39 |
| 40 | ■ | 41 | 42 | ■ | 43 | 44 | 45 |

இடமிருந்து வலம்
01. பன்னிரண்டாம் திதி
05. பள்ளிவாசல்
08. வியாபாரி
12. செவி
15. அடவி
21. கிழமை
24. நெருப்பில் வருவது
26. பயம்கொள்
30. இளம் பெண்
33. மலை
37. வணம்
41. துகில்
43. திருடி

மேலிருந்து கீழ்
01. ஆறு சுவையுள் ஒன்று
02. கலைமகள்
03. செய்தி
04. சிறிய
05. பெரிய
06. வஞ்சகம்
18. வேப்பமரம்
21. வள்ளுவர் துணைவி
25. காணிக்கை
26. வைகறை
35. குன்றம் / வேதம்
39. ஏணை

குறுக்கெழுத்துப் போட்டி 67 க்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நா | க | ரீ | க | ம் | ■ | பா | சி |
| க | ■ | ங் | ■ | ■ | தூ | ரி | கை |
| ■ | ஏ | கா | த | சி | ■ | யா | ■ |
| சா | ள | ர | ம் | ■ | ஊ | ர் | தி |
| த | ன | ம் | ■ | க | மை | ■ | ட் |
| ம் | ம் | ■ | பு | றா | ■ | ஆ | டி |
| ■ | ■ | கூ | லி | ■ | நா | ண் | ■ |
| வை | க | றை | ■ | ■ | கு | டி | ல் |

### பாராட்டுப் பெறும் அதிஷ்டசாலிகள்

1. ஜே.யஸ்மிகா
உரும்பிராய் மேற்கு,
சிவகுல வீதி, உரும்பிராய்.
2. வி.விஜயந்தி
அத்தியடி புது வீதி
யாழ்ப்பாணம்.
3. மெ.இங்கிதை
''கிருஷ்ணபதி'' அல்வாய்
வடக்கு, அல்வாய்.

குறுக்கெழுத்துப் போட்டி 69க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக் கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி : குறுக்கெழுத்துப் போட்டி
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.

# இறுதிப்போட்டியில் ஆஸி.யுடன் யார்

முத்தரப்பு ஒருநாள் தொடரின் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவுடன் மோதவுள்ளது இலங்கையா? இந்தியாவா? என்பதை இன்று மெல்போர்னில் நடைபெறவுள்ள அவுஸ்திரேலிய- இலங்கை அணிகளுக்கிடையிலான இறுதி லீக் போட்டியே தீர்மானிக்கவுள்ளது.

எனினும் இறுதிப்போட்டிக்குள் நுழைவதற்கான வாய்ப்புக்கள் இலங்கை அணிக்கே அதிகமாக உள்ளதினால் இத் தொடரில் இலங்கை- அவுஸ்திரேலிய அணிகளே களம் காணும் என்னும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு இன்றைய தொடரின் இறுதி லீக் போட்டியே பதில் கூறவுள்ளது.

இதனிடையே இந்திய அணி தொடரில் தனது 7 லீக் போட்டிகளை விளையாடி முடித்திருந்த வேளையில் புள்ளிப்பட்டியலில் இறுதி இடத்தினையே பெற்றிருந்தது. அதேவேளை ஓட்ட விகிதத்திலும் குறைவாக இருந்ததினால் இறுதிப்போட்டிக்குள் நுழைவதற்கான இந்தியாவின் வாய்ப்பு அரிதாகியது.

இதனால் தொடரில் தனது இறுதி லீக் போட்டியில் போனஸ் புள்ளியுடன் வெற்றி பெற்றால் அந்த வாய்ப்பினை சற்று அதிகரித்துக்கொள்ளலாம் என்ற நிலை உருவானது. இந்நிலையிலேயே இந்திய அணி தனது இறுதி லீ போட்டியில் கடந்த மாதம் 28 ஆம் திகதி இலங்கை அணியை எதிர் கொண்டது.

பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த இந்தப்போட்டியில் இலங்கை அணிக்கு அதிர்ச்சியைக் கொடுத்த இந்திய அணி போனஸ் புள்ளியுடன் வெற்றி பெற்று வாய்ப்பினை நழுவவிடாது பாதுகாத்துள்ளது. தொடரில் இதுவரையில் எந்த் அணியும் பெறாத அதிகூடிய 320 ஓட்ட இலக்கை அப்போட்டியில் பெற்ற இலங்கை அணி இந்திய அணிக்கு 321 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை நிர்ணயித்தது.

தொடரின் ஆரம்பம் முதலே தடுமாற்றத்தை வெளிப்படுத்தி வந்த இந்திய அணிக்கு இந்த இலக்கு சவாலனதாகவே அமையும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் எதிர்பார்ப்புக்கள் அனைத்தையும் பொய்யாக்கிய இந்திய அணி 36.4 ஓவர்களில் இலக்கை துரத்தியடித்து 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. அதிரடியாக ஆடிய விராட் கோஹ்லி ஆட்டமிழப்பின்றி சதம் கடந்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.

இந்த வெற்றியின் மூலம் இந்தியா இறுதிப்போட்டிக்குள் நுழைவதற்கான தனது வாய்ப்பில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இதனால் இலங்கை அணிக்கு இன்றைய போட்டியில் சவால் நிறைந்த போட்டியாக மாறியுள்ளது. தொடரில் இறுதிப்போட்டியில் விளையாடும் வாய்ப்பினை ஏற்கனவே உறுதிப்படுத்தியுள்ள அவுஸ்திரேலியாவுடன் இலங்கை இன்று இறுதி லீக் போட்டியில் மோதுகின்றது.




அவுஸ்திரேலிய அணி தன் சொந்த மண்ணில் கிண்ணத்தை கைப்பற்றும் முனைப்புடனே தொடரில் குதித்துள்ளதினை அதன் முதலாவது லீக் போட்டியில் நன்கு அறிந்துகொள்ள முடிந்தது. பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் கடந்த பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமான இத் தொடரின் முதல் போட்டியில் அவுஸ்திரேலிய அணி இந்திய அணியை சந்தித்தது.

இதில் எந்த அணி முதல் வெற்றியைப்பெறும் என எதிர்பார்ப்புகள் அதிகரித்துக்கொண்டிருக்கையில் இலகு வெற்றியைப் பெற்ற அவுஸ்திரேலிய அணி, 10 ஆவது உலகக்கிண்ணத் தொடரின் காலிறுதியில் இந்தியாவிடம் பெற்ற தோல்விக்கு பதில் கொடுத்தது. கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரின் பின்னர் இவ்விரு அணிகளும் சந்தித்த முதலாவது ஒருநாள் போட்டி இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வெற்றியின் உத்வேகத்துடன் தனது 2 ஆவது லீக் போட்டியில் இலங்கை அணியை எதிர்கொண்ட அவுஸ்திரேலியா அதிலும் வெற்றி பெற்றுது. எனினும் இலங்கை, இந்திய அணிகள் ஆஸி. அணிக்கு பதில் கூறத்தவறவில்லை. லீக்கில் 2 ஆவது முறையாக சந்தித்த போது இரு அணிகளும் அவுஸ்திரேலியாவுக்கு அதிர்ச்சியைக் கொடுத்து வெற்றியைப் பெற்றன.

பின்னர் இலங்கையிடம் மீண்டும் தோல்வியைச் சந்தித்தது. அத்தோடு இந்தியாவை இருதடை விழ்த்திய அவுஸ்திரேலியா புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடித்து இறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பினை உறுதிப்படுத்தியுள்ளது.

இதனால் இன்றைய போட்டி அவுஸ்திரேலிய அணிக்கு முக்கியமான போட்டியாக அமைந்திராது. எனினும் இத்தொடரில் இலங்கை அணியிடம் இறுதியாக அடைந்த இரு தோல்விகளுக்கும் இதில் பழி தீர்க்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை மறுமுனையில் இப்போட்டியில் வெற்றி பெறுவதற்கு இலங்கை அணி இறுதிவரை போராடும் என்பது மறுப்பதற்கில்லை. தொடரில் இறுதியாக இந்திய அணியிடன் தோல்வியுறுவதற்கு முன்னர் தொடர்ச்சியாக 3 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது. அதேபோல் இறுதி போட்டியில் இந்திய அணிடம் தோல்வியுற்றாலும் அப்போட்டியில் மிகப்பெரிய ஓட்டப்



இலக்கையே பெற்றுள்ளது. இதனால் இன்றைய போட்டியிலும் அவுஸ்திரேலிய அணிக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் என்பது மறுப்பதற்கில்லை.

## கிடைக்குமா இந்தியாவுக்கு வாய்ப்பு

எது எவ்வாறு இருப்பினும் இன்றைய போட்டியின் முடிவு இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலிய அணியுடன் மோதப்போவது இலங்கை அணியா, இந்திய அணியா என்பதை உறுதிப்படுத்தும்.

ப. சுகிர்தன்







## இலங்கை-அவுஸ்திரேலியா இறுதி லீக்கில் இன்று மோதல்

# யாழ் விளையாட்டு செய்திகள்

## டாக்டர் பிலிப் ஞாபகார்த்த கிண்ணத்தை வென்றது யாழ். பல்கலைக்கழக அணி

அச்சுவேலி,

டாக்டர் பிலிப் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்கள் இடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி வெற்றி பெற்று பிலிப் ஞாபகார்த்தக் கிண்ணத்தை வென்றது.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டாக்டர் பிலிப்பின் ஞாபகார்த்தமாக வருடாந்தம் யாழ். உதைபந்தாட்ட லீக் டாக்டர் பிலிப் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியை அங்கத்துவக் கழகங்கள் இடையே நடத்திவருகின்றது. இந்த வருடம் நடத்திய சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியும் மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதிக் கொண்டன.

முதலாவது பாதி ஆட்டத்தில் இறுதி வேளையில் யாழ். பல்கலைக்கழக அணி ஒரு கோலைப் போட்டது. அதேபோன்று இரண்டாவது பாதி ஆட்டத்தின்போது மயிலங்காடு ஞானமுருகன் அணியும் இறுதி வேளையில் ஒருகோலைப் போட்டது. இந்த நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் யாழ். பல்கலைக்கழக அணி 03:01 என்ற கோல் கணக்கில் மயிலங்காடு அணியை வெற்றி கொண்டு பிலிப் ஞாபகார்த்தக் கிண்ணத்தை பெற்றுக் கொண்டது. போட்டியில் ஆட்ட நாயகனாக யாழ். பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த பிரணவரூபனும் மயிலங்காடு ஞானமுருகன் அணியைச்சேர்ந்த சயந்தனும் தெரிவு செய்யப்பட்டனர். சிறந்த கோல் போடும் வீரனாக மயிலங்காடு ஞானமுருகன் அணியைச் சேர்ந்த சிமித்தும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதன் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பிலிப் நேசிங் ஹோம் மற்றும் சன்றைஸ் வைத்திய நிலையங்களின் பணிப்பாளர் டாக்டர் எஸ். வேணுகாந்தன் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார்.

## கொக்குவில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிகளின் கிரிக்கெட் போர் இன்று கோலாகலமாக ஆரம்பம்





உடுவில்,

யாழ் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்று வரும் பெரும் துடுப்பாட்டப் போட்டிகளின் வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை இந்துக்களின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொக்குவில் இதுக் கல்லூரிக்கும் இடையேயான கிரிக்கெட் போட்டி ஆரம்பமாகின்றது.

இன்று ஆரம்பமாகும் இந்துக்களின் துடுப்பாட்டப் போட்டியில் வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றுவதில் இரு அணிகளும் பெரும் ஆர்வத்துடன் இருப்பதுடன் இதற்கான ஆயத்த முயற்சிகளையும் பயிற்சிகளையும் இரு அணிகளும் மேற்கொண்டுள்ளன.

கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பமாகிய இந்துக்களின் போரில் இரு அணிகளும் முதல் மூன்று போட்டிகளையும் சம நிலைப்படுத்திய போதிலும் கடந்தாண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற நான்காவது போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி வெற்றிபெற்று முதலாவது வெற்றி பெற்ற அணி என்ற சாதனையைப் பதிவு செய்தது.

இந்நிலையில் இந்தாண்டு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறும் இப் போட்டியில் தமது மைதானத்தில் இழந்த வெற்றியை மீண்டும் கைப்பற்ற வேண்டும் என்ற துடிப்புடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி களமிறங்குகின்றது.

இதே வேளை கொக்குவில் இந்துக் கல்லூரியும் வெற்றியை மீண்டும் தொடர்கதையாக்க வேண்டும் என்ற துடிப்புடன் களமிறங்குகின்றது. இரு அணிகளின் ஆதரவாளர்களும் மற்றும் ரசிகர்களும் இந்தப் போட்டி தமக்கு பெரும் விருந்து படைக்கும் என்ற எதிர் பார்ப்புடன் காணப்படுகின்றனர். அதேவேளை இரு அணிகளிலும் பல களம் கண்ட துடுப்பாட்ட வீரர்கள் பந்து வீச்சாளர்கள் களத் தடுப்பாளர்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தாண்டு இடம் பெற்ற போட்டிகளில் குறிப்பாக கொக்குவில் இந்துக் கல்லூரி குறிப்பிடத்தக்க பெறுபேறுகளை பெற்றுள்ள போதிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் தம்முடன் மோதிய அணிகளை வெற்றி கொள்ளத் தவறவில்லை.

இந்நிலையில் வெற்றி வாய்ப்பை எந்த அணி கொண்டு இருக்கின்றது என்பதை எதிர்வு கூற முடியாத நிலையில் காணப்படுகின்றது.





49 ஆவது தேசிய சிரேஷ்ட மட்ட கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டிய வடமாகாண ஆண், பெண் அணியினர் ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறியினால் கௌரவிக்கப்பட்ட பின்னர் எடுத்துக்கொண்ட புகைப்படங்கள்.

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday march 02, 2012